www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

Registered as a News Paper in Sri Lanka
දිනමුරසු වාරමලර්
பக்கம் 20
ஜூலை.09-15,1995
ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 109

## புலிகளை நோக்கி நீளும் இரகசியக் கரங்கள்!

## பலித்துவரும் அரசின் திட்டங்கள்!



அழகி ஐஸ்வர்யா - நினைத்தது வேறு நடந்தது ஒன்று

இதயம் கவர் இலக்கிய நயம்

முக்காபலா சினிவிசிட்

## துணிகரமான விமானக் கடத்தல்!

கூடு - சுவை - சுவாரசியம் அது தான் தினமுரசு

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

## நடவடிக்கைதான் தேவை

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

கல்வி கண் போன்றது.
கல்வியறிவு பெறும் வசதியை
எல்லோருக்கும் பொதுவாக்கத்தான்
இலவசக் கல்வி முறை
இங்கே நடைமுறையில் இருக்கிறது.

இலவசக் கல்வி முறை என்று
சொல்லப்பட்டாலும் கூட
சில குறைபாடுகளும் இன்னமும் இருக்கின்றன.
ஆனால் அந்தக் குறைபாடுகள் அல்ல,
இப்போது சொல்லப் போகும் பிரச்சனை.

இலவசக் கல்விதானே
எவர் வேண்டுமானாலும் எவருக்கும்
கற்றுக் கொடுக்கலாம்- முடிந்தால்
கற்றுக் கொள்ளட்டும் என்று
பொறுப்புள்ள சிலரே நினைக்கலாமா?
அதெப்படி நினைக்கலாம்?
என்று நீங்கள் ஆச்சரியப்படக் கூடாது.

நம் நாட்டில் ஆச்சரியங்களுக்கு
எப்போதுமே பஞ்சமில்லை.
அத்தியாவசியமான செயற்பாடுகளுக்கு
பற்றாக்குறை நிலவினாலும் கூட
அனாவசியமான செயற்பாடுகள் மூலம்
ஆச்சரியங்களை விளைவிப்பதற்கு
பொறுப்புள்ளவர்களே விதைபோடுவதுதானே
நம் நாட்டின் துரதிஷ்டம்!

அப்படி ஒரு ஆச்சரியத்தை
ஊவா மாகாண கல்வி அமைச்சு
அட்டகாசமாக அரங்கேற்றியிருக்கிறது.

'ஊவா மாகாண தமிழ் பாடசாலைகளுக்கு
சிங்கள ஆசிரியர்கள் நியமனம்?'
செய்தி ஆச்சரியம்!
அந்த செயற்பாடு விபரீதம்!!

பிணைப்பு வேறு-திணிப்பு வேறு.
இன ஒற்றுமை மூலம்
மக்களை புரிந்துணர்வால் பிணைத்து வைக்கலாம்.
அந்த ஒற்றுமையின் பேரால்
இன ஆதிக்கம் திணிக்கப்படக் கூடாது.

தமிழ் பேசும் மாணவர்களுக்கு
அந்த மொழி பேசும் ஆசிரியர்கள்தான்
கற்றுக் கொடுக்க முடியும்.
ஏனெனில், கல்வி இங்கே-
தாய்மொழியில்தான் ஊட்டப்படுகிறது.

சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டால்
மாணவர்கள் தான் அவர்களுக்கு
தமிழ் கற்றுக் கொடுக்க வேண்டிவரும்

ஊவா மாகாண கல்வி அமைச்சு
மாணவர்களை ஆசிரியர் தொழிலுக்கு
உடனடியாக ஆயத்தம் செய்ய
ஆசைப்படுகிறதோ தெரியவில்லை.

இல்லாவிட்டால் தவிர்க்க முடியாது
என்ற நிலையில்
தமிழ் பேசும் மாணவர்கள்
சிங்கள மொழியில் பயிலட்டும்
என்று புத்திசாலித்தனமான திணிப்பு
முயற்சியில் இறங்க நினைத்திருக்கலாம்!

விஷயமறிந்து பெற்றோர் கொதித்துப் போனார்கள்.
செய்தியறிந்தோர் திகைத்துப் போனார்கள்.
யாருடைய தவறு இது?
சாதாரணத் தவறாக நினைக்க முடியவில்லை!

நாட்டில் இனப்பிரச்சனை
இத்தனை தீவிரமாய் எரியும் போதும்
நெருப்புக்கு நெய்வார்க்கும்
பொறுப்பற்ற செயலில் ஈடுபடுவோர்
பொறுப்புக்களில் இருந்து கொண்டிருக்கிறார்கள்.
உரியவர்கள் தட்டிக் கேட்க வேண்டும்!

மலையக தமிழ் பேசும் மக்கள்
கல்வி வாய்ப்பில், வசதிகளில்
வெகுதூரம் பின்னால் நிற்கிறார்கள்.
அவர்களை வெளிச்சத்திற்கு
கொண்டுவர வேண்டியது
அவர்களின் வாக்குகளால் அரசியலில்
உச்சாணிக் கொம்பில் இருப்பவர்களின்
மிக முக்கிய பொறுப்பல்லவா?


மிக முதலில் ஊவா மாகாண
கல்வியமைச்சின் துடுக்குத்தனத்தை
ஒட்ட நறுக்குமளவுக்கு
மலையக தமிழ் பேசும் அரசியல்வாதிகள்
தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.
தவறு என்று சொன்னால் - அதை நம்பி
"அப்படியா?" என்று ஆறுதல்படும்
விடயமல்ல இது!

தெரிந்தே செய்திருக்கிறார்கள்!
திட்டமிட்டே திணித்திருக்கிறார்கள்!!
எனவே-சம்பந்தப்பட்ட விடயத்தில்
தீர்வு பெறுவதோடு
திருப்திப்பட முடியாது.

நாளையும் அப்படியொரு துணிச்சல்
வேறொரு மாகாணத்தில் வராதவகையில்
சம்பந்தப்பட்டவர்கள் மீது
தகுந்த நடவடிக்கைதான் அவசியம்.
□□
மீண்டும் மறு மடலில்
வந்து கலக்கும் வரை.

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

# ஆன்மீகம்



## தாழ்த்துபவன் உயர்த்தப்படுவான்

மனிதனுக்கு இருக்க வேண்டிய இன்றியமையாத பண்புகளில் ஒன்று தாழ்மை. ஆனால் உலகில் தன்னைத் தானே மேன்மை பாராட்டுபவர்களையே அதிகம் காண முடிகிறது.

இவ்வுலகத்தில் மனிதன் மேன்மை பாராட்டிக்கொள்ள அவனுக்குச் சொந்தமானது என அவன் கருதும் எதுவும் அவனுக்குச் சொந்தமானதல்ல.

இதை விட்டு விட்டு, தன்னைத் தானே மேன்மை பாராட்டினால், அதனால் ஏற்படும் அகந்தை அவனை அழித்து விடும்.

'சிறு பிள்ளையைப் போலத் தன்னைத் தாழ்த்துகிறவன் எவனோ, அவன் பரலோக ராஜ்ஜியத்தில் பெரியவனாய் இருப்பான்' என்கிறார் இயேசுகிறிஸ்து.

இப்படிச் சொன்ன இயேசு கிறிஸ்து இதன்படியே வாழ்ந்து காட்டினார். தேவகுமாரனாக இருந்த போதிலும் அவர் மேன்மை பாராட்டிக் கொள்ள வில்லை. மாறாக தன்னைத் தாழ்த்தி கீழ்ப்படிவுள்ளவராக வாழ்ந்தார்.

அப்படி அவர் தம்மைத் தாமே தாழ்த்தியதால் மரணத்திற்குப்பின்னும் உயிர்த்தெழுந்து, மீண்டும் கடவுளின் வலது பக்கத்தில் வீற்றிருக்கும் பேறு பெற்றார்!

'தன்னைத் தானே தாழ்த்துபவன் உயர்த்தப்படுவான்'

ஜி.டானியல்-நீர்கொழும்பு.

## நியாயத் தீர்ப்பு நாள் எப்போது?

ஒரு நாள் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒரு ஸஹாபி வந்து நியாயத்தீர்ப்பு (கியாகமத்) நாள் எப்போது வரும் என வினவினார்.

இதைக் கேட்ட அண்ணல் அவர்கள் அந்த ஸஹாபியைப் பார்த்து "அந் நாளில் உமக்காக உதவும்படி நீர் தயாரித்து வைத்திருப்பதென்ன? எதற்காக அத் தினத்தை எதிர்பார்க்கிறீர்?" என்றார்கள்.

அதற்கவர் "தான் தொழுகை, நோன்பு, தானதருமம் முதலியவைகளை அதிகமாகச் செய்து கொள்ளவில்லை. ஆயினும் அல்லாஹ்வையும் அவனது தூதராகிய தங்களையும் நம்பிக்கை கொண்டு உள்ளன்பு வைத்துள்ளேன் அதனால்தான் கேட்கிறேன்" என்றார்.

"அப்படியாயின் ஒருவர் இவ்வுலகில் பிரியம் வைத்திருந்த வஸ்துவுடனேயே நியாயத் தீர்ப்பு நாளன்று எழுப்பப்படுவார்.

இவ்வுலகில் எவரை நீங்கள் நேசித்தீர்களோ அவர்களுடனேயே மறுவுலகிலும் இருந்து வருவீர்கள்" எனக் கூறினார்கள் எம் பெருமானார் (ஸல்) அவர்கள்.

எம்.சி.கலீல்-கல்முனை -05

## கவிதைப்போட்டி இல-106

### பரிசுக்குரிய கவிதை

### சுடுகின்ற தோட்டா.

நடு வீதி தனிலமர்ந்து
படுகொலையைப் பார்த்து நொந்து
கொடுமைகளின் வேதனையால்
ஒடுங்கி அழும் பாலகனை
சுடுகின்ற தோட்டாக்கள்
தொட்டணைக்கப் போகுதம்மா

முஸ்தபா சித்தி றசீதிதா-ஏறாவூர்-01.

## இடமுள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்கவைத்த கவிதைகள்

### பிறக்காதே

பிறந்தாலும் போர் மண்ணில்
பிறக்க வேண்டாம்-மனிதன்
வறுமையிலும் வதைபட்டு(ச்)
சாகவேண்டாம்.

ச.மகாலிங்கம்-வெளிமடை.

### தவிப்பு..!

போர்ப்புயலில்
பெற்றோரை,
தொலைத்துவிட்ட
சேயொன்று,
தலைவிதியை
நொந்தபடி,
தவிக்கிறது
தெருவினிலே.

பூ.இதயரத்தினம்-ஆரையம்பதி-03

### என்னையா அடிப்பது..?

ஐயோ..
எனக்கொன்றும் தெரியாது.
எனையீன்ற பெற்றோரும்
என்றோ மாண்டனர்..
இயலா தனத்திற்கு
என்னையா அடிப்பது...?

பொகவந்தலாவ எஸ்.கோடீஸ்வரன்



### மலிவான பொருள்

கலியுகத்தின் காலனவன்
கணனெதிரே வந்ததனால்
வலிதாங்கமுடியாமல்
வண்ணமலர் ஓலமிட
பலி கொள்ளும் பண்பினரே!
பாலகரும் பகடைகளா?
மலிவான மட்பாண்டம்
மண்ணுலகில் மனிதவுயிர்

மா.சபாபதி-மண்டூர்.

### நாளைய உலகம்

வரப்போகும் காலமதில்
வையத்தோர் நிலையதனை.
சரியாகச் சொல்ல வந்த
சான்றோ இச்சிறு மதலை.

ஆர்.சிவசாமி-திருக்கோணமலை.

### ஆவதென்ன?

விருட்சங்களே சாய்ந்து விட்ட
போர் மண்ணில்
நீ அழுது ஆவதென்ன
புது மலரே

சி.இலங்கேஸ்வரன்-கொலன்னாவ

### மாழுவதோ?

போர் முனையில் உயிரிழந்த
போர் வீரர் உடலமதை
ஊர் மனைக்குக் கொண்டுவர
இனவாதக் 'காலி'களின்
இரக்கமற்ற தாக்குதலால்
இச்சிறுமி மாழுவதோ?

சி.வி.பி.மாணிக்கம்
சாகாமம்-தம்பிலுவில்.

### திருப்பார்வை கிட்டுமா?

அன்றழுத குழந்தைக்கு
ஞானப்பால் ஊட்டினாய்-அம்மையே!
இன்றழும் குழந்தைக்குன்
திருப்பார்வை கிட்டாதோ!

எஸ்.திலகவதி-பதுளை.

### சிதையேறும் தருமம்

வரம் வாங்கி வந்த வன்முறைப் புயலால்
தெருவோரம் வீழ்ந்து தவிக்குதே மலரும்
அரும்பான வேளை அனாதைப் பட்டம்
தருமம் சிதையேறும் தருணமிக் கட்டம்.

சோ.அருளானந்தம்-மட்/கல்லடி.

### ஏன் இந்த உயிர்

கருவறைக்குள் இருந்தபோது
காலுதைத்த பாவத்திற்கா
நிலமதனில் மீதமானேன்
நிம்மதியாய் நானும் போக
நீ இருந்தால் இறைவா
ஒரு ரவை பொழியாயோ

அன்னாமலை அம்பிகா-மட்டக்களப்பு.

## கவிதைப் போட்டி இல-109



### கவனியுங்கள்

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல் தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 15.07.1995

-முகவரி-
கவிதைப் போட்டி இல: 109
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772,
கொழும்பு.

## வாசகச்சாலை

1915ம் ஆண்டு முஸ்லிம்கள் தாக்குதலுக்கு உள்ளானதையும், 1995ம் ஆண்டு தமிழர்கள் தாக்குதலுக்கு உள்ளானதையும் இராஜதந்திரி மிகவும் சிறப்பான முறையில் தகுந்த காலத்திற்கு ஏற்ற கட்டுரை மூலம் விளக்கியிருந்தது. பாராட்டத்தக்கது. இன்றைய காலகட்டதில் அரசியல் விமர்சனத்துக்கு தினமுரசுக்கு நிகர் தினமுரசே!

மகேஸ்வரி ராமதாஸ்-வத்தேகம.

தங்களின் முரசு வாசகர்களில் நானும் ஒருவன். முரசில் வரும் ஆக்கங்கள் குறிப்பாய் "எக்ஸ்ரே ரிப்போட்", "துரையப்பா முதல் காமினிவரை" போன்றவை பல உண்மைகளை வெளிப்படுத்துகின்றன. இந்த முறையில் முரசின் சகல ஆக்கங்களும் என்னை மிகவும் கவர்ந்தவை.

இணுவில் முகுந்தன்-குவைத்.

அன்புடன் தினமுரசுக்கு,

அலைகடல் தாண்டி இருக்கும் நாங்கள் நாட்டின் அன்றாடப் பிரச்சனைகளை அறியமுடியாமல் அவதியுற்றிருந்தோம். அத்தனையையும் திரட்டி வார இறுதியில் வெளியிடும் தினமுரசுக்கு எனது நண்பர்கள் சார்பாகவும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ரி.அழகேஷ்-சுவிஸ்.

வாரம் ஒரு முறை செந்தமிழில் சிங்க நடை போடுகின்றாய். நீ பொங்கித் தரும் தேன் கிண்ணம், ரசிகனின் இலக்கிய நயம், தாய் தொடர், சிறுகதைகள், அரசியல் அலசல், எக்ஸ்ரே ரிப்போர்ட், சினி விசிட், கவிதைப் போட்டி, தகவல் பெட்டி உட்பட அத்தனை அம்சங்களும் என்னை அசத்துகின்றன. பேனா நண்பர் பகுதி மட்டும் வரவர குறைந்து கொண்டே போகுது.

உமர் ஹத்தாப் -வத்தளை

சிந்தைக்கினிய சிறப்பான அம்சங்களை சிங்காரமாய் தரும் தினமுரசே!

கடந்த வாரம் நீ சுமந்து வந்த அனைத்து அம்சங்களும் தெவிட்டாத தேனாய் இனித்தன. சிறுகதைகள், தொடர்கதைகள் அற்புதம்; வியப்பூட்டும் செய்திகள்; சோகமான இதயத்துக்கு இதமளிக்கும் கவிதைகள்; சினிமா செய்திகள் வெகு ஜோர். உன் வரவுக்கு பல கோடி வாழ்த்துக்கள் முரசே.....உன் வருகையால் மலரட்டும் எம் உள்ளம்.

செல்வராணி சுப்பிரமணியம்-கொட்டகலை.

ராஜேந்திரகுமாரின் புதிய தொடர் வாரா வாரம் எம்மை அசத்துகின்றது. முரசே! உனக்கு என் வாழ்த்துக்கள் கோடி.

செல்வி. பர்ஸானா ராஸிக்-அக்குறணை.

அன்பின் தினமுரசே! இந்தப் பாலைவனத்தில் கடமையாற்றும் இலங்கை மக்கள் அனைவருக்கும் எங்கள் நாட்டில் நடக்கும் செய்திகளை அள்ளித் தருகின்றாய். உன்னை ஒரு வாரம் சரி படிக்கத் தவறியது கிடையாது.

ச.தமிழ்ச் செல்வி-குவைத்



உலகமெலாம் உன்புகழ்
உவப்புடனே பல்கி
இதயங்களுக்காய்
இனிய துளி செந்தமிழை
திசை எங்கும் மணம் பரப்பி
தித்திக்க வைத்திடும் முரசே.
உன் சேவை தொடரட்டும்
உன் புகழ் ஓங்கட்டும்.

நடேசன் பாஸ்கரமூர்த்தி-நானுஓயா




அன்பின் தினமுரேச!

நீ வாரா வாரம் சமந்து வரும் அனைத்து அம்சங்களும் மனதைக் கவர்கின்றன. உன் அரசியல் தொடர் பிரமாதம்.

லியோனா-கொழும்பு 02.

"சீதையும் சீர்வரிசையும்" சிறு கதையில் ஸ்ருதி இறுதியில் எடுத்த முடிவு ப்ரவீன்னைப் போன்ற ஆண்களுக்கு நல்லதோர் சாட்டையடி. வாழ்க ஸ்ருதி!

கல்லடி மூர்த்தி-மட்டக்களப்பு.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# "யாழ் நகரை கைப்பற்றும் திட்டம் தோல்வி"

# மண்டைதீவுத் தாக்குதல் குறித்து புலிகள் கருத்து!

## 'பாதுகாப்பு ஆலோசனைசபை'யால் பயனில்லையாம்!

**மண்டைதீவுத் தாக்குதலையடுத்து யாழ் குடாநாட்டில் புலிகளின் போர்க்கால பிரசாரங்கள் சூடுபிடித்திருக்கின்றன. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் அரசின் திட்டம் தோல்வியடைந்துள்ளது என்று யாழ்பாணத்தில் புலிகள் அறிவித்துள்ளனர்.**

(நமது விசேட நிருபர்)

### "திட்டம் தோல்வி"

மண்டைதீவுத் தாக்குதலை அடுத்து யாழ்ப்பாணத்தில் புலிகள் வெளியிட்டுள்ள அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் பாரிய முயற்சியில் சிறீலங்கா படைகள் ஈடுபட்டுள்ள வேளையில் மண்டைதீவுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத் தாக்குதலில் படைகளுக்கு பேரிழப்பு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து யாழ்ப் பாணத்தைக் கைப்பற்றுவதற்கு அமைச்சர் ரத்வத்த தீட்டியிருந்த திட்டமும் தோல்வி யடைந்துள்ளது.

சுமார் 7 மணித்தியாலங்கள் மண்டை தீவைப் புலிகள் கட்டுப்பாட்டில் வைத்திருந் தனர். நான்கு பிரிவுகளாக புலிகள் மண்டை தீவுக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்தினார்கள்.

மண்டைதீவு இறங்குதுறையை முதலில் புலிகள் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தார்கள். அதன்பின்னரே முகாம்மீதான தாக்குதல் ஆரம்பித்தது.

இவ்வாறு புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்குதலில் புலிகளின் தரப்பில் உடனடியாக எட்டுப் பேர் பலியானதாக தெரிவிக்கப்பட்டது. தாக்குதலின் போது காயமடைந்த புலி ஒருவர் அதன் பின்னர் பலியானதையடுத்து மொத்தம் 9 பேர் புலிகள் தரப்பில் பலியானதாக தெரிவிக்கப்பட்டது.

மட்டக்களப்பைச் சேர்ந்த லெப்ரினன்ட் காந்தன் என்று அழைக்கப்படும் நல்லதம்பி சிவசுப்பிரமணியம் என்பவரே காயமடைந்த நிலையில் 30.06.95 அன்று மரணமான வராவார்.

### புலிகளுக்கு இழப்பு

மண்டைதீவுத் தாக்குதலில் புலிகளின் தரப்பில் முக்கிய தாக்குதல் பிரிவுத் தலை வரான லெப்ரினன்ட் கேணல் சூட்டியே தாக்குதலுக்கு தலைமை தாங்கிச் சென்றிருந் தார்.

தாக்குதலின் போது அவர் பலியானது புலிகள் தரப்பில் ஏற்பட்ட பேரிழப்பாகும். லெப்ரினன்ட் கேணல் என்பது புலிகள் அமைப்பில் நீண்டகால அனுபவமுள்ள உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் பதவி யாகும். தளபதிகளாக இருப்பவர்களுக்கே புலிகள் அப்பதவியை வழங்குவது வழக்க மாகும்.

யாழ் மாவட்ட முன்னாள் தளபதி கிட்டு வுக்கும் லெப்ரினன்ட் கேணல் பதவியே வழங்கப்பட்டிருந்தது. அவர் இறந்த பின்னர் கேணல் பதவி வழங்கி கௌரவிக்கப் பட்டது.

மண்டைதீவுத் தாக்குதலில் தமது பெண் கள் படைப்பிரிவும் பங்கு கொண்டது என்றும் புலிகள் தெரிவித்துள்ளனர். வாசுகி என்றழைக்கப்படும் யாழ்ப்பாணம் புத்தூரைச் சேர்ந்த சின்னவன் பரமேஸ்வரி என்னும் பெண்புலியே மண்டைதீவு மோதலில் பலியா னார்.

மண்டைதீவு தாக்குதலையடுத்து புலிகள் போர்க்கால பிரசாரங்களை தீவிரப்படுத்தி யுள்ளனர்.

### ஆலோசனைச் சபை

யுத்தத்தில் நம்பிக்கையூட்டும் விதமான பிரசாரங்கள் விரிவாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மண்டைதீவில் கைப்பற்றிய ஆயுதங்கள் புலிகளால் தமது ஆதரவாளர்களுக்கு காண் பிக்கப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகை தனது ஆசிரியர் தலையங்கத்தில் பின்வருமாறு தெரிவித் துள்ளது.

"ஓய்வு பெற்ற படை அதிகாரிகளை வைத்து 'ஆலோசனை சபை' ஒன்றை அரசு உருவாக்கியுள்ளது. பாதுகாப்புப் படை நடவடிக்கைகளுக்கு ஆலோசனை சொல்லவே அந்தச் சபை உருவாக்கப் பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளின் போர்த்திறனும், உயிர் அர்ப்பணிப்பும் உள்ள வரை சிறீலங்கா படைகள் எந்தச் சபையின் ஆலோசனைப்படி போராடினாலும் புலிகளை வெல்வது கடினமான காரியம்."

என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டைதீவுத் தாக்குதலை அடுத்து யாழ் குடாநாட்டில் புலிகள் அமைப்பினரின் ஆட்திரட்டல் நடவடிக்கைகள் சுறுசுறுப் படைந்துள்ளன. புதிய உறுப்பினர்கள் சேர்ந்து வருகின்றனர்.

கடந்த வாரம் மட்டும் நூற்றுக்கு மேற்பட்ட புதிய உறுப்பினர்கள் திரட்டப்பட் டுள்ளதாக யாழ்ப்பாணத்திலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# 2000 ஆசிரியர்கள் உடனே தேவை!

## மலையக தமிழ் பேசும் மாணவர் அவதி!

(கண்டி நிருபர்)

மத்திய மாகாணத்தில் இயங்கும் தமிழ்ப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறையி னால் மாணவர்கள் வெகுவாகப் பாதிக்கப் பட்டுள்ளனர்.

429 தமிழ் பாடசாலைகளும் 105 முஸ்லிம் பாடசாலைகளும் கண்டி, நுவரெலியா, மாத்தளை ஆகிய மாவட்டங்களில் இயங்கி வருகின்றன.

இவற்றில் நுவரெலியா மாவட்டத் திலேயே ஆகக் கூடிய ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது. அந்த மாவட்டத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை 870 ஆகும்.

இதே வேளையில் சகல தமிழ் மொழி மூலப் பாடசாலைகளிலும் ஒட்டு மொத்தமாக சுமார் 2000 ஆசிரியர்களுக்கு ஆசிரியர் பற்றாக் குறை நிலவுகின்றது.

ஆரம்ப பிரிவுக்கு 600 ஆசிரியர்களும் கணிதம், விஞ்ஞானம் ஆகியவற்றுக்கு 250 ஆசிரியர்களும் ஆங்கில மொழிக்கு 125 ஆசிரியர்களும் இவ்வாறு தேவைப்படு கின்றனர்.

இதேவேளையில் ஆங்கிலம் போதிப் பதற்காக சிங்கள ஆசிரியர்கள் தமிழ் மொழி மூலப் பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டு வரும் நடவடிக்கை குறித்து பலத்த கண்டனம் தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

அண்மையில் நடந்து முடிந்த பயிலுநர் ஆசிரியர் தெரிவுப்போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியவர்களில் புள்ளி அடிப்படையில் ஜீ.சீ.ஈ. உயர் தர தராதரப் பத்திரத்துடன் ஆசிரியர்களாக நியமிப்பதற்கு மத்திய மாகாணத்திற்கு 148 ஆசிரியர்களை மாத்திரமே கல்விச் சேவை ஆணைக்குழு சிபார்சு செய்திருக்கும் பணிப்பு குறித்து அதிருப்தியும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த பல வருடங்களாக மலையகம் உட்பட மத்திய மாகாணத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையினால் நுவரெலியா பாடசாலைகளே வெகுவாகப் பாதிக்கப் பட்டிருப்பதாக மத்திய மாகாண கல்வி அமைச்சின் உதவிச் செயலாளர் திரு. எஸ். தேசோமயானந்தன் முரசுக்குத் தெரிவித்தார்.

இதே வேளையில் அட்டாளைச்சேனை, ஸ்ரீபாத,வவுனியா ஆகிய கல்விக் க்ல்லூரி களுக்கு இவ்வாண்டுக்கான அனுமதியும் தொடர்ந்தும் காலம் தாழ்த்தப்படுவதாக ஒரு அதிகாரி தெரிவித்தார்.

# யாழில் நடந்த ஷெல் வீச்சு

## பத்திரிகை ஊழியர் பலி

மண்டைதீவுத் தாக்குதலையடுத்து பலாலி இராணுவ முகாமிலிருந்து யாழ் நகரை நோக்கி ஷெல் வீச்சுக்கள் நடத்தப் பட்டன.

28.06.95 அன்று இடம்பெற்ற ஷெல் வீச்சில் பத்திரிகை ஊழியர் ஒருவர் பலியானார்.

யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ஈழநாடு பத்திரிகை ஊழியர் சி.அருளானந்தம் என்பவரே பலியானவராவார். தனது சைக்கிளில் மானிப்பாய் வீதிவழியாக சென்று கொண்டிருந்த போதே ஷெல் தாக்கி அவர் மரணமானார்.

# "எவனாயிருந்தால் எனக்கென்ன? தமிழனாயிருந்தால் புலிதானடா!"

## மனித உரிமைக் குழு ஊழியர் தாக்கப்பட்டார்

(சஞ்சீவன்)

இலங்கையில் மாவட்ட ரீதியாக மனித உரிமைகள் பணிக்குழு என்னும் அமைப்பு செயற்பட்டு வருகிறது. இதன் தலைவரை ஜனாதிபதிதான் நியமித்திருந்தார்.

திருகோணமலை மாவட்ட மனித உரிமைகள் பணிக்குழுவைச் சேர்ந்தவர் திரு.ரொபின்சன் ஜோன்சன்.

30.06.95 அன்று அலுவலக வேலையின் காரணமாக திருமலை சுங்க வீதியால் அவர் சென்றுகொணடிருந்த போது பொலி சாரால் சோதனையிடப்பட்டார்.

மனித உரிமைகள் பணிக்குழுவின் ஊழியர் என்பதை நிரூபிக்கும் வகையில் தனது அடையாள அட்டையை அவர் பொலிசாரிடம் காண்பித்தார்.

அப்போது அவ்விடத்தில் நின்ற இரகசிய பொலிஸ் பிரிவு சார்ஜன்ட் காரியவசம் என்பவர் "மனித உரிமைகள் குழுவென்றால் எனக்கென்ன? நீயும் புலிதானடா" என்று சொல்லியபடி தன்னைத்தாக்கியதாக ரொபின்சன் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

திருமலையில் தனியாரின் உழவு இயந் திரங்களை இராணுவத்தினர் வந்து தமது தேவைகளுக்காக எடுத்துச் செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

திருமலை இந்து இளைஞர் பேரவையின் உழவு இயந்திரமும் இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்டு இதுவரை திருப்பி ஒப்படைக்கப்படவில்லை. இதனால் இந்து இளைஞர் பேரவை மேற்கொண்டுவரும் புனரமைப்பு வேலைகள் பாதிக்கப்பட்டு உள்ளன.

திருமலை றோட்டரிக்கழகத்தினர் உழவு இயந்திரம் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி வைத்திருந்தனர். அதனையும் இராணு வத்தினர் எடுத்துச் சென்றுள்ளனர்.

இதனால் திருமலையில் உழவு இயந்தி ரங்களை வீதியில் காண்பது அரிதாக இருக்கிறது.

# திருமலையில் புலிகளுக்கு பேரிழப்பு.

## முக்கிய தலைவர் விபத்தில் பலி!

திருகோணமலையில் நிலக்கண்ணி வெடிகளை புதைத்துக் கொண்டிருந்த போது ஏற்பட்ட வெடிவிபத்தில் மூன்று புலிகள் பலியாகியிருந்தனர்.

கடந்த 28.06.95 அன்று நடந்த அந்த வெடி விபத்தில் பலியான மூவரில் ஒருவர் லெப்ரினன்ட் கேணல் காந்தன் என்றழைக் கப்படும் வேலாயுதபிள்ளை சிவகுமார். இவர் கிளிநொச்சியைச் சேர்ந்தவர்.

பிரபாகரனால் கிழக்குக்கு அனுப்பிவைக் கப்பட்ட முக்கிய தளபதிகளில் ஒருவரான காந்தன், சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவில் சிறப்பு தளபதியாக இருந்தவர்.

விடுதலைப் புலிகள் அமைப்பில் முதலில் பலியான லெப்ரினன்ட் கேணல் சாள்ஸ் அன்ரனியின் பெயரில் பிரபாகரனால் உருவாக்கப்பட்ட சிறப்புப் படைப்பிரிவே சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவாகும்.

1991 இல் நடந்த ஆனையிறவு முகாம் முற்றுகையின்போதே சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு யுத்தத்தில் ஈடுபடுத்தப்பட்டது.

பிரபாகரனின் மகனது பெயரும் 'சாள்ஸ் அன்ரனி' என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

'சாள்ஸ் அன்ரனி' படைப்பிரிவு தற்போது திருமலையில் தங்கியிருப்பதாக தெரிகிறது.

வடக்கிலிருந்து புலிகளின் அணிகள் பலவும், முக்கிய தளபதிகளும் கிழக்கே அனுப்பப்பட்டுள்ளதாக முரசு ஏற்கனவே செய்தி வெளியிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

லெப்ரினன்ட் கேணல் காந்தனோடு பலியான ஏனைய இரு புலி உறுப்பினர்களும் வடபகுதியைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

# பச்சிளம் குழந்தையின் வாக்குமூலம்! இடம்மாறினாலும் விரோதம் போகவில்லை.

(ஏறாவூர் நிருபர்)

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் சதாம் ஹுசைன் கிராமத்தில் இளம் தாய் ஒருவரும் 09 வயது சிறுவனும் கொல்லப்பட்டதை அடுத்து கலவரம் ஏற்பட்டமை அறிந்ததே.

இளம் தாயான 24 வயதுடைய மு.இ. பசீறா வெட்டிக்கொல்லப்பட்டபோது அவரது 2 1/2 வயதுக் குழந்தை அருகில் இருந்திருக்கிறது. குழந்தையிடம் அம்மாவைக் கொன்றது யார் என்று கேட்டால் "போச்சிக்காரன்" (பொலிஸ்காரர்) என்று சொல்கிறதாம்.

சம்பவம் நடந்த வீட்டிலிருந்து 200 யார் தொலைவில் பொலிஸ் காவலரண்கள் இரண்டு உள்ளன.

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து ஏற்பட்ட பதட்டத்தில் பொலிஸார் சுட்டு பொது மக்களில் ஒருவர் பலியானதும் தெரிந்ததே.

ஏறாவூர் பொலிஸ் நிலையத்திலிருந்து பொலிசாரை மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏனைய இடங்களுக்கு இடமாற்றம் செய் துள்ளனர்.

அவ்வாறு இடமாற்றப்பட்ட பொலி சாரில் சிலர் ஏறாவூர் வாசிகளை கண்டால் விரோதத்தோடு நடப்பதாகக் கூறப் படுகிறது. ஏறாவூரிலிருந்து விறகு எடுக்கச் சென்ற சிலர் தாக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை புலிகள்-படை மோதல் சம்பவம் ஒன்றை அடுத்து பலியான பொது மக்கள் இருவரின் சடலங்களைப் பெற ஏறாவூர் பொலிஸ் நிலையம் சென்ற தமிழ்ப்பெண்கள் அங்கு கடமையிலிருந்த பொலிசாரால் வசைபாடப்பட்டனராம்.

முரசு நிருபரின் கண் எதிரில் இச் சம்பவம் நடைபெற்றுள்ளது.

இதேவேளை, ஏறாவூரில் ஏற்பட்ட பதட்டத்தின் போது முன்வரிசையில் காணப் பட்ட அரசியல்வாதியொருவர் திடீரென்று தலைமறைவாகிவிட்டார்.

பொலிசாரோடு சுமுகமாக நிலமையைக் கையாண்டு விசாரணை நடத்த வைத்திருக்க லாம் என்று ஒரு சாரார் அபிப்பிராயப் படுகின்றனர். இன்னொரு சாரார் அதனை மறுக்கின்றனர்.

# ஊர்காவல் படை தடை!

திருகோணமலையில் ஊர்காவல் படையினரின் கெடுபிடிகள் தொடர் கின்றன.

திருமலை லிங்கநகர் பாதையில் மாலை 6.30 மணி முதல் மறுநாள் காலை 6 மணி வரை ஊர்காவல் படையினர் வீதித்தடை போடுகின்றனர். பொது மக்கள் எவரும் அந்த நேரங்களில் குறிப்பிட்ட பாதை வழி யாகச் செல்ல முடியாது.

இதனால் அதிகாலையில் வேலைக் குச் செல்லும் மருத்துவமனை ஊழி யர்கள், பிறிமா ஆலை ஊழியர்கள் உட்பட அப்பாதையூடாகப் பயணம் செய்யும் பொதுமக்கள் பாடு திண்டாட் டமாகியுள்ளது.

# வடக்கில் விரைவில் தாக்குதல் ? விமானங்கள் வானில் நோட்டம்!

மண்டைதீவுத் தாக்குதலையடுத்து வடக்கில் ஒரு தாக்குதலை நடத்த படைத் தரப்பு திட்டமிட்டுள்ளதாக தெரியவருகிறது.

இம்மாத இறுதிக்குள் தாக்குதல் நடத்துவது பற்றி படைத்தரப்பின் உயர் மட்டத்தில் யோசிக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

இதேவேளை யாழ் குடாநாட்டு வான் பரப்பில் விமானப்படை விமானங்கள் உயரத்தில் பறந்து நோட்டமிட்டு வருகின்றன.

இதேவேளையில் கிழக்கில் புலிகளின் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்படலாம் என்று ஒரு தகவல் தெரிவிக்கின்றது.

07.04.95 அன்று யாழ்பாணத்தில் 'கரும்புலிகள்' தினம் புலிகளால் பெரியளவில் அனுஷ்டிக்கபட்டது.

முதலாவது கரும்புலி மில்லரின் உருவப்படம் உட்பட தற்கொலை தாக்கு தலை நடத்தி பலியான கரும்புலிகள் பலரின் உருவப்படங்களோடு ஊர்த்திகளின் பவனியும் நடைபெற்றது.

உரிமை கோரப்படாத தாக்குதல்களில் பலியான கரும்புலிகளை நினைவு கூரும் வாசகங்களும் காணப்பட்டன.

# வை.கோ. ஆதரவு

மறு மலர்ச்சி திராவிட முன் னேற்றக் கழகத் தலைவர் வை. கோபாலசாமி புலிகளுக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

இலங்கை இனப்பிரச்சனைக்கு 'தனித் தமிழீழமே' தீர்வாக முடியும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

"இலங்கைக்கு இந்தியா படை அனுப்புமானால் தமது கட்சி அதனை வன்மையாக எதிர்க்கும்" என்றார் அவர்.

1989இல் வை.கோபாலசாமி தமிழ்நாட்டிலிருந்து படகுமூலம் வந்து புலிகளின் தலைவரை சந்தித்திருந்தார். அப்போது இந்திய அமைதிப்படை வடக்கு-கிழக்கில் நிலைகொண்டி ருந்தது என்பது தெரிந்ததே.

## வதந்தியும்–நடந்ததும்

03.07.95 அன்று காங்கேசந்துறையில் படையினரின் வாகனமொன்று விபத்தில் சிக்கி வெடித்துச் சிதறியது. வெடிமருந்தோடு சென்ற வாகனமே வெடிவிபத்தில் சிக்குண்டதாக தெரியவந்தது.

இச் செய்தி கொழும்புக்கு எட்டியபோது விமானம் ஒன்றை புலிகள் தாக்கிவிட்டதாக திரிபடைந்து பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

# குருநாகலில் பிள்ளைகள் கடத்தல்

(குருநாகல் நிருபர்)


குருநாகல் நகரில் பாடசாலைப் பிள்ளைகள் கடத்தப்பட்ட சம்பவங்கள் அண்மையில் இடம் பெற்றுள்ளமை, இங்கு வாழ் பெற்றோர்களுக்கு பெரும் பீதியை உருவாக்கியுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் பாடசாலை மாணவனொருவனை வேனில் வந்த கோஷ்டியொன்று கடத்திச் சென்றுள்ளது. இடைவழியில் சாரதியை காவலுக்கு வைத்துவிட்டு ஏனையவர்கள் தேனீர் அருந்தச் சென்றுள்ளனர். சாரதி வெளியில் இறங்கியவேளை இம் மாணவன் கதவைத்திறந்து கொண்டு சமயோசிதமாகத் தப்பி உள்ளான். மாணவன் தப்பியதைக் கண்ணுற்ற சாரதி கத்தவே, தேனீர் அருந்திக் கொண்டிருந்த ஏனையவர்களும் ஓடி வந்து வாகனத்தில் ஏறி தப்பி ஓடிவிட்டனர். மாணவன் அயலவர்களின் உதவியுடன் வீடு வந்து சேர்ந்துள்ளான்.

வாகனம் நவீன முறையில் உட்பக்கம் அமைக்கப்பட்டிருந்ததாயும், பொத்தானை அமத்தினால் கதவு திறக்கப்படக் கூடியதாகவும், கண்ணாடிகள் கறுப்பு நிறத்தில் இருந்ததாகவும், தான் பொத்தானை அமத்தி கதவைத் திறந்துகொண்டு தப்பியதாகவும் அம்மாணவன் தினமுரசு நிருபருக்குத் தெரிவித்தான். இதே வேளை பிரபல பாடசாலையில் பயிலும் மாணவர்களுக்கு போதைவஸ்து விற்பனை செய்ய வந்த பேர்வழியை அப்பாடசாலை ஆசிரியர் ஒருவர் பிடித்தபோது அவன் தப்பி ஓடி இன்னொருவனுடன் மோட்டார் சைக்கிளில் ஏறிச் சென்று விட்டான்.

எனவே தங்கள் பிள்ளைகள் விடயத்தில் மிக அக்கறை தேவையென தினமுரசு மூலம் சுட்டிக்காட்டப்படுகிறது. இச்சம்பவங்களின் பின்னணியில் உள்ளவர்கள் விரைவில் கண்டறியப்பட வேண்டும் எனப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

# காட்டூன் மூலை




# ஆசிரியர் சம்பளம் மாதாந்தம் தாமதம்!

## மட்டக்களப்பு மாவட்ட ஆசிரியர்கள் கவலை

மட்டக்களப்பு மாவட்ட ஆசிரியர்களின் மாதாந்த சம்பளக் கொடுப்பனவுகள் வழங்குவதில் பல வருடங்களாக தாமதம் ஏற்பட்டு வருகின்றது. இதனால் ஆசிரியர்களும் குறைந்த வேதனம் பெறும் பாடசாலை சிற்றூழியர்களும் பல சிரமங்களுக்குள்ளாகின்றனர்.

மாதத்தின் 20ந் திகதி ஆசிரியர்களின் சம்பளத்தினமாக கணிக்கப்பட்டிருந்தும், கடந்த 1991ம் ஆண்டிலிருந்து மாகாண சபையுடன் பாடசாலைகள் இணைக்கப்பட்டதிலிருந்து இதுவரை காலமும் மாதாந்தக் கொடுப்பனவுகள் தாமதித்தே வழங்கப்பட்டு வருகின்றன.

இதனால் 20ந் திகதியை எதிர்நோக்கியிருக்கும் ஆசிரியர்மார்களும், சிற்றூழியர்களும் பல சிரமங்களுக்குள்ளாகின்றனர். சம்பளத்தை எதிர்நோக்கி கல்வித் திணைக்களம் சென்றால், பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளுக்கு "மாகாண சபையில் இருந்து சம்பளக்கொடுப்பனவு (IMPREST) வரவில்லை" என்ற வாசகத்தை மாதாந்தம் கேட்டு கேட்டுப் புளித்துவிட்டது.

ஜூன் 1995க்குரிய மாதசம்பளக் கொடுப்பனவுகள், இம்மடல் தபாலில் முரசுக்கு சேர்க்கும்வரை வழங்கப்படவில்லை.

எனவே இது தொடர்புடைய கல்வி கலாசார விளையாட்டுத் துறை அமைச்சின் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் உரிய திகதியில் சம்பளக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கு ஆவன செய்வார்களாக.

கல்லடி மூர்த்தி

# பாதிக்கப்பட்ட பெண்கள் பத்தாயிரம்!

## சீனாவில் நடைபெறும் மகளிர் மாநாடு.

(ஏறாவூர் நிருபர்)

சீனத் தலைநகர் பீஜிங்கில் இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள சர்வதேசப் பெண்கள் மாநாட்டுக்கு மட்டக்களப்பு சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்திலிருந்து இருவர் தெரிவாகியுள்ளனர். இந்நிறுவனத்தின் திட்ட இணைப்பதிகாரி செல்வி ஜெயந்தி தளயசிங்கம், நிருவாக அலுவலர் செல்வி யமுனா இப்றாஹீம் ஆகியோரே தெரிவாகியுள்ளோராவர்.

பாதிக்கப்பட்டு அல்லலுறும் மக்களுக்கு (குறிப்பாகப் பெண்களுக்கு) அபயக் கரம் நீட்டுமுகமாக இந்நிறுவனம் மட்டக்களப்பில் பல செயற்திட்டங்களை அமுல்படுத்தியுள்ளது.

யுத்த சூழலாலும் மற்றும் ஏனைய நிகழ்வுகளாலும் பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் இளைக்கப்படும் கொடுமைகளையும், புறக்கணிப்புக்களையும் தாம் சீன மாநாட்டில் பிரஸ்தாபிக்கவிருப்பதாக நிருவாக அலுவலர் செல்வி யமுனா இப்றாஹீம் தெரிவித்தார்.

அரச சார்பற்ற நிறுவனங்களில் பணி புரியும் 43 பெண்கள் இலங்கையிலிருந்து சீன மாநாட்டுக்குத் தெரிவாகியுள்ளனர். முப்பதாயிரத்துக்கும் மேற்பட்ட உலகப் பெண்கள் இம்மாநாட்டில் பங்கு கொள்கின்றனர்.

உலகப் பெண்கள் மாநாடு முன்னர் நைரோபி, கோபன் ஹேகன், மெச்சிக்கோ ஆகிய நகரங்களில் நடந்துள்ளன.

கொல்லப்பட்ட, கடத்தப்பட்ட, காணாமல்போன, விசாரணைக்கெனக் கொண்டு செல்லப்பட்ட, மற்றும் கைவிட்டுச் சென்றதினால் நிர்க்கதியான பெண்களின் தொகை மட்டு மாவட்டத்தில் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வெண்ணிக்கை சுமார் பத்தாயிரத்து அறுநூறுக்குமேல் என்று தெரிய வருகிறது.

# நூல் நிலையமும் தமிழ் வாசகர்களும்

மலையகத்தில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் ஒரு மாவட்டமாக நுவரெலியா மாவட்டம் விளங்குகின்றது. இங்கு அமைந்துள்ள நுவரெலியா பொது நூல் நிலையத்திற்கு அதிகமான தமிழ் வாசகர்கள் செல்வது வழக்கம். ஆனால் இங்கு தமிழுக்கென்று ஒரு ஊழியர் தானும் இல்லை. அது மட்டுமன்றி பெரும்பான்மை இனத்தவருக்காக கிட்டத்தட்ட 30-40 பத்திரிகைகள் சஞ்சிகைகள், வாசிப்பதற்காக உள்ளன. ஆனால் தமிழ்பேசும் வாசகர்களுக்கு மூன்றே மூன்று பத்திரிகைகள் மட்டும் தான் உள்ளன.

பெரும்பாலான தமிழ் வாசகர்கள் பத்திரிகைகள், சஞ்சிகைகள் இல்லாது ஏமாற்றத்துடன் திரும்பிவிடுகின்றனர். நுவரெலியா மாவட்ட தமிழ் பேசும் மக்கள் பிரதிநிதிகள் இதனைக் கவனிக்கக்கூடாதா?

வி.நெல்சன்-நுவரெலியா.

# தேனக ஓவியருக்கு கலாபூஷண் விருது

மட்டக்களப்பைச் சேர்ந்த அல்ஹாஜ் எம்.எஸ்.ஏ. அஸீஸ் அவர்களுக்கு கலாசார அமைச்சு அண்மையில் கலாபூஷண் விருதும் பொன் முடிப்பும் அளித்து கௌரவித்தது. கொழும்பு கவின்கலைக் கல்லூரியில் ஓவியக் கலையை முறையாகக் கற்றுத்தேறிய முதலாவது முஸ்லிம் சமூகத்தவர் திரு. அஸீஸ் அவர்களே.


இவர் அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக்கல்லூரி ஓவியக்கலை விரிவுரையாளராகச் சேர்ந்து பின்னர் மட்டக்களப்பு அரசினர் ஆசிரிய பயிற்சிக்கல்லூரியின் துணை அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றார். இவர் ஓவியத்துடன் மட்டுமல்லாமல் ஒரு எழுத்தாளராகவும் திகழுபவர். ஓவியக் கலை தொடர்பாக வானொலி உரைகளையும் நிகழ்த்தியுள்ளார். சஞ்சிகைகள், செய்தித்தாள்கள் ஆகியவற்றில் இவருடைய ஓவியங்களும் ஓவியக்கலை தொடர்பான கட்டுரைகளும் வெளிவந்துள்ளன.

'சில்க் ஸ்கிறீன்' அச்சுக்கலை இன்று இலங்கையில் மிகப்பிரபலமாக வளர்ந்துவிட்டது. இலங்கையில் இக்கலையினை முதன் முதலாகப் பயின்றவர்களுள் முன்னோடியான திரு. அஸீஸ், தமிழ் நாட்டிலும் 1959ம் ஆண்டு 'சில்க் ஸ்கிறீன்' அச்சுக்கலையை முதன் முதலில் அறிமுகப்படுத்திவைத்த பெருமைக்குரியவர். சென்னையில் ஆரம்பிக்கப்பட்ட 'சுபஸ்கிறீன்' அச்சுக் கலையகத்தாரின் வேண்டுகோளுக்கிணங்க இக்கலையை முதன் முதலில் அங்கு அறிமுகப்படுத்தினார்.

இம்முறையில் திரு. அஸீஸினால் வடிவமைக்கப்பட்ட மகாத்மா காந்தி-1960ம் ஆண்டுக்கான நாட்காட்டி மிகுந்த செல்வாக்கினைப் பெற்றது. மறைந்த தமிழ் நாட்டு முதல்வர் திரு.காமராஜ் அவர்களுடைய அலுவலகத்தில் திரு.அஸீஸினால் வரையப் பட்ட மகாத்மா காந்தி கலண்டர் பிரதான இடத்தில் மாட்டப்பட்டிருந்தது.

அக்காலகட்டத்தில் தயாரிக்கப்பட்ட 'பாலும் பழமும்', 'கைராசி' போன்ற திரைப்படங்களிலும் இந்நாட்காட்டி இடம் பிடித்திருக்கிறது.

இன்று 'சில்க் ஸ்கிறீன்' அச்சு முறை தமிழ் நாட்டின் பட்டி தொட்டிகளெங்கும் பிரதான குடிசைக்கைத்தொழிலாக வளர்ந்து விட்டது. இதற்கு காரணகர்த்தா கலாபூஷண் அஸீஸ் என்றால் மிகையாகாது.



அஸீஸ் அவர்களுக்கு கலாபூஷண் விருதினை கலாசார அமைச்சர் லட்சுமண் ஜெயக்கொடி வழங்கும் போது எடுக்கப்பட்ட படம்.

விளம்பரப் பகுதி



அற்புத மலையாள மாந்திரீகம்

மலையாள மாந்திரீக ஆவி உச்சாடங்களைக் கொண்டு வியாபாரத்தில் செல்வ விருத்தியா? அன்னியோர் நட்பா? வாழ்வில் நிந்திப்பா? வறுமையினால் கிலேச மனப்பான்மையா? பொன் பொருள் கையில் தங்கவில்லையா? பொறாமையினால் எதிர் நீச்சலா? சரியே வராது என முடிவெடுத்த தீரா ஆஸ்மாவா? தீரா நோயா, அல்லது தீரா மர்மநோயா, மனநோயா, பேயா, பில்லியா சூனியமா?

எவையென அச்சொட்டாக தெரிந்து அதற்கேற்ப நிவர்த்தி பெற்றவர்கள் எத்தனை எத்தனையோ?

இனி இல்லற வாழ்வு சிறப்பின்மையா?

கணவன் மனைவி பிணக்கா? காதல் தோல்வியா? காதலில் பிரச்சனையா? சவால் விடும் காதலா? விரும்பியவரை விரும்பியவாறு திருமணம் செய்விக்க வேண்டுமா? திருமணங்கள் கைகூடுவதில்லையா? அல்லது திருமணம் தடைக்கான திட்டவட்டமாக பரிகாரம் தேவையா? இனி கை கால் அசதியா? கையில் பணம் தங்கவில்லையா? கல்வி ஞான கவசமா, மகாலக்சுமி வாசம் செய்வதற்கான வலம்புரி சங்கு, நவரத்தினம், இத்துடன் தங்கம் கலந்த பெரிய அளவிலான மகாலக்சுமி இயந்திரம் தேவையா? ஞான திருஸ்டியில் ஜனன ஜன்ம கேள்வி பதில் தேவையா? காண்ட சாஸ்திர அடிப்படையில் ஆயுள் பூராகவும் புத்தக வடிவில் ஜாதகம் கணித்து அனுப்ப உள்நாட்டவரோ வெளிநாட்டவரோ ரூபா 700.00 அனுப்பினால் போதுமானது.

எம்மாதமும் என்னை 20 முதல் மாதக்கடைசிவரை கொழும்பு இல்லத்தில் சந்திக்கலாம். வெளிநாட்டு ஆடர்கள் உடனுக்குடன் கவனிக்கப்படும்.

தேவைகளுக்கு—

மலையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே.சாமி (J.D.G.A.N.)
P.K.SAAMY ASSOCIATE (PVT) LTD
162, கொட்டாஞ்சேனைவீதி- கொழும்பு 13
T.P. 342463, 342464,434831,344832.
FAX 00941342463 EXT 25

தலைமையகம்

மளையாள மாந்திரிக சக்கரவர்த்தி பி.கே. சாமி
(J.D.G.A.N.)
P.K. SAAMY ASSOCIATE (PVT)LTD
இல 31.32.33
தினச்சந்தை கட்டிடம்
நு வெரலியா.
T.P. 052 2508 3093,3336.
FAX 0094523093 EXT 28

# இப்படியும் ஒரு வசூல்!

கொழும்பில் பரவலாக தமிழ் மக்கள் வாழ்கின்றனர். அவர்கள் சிங்கள மொழி தெரியாமல் தத்தளிப்பது தெரிந்த விடயம். சில தீயவர்கள் அவர்கள் இருக்கும் வீடு வீடாக இரவில் சென்று போலி ஆவணங்களைக் காட்டி பணம் வசூல் பண்ணுகின்றார்கள். பீதி காரணமாக அவர்கள் கேட்கும் பணத்தை கொடுக்கின்றனர். இல்லை என்று சொல்லும் பட்சத்தில் வாய்க்கு வந்தபடி கெட்டவார்த்தையில் பேசுகின்றனர்.

சில சமயங்களில் சண்டையும் ஏற்படுவதுண்டு. எனவே இப்படிப்பட்ட போலி ஆசாமிகளை பிடித்து அவர்களுக்கு தகுந்த தண்டனை வழங்க காவல் அதிகாரிகளை பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

எஸ்.சுமன்-மட்டக்குழி.

# மாகாணப் போட்டித் தெரிவு

ஹாலி-எல கோட்டமட்ட பாடசாலைகளுக்கிடையிலான தமிழ் மொழித்தின போட்டிகளில் இம்முறை பது/ஊவா கட்டவளை தமிழ் வித்தியாலயத்திற்கு மூன்று நிகழ்ச்சிகளில் முதலாம் இடம் கிடைக்கப்பெற்று மாகாண மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளது. விபரம் வருமாறு:

| பிரிவு | நிகழ்ச்சி | பெற்ற வருடம் | மாணவர் பெயர் |
|---|---|---|---|
| 01. | நடனம்-தனி | முதலாவது- | ஆர்.பிரியதர்ஷினி |
| 02. | நடனம்-தனி | முதலாவது- | எஸ்.நவனீதம் |
| 03. | நடனம்-குழு | முதலாவது | குழு |

இத்துடன் முதலாம் பிரிவு பேச்சுப் போட்டியில் செல்வன் கே.யோகேஸ்வரன் மூன்றாம் இடத்தையும், பிரிவு இரண்டில் செல்வன் வி.ஞானப்பிரகாசம் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இதுவரை இல்லை நிவாரணம்

அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள மல்வத்தை கிராமமானது கடந்த 90 ஆம் ஆண்டு கலவரத்தினால் பாதிக்கப்பட்டு மக்களையும் அகதி வாழ்க்கைக்கு தள்ளுவித்தது. மீண்டும் 93ம் ஆண்டு அகதிகள் மீளக் குடியமர்த்தப்பட்டும் இன்று வரையில் எதுவித புனர்வாழ்வு உதவிகளும் இக்கிராமத்து மக்களுக்கு செய்யப்படவில்லை.

அதிகாரிகள் சிலர் வந்து இழப்புக்களைப் பார்வையிட்டார்களே தவிர, இன்றுவரை ஆகவேண்டிய பணிகள் எதனையும் நிறைவேற்றவில்லை.

இக்கிராம மக்கள் மீது இனிமேலாவது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பார்வையைத் திருப்புவார்களா?

வெண்மதி இளைஞர் கழகம்-மல்வத்தை-02.

# படை தடை

வடபகுதிக்கு அமோனியம் சல்பேற்று உரம் எடுத்துச் செல்ல படையினர் தடை விதித்துள்ளனர். இதனால் அந்த உரத்துடன் சென்ற 12 லொறிகள் வவுனியாவில் தடுக்கப்பட்டன. யூரியா உரத்துக்கும் ஏற்கெனவே தடை இருந்து வருகிறது. இப்போது அமோனியம் சல்பேற்று உரமும் தடுக்கப்படுவதால் வடபகுதியில் பயிர் செய்கைகள் பாதிக்கப்படும் என்று கூறப்படுகிறது.

# குவைத்திலிருந்து ஒரு சோகக் கடிதம்

இன்று இலங்கையில் இருந்து ஏராளமானோர் மத்திய கிழக்கு நாடுகளில் தொழில் புரிவதற்காக வருகின்றனர். இதில் பெரும்பாலானோர் வீட்டுப் பணிப்பெண்களாகும். இன்று நாம் நினைக்கின்றது போல் இவர்கள் அனைவரும் தமது தொழிலில் திருப்தியாக உள்ளார்கள் என்று கூற முடியாது:

நான் குவைத் நாட்டில் ஒரு காரியாலயத்தில் (Recrutment of Manpower) சுமார் ஒன்றரை வருடகாலமாக தொழில் புரிந்து வருகிறேன். எனது இந்த சேவைக்காலத்தில் இலங்கையில் இருந்து குவைத் வரும் வீட்டுப்பணிப்பெண்கள் படும் துயரங்கள், கஷ்டங்களை கண்கூடாகப் பார்த்தவண்ணம் உள்ளேன்.

இவர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றன. எந்த ஓய்வுமின்றி வேலை செய்யும் இவர்களுக்கு சரியான முறையில் ஊதியம் வழங்கப்படுவதில்லை. புதிதாய் வருபவர்கள் மொழி தெரியாமல் திணறும் பொழுது மிருகங்களைப்போல் அடி உதைகள் வாங்குகின்றனர்.

நாட்கணக்கில் சரியான முறையில் உணவுகூட இல்லாமல் தண்டனைக்கு உள்ளாகின்றனர்.

இலங்கை மக்களின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு இங்குள்ள ஒரே இடம் எமது "இலங்கை தூதரகம்." ஆனால் இவர்கள் சரியான முறையில் எங்கள் பிரச்சனைகளைத் தீர்ப்பதில்லை. இவர்கள் இங்குள்ளவர்களுக்கு வக்காலத்து வாங்குபவர்களாகவே உள்ளனர்.

இன்று 300க்கும் மேற்பட்ட பணிப் பெண்கள் இலங்கைத் தூதரகத்தில் (குவைத்தில்) அகதிகளாக உள்ளனர்.

சில பெண்கள் தமது உடம்பில் எரி காயங்களுடன் காணப்பட்டார்கள். மேலும் சில பெண்களைப் பார்த்ததும் எனக்கு எதியோப்பியர்களின் தோற்றம் தான் மனதில் பதிந்தது.

இன்று குவைத்தில் பிலிப்பைன் தூதரகம் என்றால் குவைத் நாட்டவர்கள் அச்சம் கொள்கின்றனர். ஏனெனில் பிலிப் பைன் வீட்டுப்பணிப்பெண்களின் பிரச் சனைகளுக்கு அத்தூதரகம் தகுந்த நட வடிக்கைகளை உரிய நேரத்தில் எடுக்கின்றது.

எமது தூதரக ஊழியர்கள் இன்றும் உறங்கிக்கொண்டு தான் இருக்கின்றனர்.

-றிபாத் ரம்ஜான்- குவைத்.

நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஒரு வருடத்திற்கு ரூபா | 557/= | (52 வாரங்கள்) |
| ஆறு மாதங்கள் ரூபா | 284/= | (26 வாரங்கள்) |
| மூன்று மாதங்கள் ரூபா | 145/= | (13 வாரங்கள்) |

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுய முகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

THINAMURASU VARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதம் அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# எக்ஸ்ரே ரிப்போர்ட்

# மண்டைதீவுத் தாக்குதலில் புலிகளின் நோக்கம்

**109** ரன்-9 விக்கெட். அத்தோடு ஆட்டத்தை நிறுத்திவிட்டு புலிகள் திரும்பி விட்டார்கள். ஆட்டம் இடம் பெற்றது மண்டைதீவில்.

ஒரு'கிரிக்கெட்' ஆட்டம் போலவே மண்டைதீவுத் தாக்குதலும் நடந்து முடிந்து விட்டது.

இதில் முக்கிய விடயம் என்ன வென்றால் ஆடுகளம் இத்தனை தூரம் தமக்கு கைகொடுக்கும் என்று புலிகள் கூட நினைத்திருக்க மாட்டார்கள் என்பது தான்.

யாழ்-குடாநாட்டில் தீவுப்பகுதிகள் படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. அங்குள்ள பிரதான இராணுவ முகாம் ஊர்காவற்துறையில் உள்ள வேலணையில் இருக்கிறது.

மண்டைதீவில் இருப்பது ஊர்கா வற்துறை பிரதான முகாமுக்கு உட்பட்ட முகாம். ஊர்காவற்துறை பிரதான முகாமை பாதுகாப்பதற்கு என அமைக்கப் பட்ட முன்னரங்க முகாம்தான் அது.

தீவுப்பகுதிகளில் உள்ள இராணுவ முகாம்கள் புலிகளுக்கு இராணுவ ரீதியில் இடைஞ்சலானவையாக இருக்கவில்லை.

வடக்கு-கிழக்குப் போரில் புலிகள் தமது படையணிகளை நகர்த்தவோ வியூகங்களை வகுக்கவோ தடையாக உள்ள முகாம்கள்தான் இராணுவ ரீதியில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தவை என்று அழைக்கப்பபடுகின்றன.

உதாரணமாக ஆனையிறவு முகாம், பூநகரி முகாம் போன்றவை யாழ் குடா நாட்டுக்கும் ஏனைய பிரேதசங்களுக்குமான தரைப் போக்குவரத்தை துண்டித்துள்ளன. இதனால் யுத்தத்தில் புலிகளது தரை மூலமான தடையற்ற நகர்வுகள் தடுக்கப் பட்டுள்ளன.

தீவுப்பகுதிகளில் உள்ள முகாம்களால் அவ்வாறான பிரச்சனை எவையும் இல்லை.

ஊர்காவற்துறையிலிருந்தோ, அல் லது மண்டைதீவிலிருந்தோ இராணுவம் யாழ் நகருக்குள் தரைவழியாக பிரவே சிக்க முடியாது. பண்ணைக் கடல் இடையே குறுக்கிட்டு தடுத்துக் கொண்டிருக்கிறது.

கடலுக்கு மேலே பாலம் ஒன்று இருந்தது. அதனை புலிகள் பயன்படுத்தி மண்டைதீவுக்குள் வரக்கூடும் என்பதால் இராணுவமே பாலத்தை உடைத்து வைத்திருக்கிறது.

பாலத்தை சீர்படுத்தியோ அல்லது கடல் வழியாகவோ இராணுவம் உள்ளே புகுந்தால் புலிகளது சுற்றிவளைப்புக்குள் சிக்கிவிடக்கூடிய அபாயம் உண்டு.

மண்டைதீவு இராணுவ முகாமி லிருந்து யாழ் நகரை நோக்கி ஷெல் அடிக்கலாம். 50 கலிபர் துப்பாக்கியால் சுடலாம். அதாவது மக்களுக்கு தொல்லை கொடுக்கலாம். புலிகளுக்கு நெருக்கடி ஏற்படுத்த முடியாது.

முகாம் ஒன்று தாக்கப்பட்டால் அதில் எத்தனையோ பேர் பலியாகிறார்கள் என்பதை வைத்து அந்த முகாமின் முக்கியத்துவத்தை எடை போடக்கூடாது.

தாக்குதலில் அதிகமானோர் பலியா னால் தாக்கியவர்கள் திறமைசாலிகள் என்று கூறலாம்.

படை முகாம்கள் மூன்று வகைப்படும் 1. கூட்டுப்படைத்தளம் (Military Complex) 2. தளம் (Base) 3. முகாம்கள்

முப்படைகளில் மூன்றையும் அல்லது இரண்டையும் கொண்டுள்ளதே கூட்டுப் படைத்தளம் என்று அழைக்கப்படும். உதாரணம்; பூநகரி கூட்டுப்படைத் தளம்.

இராணுவரீதியில் உயர்ந்த திறன் அதாவது ஆட்பலம், ஆயுதபலம், அதிக நிலப்பரப்பில் இருப்பது போன்ற தன்மைகளைக் கொண்டது தளம் (Base) எனப்படும். பிரதான முகாம் என்றும் இதனை அழைக்கலாம்.

உதாரணம்-ஆயைிறவு முகாம். ஒரு தளத்தில் பல படைப்பிரிவுகளைக் கொண்ட எண்ணிக்கையில் அதிகமான படை தங்கியிருக்கும்.

முகாம்கள்- தளத்திலுள்ள படையில் இருந்து ஒரு படைப்பிரிவு இங்கே இருக்கும். உதாரணமாக, மண்டைதீவில் கெமுனு படைப்பிரிவு இருந்தது. இது ஊர்காவற் துறை தளத்தில் இருந்த படையின் ஒரு பிரிவு.

மண்டைதீவு இராணுவ முகாம் முக்கியத்துவம் மிக்கதாக இருந்திருந்தால் புலிகளால் எப்போதோ தாக்கப்பட்டிருக்கும்.

பிராதான கேந்திர முகாம்களைத் தாக்கி விட்டு பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்று விட்டுவைக்கப்பட்ட முகாமாக அது இருந்தது.

தீவுப்பகுதிகள் இராணுவ ரீதியில் தமக்கு நெருக்கடி இல்லை என்பதால் அங்கு தமது முழுப் பலத்தையும் பிரயோகித்து சக்தியை வீணடிக்க புலிகள் விரும்பவில்லை. ஆனால், அடிக்கடி தொல்லை கொடுக்கும் முறையிலான தாக்குதல்களை தீவுப்பகுதி களில் உள்ள இராணுவத்தினர் மீது புலிகள் நடத்தி வருகிறார்கள்.

அதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று, யாழ் குடாநாட்டுக்குள் முகாம்கள் அமைத்து விட்டு படைகள் நிம்மதியாக இருக்க முடியாது என்று உணர்த்துவது.

இரண்டாவது, பலவீனமான முனையில் தாக்கி ஆயுதங்களை சேகரிப்பது.

28.06.95 அன்று மண்டைதீவில் நடந்த தாக்குதல் புலிகளால் மண்டைதீவைக் கைப் பற்றுவதற்காக நடத்தப்பட்டதல்ல.

மண்டைதீவைக் கைப்பற்றி வைத்திருப் பதற்கு புலிகள் செலவிட வேண்டிய சக்தியோடு ஒப்பிடும் போது அந்த முகாமின் முக்கியத்துவம் மிகச் சொற்பம்தான்.

மண்டைதீவைக் கைப்பற்றி வைத்திருந்து ஊர்காவற்துறை பிரதான முகாமில் (தளம்) இருந்து வரும் படைகளையும் தடுத்துநிற்கும் சமருக்கு புலிகள் பலத்தை செலவிட முடியுமானால் அவர்கள் ஏன் மண்டைதீவில் கைவைக்கிறார்கள். ஊர்காவற்துறை பிரதான முகாமையே தாக்கியிருப்பார்கள்.

ஆக, புலிகளின் நோக்கம் வடக்கே தாக்குதல் நடத்த திட்டமிடும் படைகளுக்கு ஒரு எச்சரிக்கை தெரிவிப்பதுதான்.

வடக்கில் உள்ள பிரதான முகாம் களைத்தாக்கி புலிகள் கைப்பற்றக்கூடும் என்று படைத்தரப்பு எதிர்பார்த்தது. அது பொய்த்துப்போனதால் புலிகள் பலவீனமாக இருக்கிறார்கள் என்று படைத்தரப்பு நினைக்கலாம். அதன் மூலம் தன்னம்பிக்கை கொள்ளலாம். அதனைத் தடுக்கவே ஒரு அதிர்ச்சி வைத்தியம் செய்ய மண்டை தீவை புலிகள் தெரிந்தெடுத்தார்கள்.

குறைந்த இழப்புக்களோடு, குறைந்த பலப்பிரயோகம், குறைந்த ஆட்பலத்தோடு உடனடியாக தாக்குதல் நடத்தக்கூடிய இலக்காக இருந்தது மண்டைதீவு முகாம் மட்டுமே.

500 பேர் வரையான புலிகள் தாக்குதலில் பங்குபற்றி இருக்கிறார்கள். அதிகாலை 1.30 மணியளவில் மண்டைதீவு இறங்கு துறையில் புலிகளது படகுகள் வந்து தரித்துள்ளன. இறங்கு துறையை தமது கட்டுப் பாட்டில் கொண்டுவந்த பின்னர் முகாம் மீதான தாக்குதலை புலிகள் ஆரம்பித்தார்கள்.

படைகள் விழிப்பாக இருந்திருந்தால் புலிகள் இறங்குதுறைக்கு வருவதற்கிடையில் இனம் கண்டிருக்க முடியும். புலிகள் பதுங்கிவர வழியில்லை. கடற்பரப்பு- பரந்தவெளி- ஆகவே படைத்தரப்புக்கு புலிகளைக் கண்டுகொள்ளும் வாய்ப்பு இருந்தது. 500 பேர் கடல் வழியாக ஆயுதங்களோடு வருவதென்றல் கூட குறைந்தது 40 படகுகளாவது தேவை.

மண்டைதீவுத் தாக்குதலில் தமது தரப்பில் ஒன்பது பேர் பலி என்று புலிகள் தெரிவிப்பு.

படையினர் தரப்பில் 109 பேர் பலி




படகுகள் வரும்வரை மண்டைதீவு முகாமின் கண்காணிப்பு கோபுரத்தில் இருந்தவர்கள் என்ன செய்துகொண்டிருந் தார்கள் என்பதுதான் கேள்வி. பதில் சொல்வது சுலபம். அனைவருமே நன்றாக கண் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தார்கள்.

இது புலிகளே எதிர்பார்க்காத ஒன்று. பதில் தாக்குதல் இல்லை என்பதால் புகுந்து விளையாடினார்கள். கெரில்லாத்தாக்குதல் நடத்தி விட்டு வந்த வேகத்தில் திரும்ப வந்த புலிகள் சூழ்நிலை தமக்கு சாதகமாக இருந்தமையால் அதிக நேரம் தாமதித்து ஆயுதங்களைச் சேகரித்துக் கொண்டார்கள்.

ஊர்காவற்துறையிலிருந்து மிகத்தாம தித்து படைகள் சென்றபோது புலிகள் திரும்பிச் சென்று விட்டார்கள்.

ஊர்காவற்துறையில் இருந்துவந்த படைகளை தடுக்கவோ, எதிர்த்துத்தாக்கவோ புலிகள் அதிக சக்தியைச் செலவிடவில்லை.

விமானப்படை உதவிக்குச் செல்லாமல் இருந்ததும் புலிகள் எதிர்பார்க்காத ஒன்று தான். விமானப்படை விமானங்கள் சென்றிருந்தால் புலிகள் படகுகளில் திரும்பும் போது தாக்கியிருக்க முடியும்.

ஆக, மொத்தத்தில் புலிகள் நினைத்ததை விட சுலபமாகவும், அதிகமாகவும் இலாபம் கிட்டியிருக்கிறது.

படைத்தரப்பின் விழிப்பு இன்மையே அத்தரப்பில் அதிக உயிரிழப்புக்குக் காரணம் எனலாம். அதனை மறைக்கவே புலிகள் ஆயிரம் பேர் வந்தார்கள் என்றும், அதனால் தான் தமது தரப்பில் பலத்த இழப்பு என்றும் படைத்தரப்பு சொல்ல வேண்டிய தாகிவிட்டது.

தோல்வி அடையும் எந்தவொரு தரப்பும் மறுதரப்பின் எண்ணிக்கையை அதிகமாகச் சொல்ல வேண்டியதும், மறுதரப்பின் பலத்தை பிரமாண்டமாக சித்தரிக்க வேண்டிய யதும் தவிர்க்க முடியாத நிர்ப்பந்தங்களாகும். படைத்தரப்புக்கு அத்தகைய நிர்ப்பந்தம் அடிக்கடி ஏற்படுகிறது.

மண்டைதீவு தாக்குதல் என்பதும் தற்காப்பு யுத்தத்தின் ஒரு கட்டம்தான்.

முகாமைக் கைப்பற்றி, அப்பகுதியை மீட்டெடுப்பதே தாக்குதல் யுத்தகட்டத்தின் முக்கிய குணாம்சமாகும்.

மண்டைதீவில் புலிகள் நடத்திய தாக்குதல் புலிகளது யாழ. தளப்பிரதேசத்துக் குள் படைகள் நடத்த திட்டமிட்டுள்ள தாக்கு தலை பின்தள்ள வைக்க செய்த முயற்சி யாகும்.

யாழ்ப்பாணத்தில் முகாம்கள் அமைப்பது பாதுகாப்பானதல்ல. முதலில் தற்போது இருக்கும் முகாம்களை தற்பாதுகாக்க வேண்டும் என்று படைத்தரப்பை நினைக்க வைக்க நடத்தப்பட்ட தாக்குதலாகும். யாழ்குடா நாட்டில் படையெடுப்பை நடத்தும் மனோவ லிமைக்கு அடிகொடுக்கவே மண்டைதீவுத் தாக்குதல்.

இதுதவிர, யாழ்குடாநாட்டில் திரட்டப் பட்ட புதிய உறுப்பினர்களுக்கான போர் அனுபவமாகவும், புதியவர்களை மேலும் சேர்த்துக் கொள்ள உற்சாகம் அளிக்கும் ஒரு நடவடிக்கையாகவும் மண்டைதீவு இராணுவ தாக்குதல் புலிகளுக்கு உதவியுள்ளது.

அதாவது படைத்தரப்பு முன்னேறி வராமல் முகாம்களுக்குள் இருக்கவைத்துக் கொண்டு புலிகள் தம்மைப்பலப்படுத்தி தயாராவதற்கான தந்திரமாகவே மண்டைதீவு தாக்குதல் அமைந்துள்ளது.

இது அடுத்து ஒரு மரபுப் போர் முறையிலான யுத்தத்திற்கு புலிகள் தயாரா வதன் அறிகுறியாக இருக்கலாம். யாழ்குடா நாட்டில் உள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த முகாம்களில் ஒன்றின்மீது முற்றுகை நடத்தி கைப்பற்ற மண்டைதீவு சாதனை புலிகளுக்கு உற்சாகமான ஊக்கியாக அமையலாம்.

பலவீனமான வசதியான இலக்கை முதலில் தாக்கி தமது உறுப்பினர்களிடையே வெற்றிமீதான நம்பிக்கையை ஊட்டுவது, சண்டை செய்யும் ஆர்வத்தை வளர்ப்பது, அதனைவைத்து பெரியதொரு பாய்ச்சல் நடத்துவது என்பதுதான் புலிகளின் வழக்க மான உத்தி என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

அதற்கிடையே படைகள் ஒரு தாக்குதலை வடக்கில் நடத்தினாலும்கூட அது ஒரு வரையறைக்கு உட்பட்டதாகவே இருக்கமுடியும். முன்னேறிச் சென்று முகாம்களை அமைத்து நிலைகொள்ளக்கூடிய தாக்குதல் யுத்தத்தை படைத்தரப்பு உடனே ஆரம்பிக்க முடியாதென்றே தோன்றுகிறது.

ஏற்கனவே அச்சுவேலிவரை இராணுவம் முன்னேறி நாம் தயாராகவே இருக்கிறோம், உள்ளே வந்துவிடுவோம் என்று மிரட்டுவதுபோல் ஒரு நடவடிக்கை மேற்கொண்டது.

இப்போது புலிகள் மண்டைதீவு முகாமை தாக்கி நாம் வடக்கில் பலமாகத் தான் இருக்கிறோம். முன்னேறி வந்து முகாம்களை விஸ்தரிக்க நினைத்தால் ஆபத்துதான். உள்ளேயே இருங்கள் என்று எச்சரிப்பதுபோல் நடவடிக்கை மேற் கொண்டுள்ளனர்.

ஆக, இரு தரப்பும் தமது தற்காப்பு நோக்கத்தோடு மட்டும் நின்றுகொள்கின் றன. முன்னேறிச் சென்று கேந்திர நிலை களைக் கைப்பற்றிக்கொண்டு தமது ஆதிக் கத்தை விரிவுபடுத்தும் நிலைக்கு வரவில்லை.

அந்த நிலைக்கு முதலில் எந்த தரப்பு முன்முயற்சி எடுக்கிறதோ அதன் கைதான் வடபுலப்போரில் மேலோங்கும்.

□□

# புலிகளை நோக்கி நீளும் இரகசியக் கரங்கள்

**நாரதர்**

**ச**ர்வ தேச ஆதரவை திரட்டிக் கொண்டு புலிகளுக்கு அழுத்தம் கொடுப்பதில் தான் அரசு அக்கறை காட்டிவருகிறது.

வெளிநாட்டமைச்சர் லக்ஷ்மன் கதிர் காமர் நாட்டில் இருக்கும் நாட்கள் மிக மிகக்குறைவு. வெளிநாட்டு ஆதரவைத் திரட்டுவதில் அரசு காட்டும் சுறுசுறுப்புக்கு அதுவே சான்று.

அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் ஒரு தமிழராக இருப்பதும் அரசுக்கு மேலதிக லாபம்.

ஒரு புறம் உயர்ந்துவரும் சிவில் நிர்வாகச் செலவீனங்கள். மறுபுறம் யுத்தச் செலவீனங்கள். அரசின் சுமை அதிகமாகி வருகிறது. ஒரேயொரு நம்பிக்கை வெளி நாட்டு உதவிகள்தான்.

வெளிநாட்டு உல்லாசப் பயணிகளை வராமல் தடுப்பது மூலம் அரசுக்கு வரு மான நஷ்டம் ஏற்படுத்த புலிகள் முற் படவே செய்வர்.

ஆனால், வெளிநாட்டு உதவிகளைத் தடுப்பதில் புலிகள் செய்யும் முயற்சிகள் பலிப்பது கடினம்.

அண்மையில் கனடா பிரதமர் தமது நாட்டு வெளிநாட்டுக் கொள்கை குறித்து பின்வருமாறு கூறியிருந்தார். **"நமது வெளி நாட்டுக் கொள்கையில் வர்த்தக நோக்கம் தான் பிரதானமாக இருக்கும் மனித உரிமைப் பிரச்சனைகள் இரண்டாம் பட்சமானவைதான்"**

கனடா மட்டுமல்ல பெரிய நாடுகள் அனைத்துக்குமே வர்த்தகம்தான் குறி. அதற்கு இசைந்து கொடுக்கும் அரசுகளை அவை தட்டிக்கொடுக்கும். கை கொடுக்கவும் செய்யும்.

அந்த வகையில் இலங்கை அரசுக்கு ஆதரவாக வெளிப்படையாகவும், திரை மறைவிலும் பல சர்வதேச கரங்கள் நீள் கின்றன. புலிகளை நோக்கி எடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு வெளியுலக ஆதர வைப் பெறுவதோடு கண்டனங்கள் எழுவ தையும் தடுப்பதே அரசின் திட்டமாகும்.

இஸ்ரேலுடன் உறவில்லை என்று அரசு கூறினாலும்கூட திரைமறைவில் இஸ்ரேலின் கரம் உதவிக்கு நீண்டுள்ள தாகவே தெரிகிறது. கொழும்புக்கு இஸ்ரே லியர்கள் வந்து சென்றது பற்றியும் செய்திகள் கசிந்திருந்தன.

இந்தியாவும் வெளியே அதிகம் பேசா மல் காதோடு காது வைத்ததுமாதிரி பல உதவிகளையும், ஆலோசனைகளையும் வழங்கியே வருகிறது.

இந்தியாவின் கரம் இலங்கை அரசின் முதுகின் பின்னால் நின்று புலிகளை நோக்கி நீள்கிறது.

சர்வதேச சமூகத்தின் அனுதர்பத்தை இலங்கை அரசால் தொடர்ச்சியாகப் பெறமுடியாமல் போகலாம்.

ஆனால், சர்வதேச பலவான் நாடு களின் ஆட்சியாளர்களை புலிகளுக்கு அனுதாபம் காட்டாமல் செய்வதில் இலங் கை அரசு பெற்றுள்ள வெற்றி கணிசமான காலத்திற்கு நீடிக்கக்கூடும்.

# அதிரடி அய்யாத்துரை



**தீ**வுப் பகுதியில் ரெண்டு எழுத் தார் நடத்திய தாக்குதலை பிறந்தநாள் பரிசென்று வர்ணித்தது வெளிநாட்டு வானொலி. முந்தியெல்லாம் தமது தலைவருக்குத்தான் ரெண்டு எழுத் தார் பிறந்தநாள் பரிசு கொடுக்கி றவை. 95இல் தவளைப்பாய்ச்சலும் அப்படித்தானே. இப்பவெல்லாம் தங் கடை எதிர்தரப்பு தலைமைக்கும் பிறந்தநாள் பரிசு கொடுக்க ஆரம்பிச் சிட்டினமாக்கும்.

**சீ**ருடையினர்மீது தலைநகர பெரும்பான்மை இனப் பத்திரிகைகள் சிறீப்பாய்ஞ்சிருக்கினமாம். ஒரு புறம் ரெண்டு எழுத்தார். மறு புறம் பத்திரிகைகள். இரு முனைத்தாக்குதல் எண்டு இதையும் சொல்லாம் தானே. அதிகாலை நேரம் எண்டால் கொஞ்சம் அதிகமாக தூக்கம் வரத்தானே செய்யும். அதுக்கு என்ன செய்யுறது.

**ச**ண்டைகள் நடந்து முடிந்த கையோடை விசயமறியாமல் வியாக் கியானம் செய்யுற ஆட்களை என்ன செய்யலாம். இரண்டு தமிழ் கட்சிகளின் உறுப்பினர்கள் அங்கு இருந்தவையாம். அவைதானே எண்டு நினைச்சு சீருடையினர் கவனிக்காமல் இருந்தவையாம். பிறகு அதான் தெரிஞ்சதாம் வந்தது ரெண்டு எழுத்தார் எண்டு. என்ன மாதிரியான கண்டுபிடிப்பு பார்த்தியளோ எண்டு நான் பாராட்ட தலையிலை ஒரு குட்டு விழுந்தது. குறிப்பிட்ட தீவிலை தமிழ் கட்சி களின் உறுப்பினர்கள் எவருமே மருந்துக்கும் இல்லையாம். பிரபல சிங்களப் பத்திரிகைகளில் விமர்சனம் எழுதுற சில ஆட்கள் வாசகர் களுக்கு அந்தப் பக்கம் தெரியாதுதானே எண்டு நல்ல 'ரீல்' சுத்துகினம். உண்மையான காரணம் எங்கோ இருக்க நொண்டிச் சாக்கு தேடுற ஆட்கள் இருக்கும்வரையும் உருப்பட முடியுமோ?

**த**லைநகர புறநகர் பகுதி ஒன்றில் வீதிச் சோதனை. ஓட்டோவிலை வந்த இரண்டு தமிழ் வாலிபர்களில் சந்தேகம் வந்திட்டுது. ஓட்டோ சாரதியும் தடுத்து வைக்கப்பட்டவராம். "என்னை ஏன் வைச்சிருக்கிறியள்" அவர் கேட்க, பொறுப்பாக இருந்த உத்தியோகத்தர் சொன்ன பதில் இது: "அவர்கள் வந்தது கோச்சியிலை எண்டோ நான் சொல்லுறது. ஓட்டோவிலை வந்தவர்கள் எண்டு சொல்ல நீ இருக்க வேண்டாமோ. இரு." என்றவராம். இனி ஓட்டோக்காரர் தமது வாடிக்கையாளர்களை இனம், மொழி, ஊர், பெயர் விசாரிச்சோ சவாரி போறது? இப்படியே போனால் தலைநகரில் தமிழ் ஆட்களுக்குள்ள ஒரே வாகனம் கால்க ளாகத்தான் இருக்கும். அது சரி பாருங்கோ, சொந்தக் காலில் நிற்கி றது மட்டும்தானே நிரந்தரம்.

**க**னடாவிலை ரெண்டு எழுத்தாரின் ஊர்வலம் போகும்போது வெடிச்சத்தம் கேட்டதாம். பிறகு பொலிஸ் விசாரணை நடந்ததாம். அது வேறு காரணத்தோடு நடந்த தனிப்பட்ட சம்பவம். ஊர்வலம் போன பாதைக்கருகில் நடந்ததுதான் சந்தேகத்தை தந்தது எண்டு கண்டுபிடிச்சவையாம். கால நேரம் தெரியாமலோ சுடுறது? எங்கள் ஆட்கள் எங்கே போனாலும் இந்த வெடிச்சத்தம் மட்டும் துரத்தித் திரியுது பாருங்கோ.

**கி**ழக்கின் சிங்கத்தாருக்கும் கூட்டான கட்சியின் கொழும்பு பிரபலங்களுக்கும் இடையில் உள்ள கசமுசா விசயங்கள் நான் முந்தியே சொன்னவைதான். கொழும்பு கூட்டத்திலை அது வெடிச்சுப் போட்டுதாம். வெகுஜன சபையில் பேசுறதுக்கு சிங்கத்தார் தனக்கு இடம் தாறேல்லை எண்டு தங்கமானவருக்கு மனத்தாங்கலாம். தங்க மானவர் தனக்கு இடம் தந்து ஒதுங்காமல் விட்ட புகைச்சல் சம்பந் தமான வருத்தம் அதிலை சம்பந்தப்பட்டவருக்கு. நீலமானவர் எல்லாரையும் வெட்டி ஓடுறார் எண்டு புகைச்சல் சிங்கத்தாருக்கும், தங்கத்தாருக்கும். என்று தணியுமிந்த——— (என்ன தாகம் எண்டு நீங்களே கீறிட்ட இடத்தை நிரப்பிக் கொள்ளுங்கோ)

**ரெ**ண்டு எழுத்தாரிடம் நீர்மூழ்கிக் கப்பல் இருப்பதாக ஒரு வதந்தி பரவினது தெரியும்தானே. இலங்கை அரசிடமே நீர்மூழ்கி கிடையாது. அந்தளவு விலை. அது ஒரு புறமிருக்க, ரோந்துக்கு செல்லாமல் இருக்க விரும்பிய சிலர்தான் அந்தக் கதையை கட்டிவிட்டதாகத் தகவல். கதை சொல்லவும் ஒரு பக்குவம் தேவைதானே.

**இ**னி-சமீபத்தில் என் பார்வைக்கு வந்த இரண்டு ஹைக்கூ கவிதைகள்.

இருண்ட வீட்டுக்குள்
இலவச மின்சாரம்
மின்மினிப் பூச்சிகள்.

(செந்தில்)

இதழ்களில் முத்தமிட
அவள் மறுக்கவில்லை
புகைப்படத்தில் ஈரம்.

(மாணிக்கவாசகம்)

# முல்லையில் நடந்த மின்னல் தாக்குதல்

அரசியல் தொடர்

அற்புதன் எழுதுவது

34

## முல்லையில் குடியேற்றம்

முல்லைத்தீவுப் பகுதியில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் ஜே.ஆர். அரசாங்கக் காலத்தில் மேலும் தீவிர மாக்கப்பட்டன.

குடியேற்றங்களுக்கு பாதுகாப்பாக இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு திட்டமிட்டவகையில் ஒரு வலைப்பின்னல் உருவாக்கப்படும்.

படிப்படியாக குடியேற்றம் விரிவடையும். இராணுவ உதவியோடு தமிழ் மக்கள் மீது அச்சுறுத்தல் ஆரம்பிக்கப் படும்.

அதனால் தமது சொந்தக் கிராமங்களை விட்டு தமிழ் மக்கள் மெல்ல மெல்ல வெளியேறத் தொடங்குவர்.

திட்டமிட்ட குடியேற்றங்களின் நோக்கமே அதுதான்.

சுவர் இருந்தால்தானே சித்திரம் வரையலாம். தமிழ் மக்களுக்கு என்று ஒரு தொடர்ச்சியான நிலப்பரப்பே இல்லாமல் செய்துவிட்டால் தொல்லையில்லையல்லவா.

அது தவிர முல்லைத்தீவு கடல் வளம், வன வளம், வயல் வளம் உள்ள பூமி. மிகப்பிரதானமாக வடக்கையும் கிழக்கையும் இணைத்து நிற்கும் இதயம் போன்ற பகுதி.

அதனால், முல்லைத்தீவை சுருட்டிக் கொள்ளக் கூடிய குடியேற்றத் திட்டங்களை ஜே.ஆர்.அரசு முடுக்கி விட்டிருந்தது.



ஈ.பி.ஆர்.எல்.எஃப் இந்தியாவில் வெளியிட்ட செய்தி ஏடு

ஜீப் வண்டி சிதறிய சத்தத்தில் இருந்து முன்னால் சென்ற ஜீப்பில் இருந்தவர்களுக்கு விசயம் புரிந்து விட்டது.

அந்த ஜீப் வண்டி வேகமாகச் சென்று மறைந்தது.

பின்னால் வந்த ட்ரக் வண்டிச் சாரதி வண்டியை நிறுத்திவிட்டார். அதிலிருந்து குதித்த இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய ஆரம்பித்தனர்.

மோதல் தொடர்ந்தது. நான்கு இராணுவத்தினர் பலியானார்கள். புலிகள் தரப்பில் இழப்பு எதுவுமில்லை.

முல்லைத்தீவு முகாமிலிருந்து இராணுவத்தினர் விரைந்து வருவதற்கிடையில் புலிகள் அவ்விடத்தை விட்டுத் தப்பிச் சென்றனர்.

இத்தாக்குதல் நடவடிக்கைக்கு மாத்தையாவே பொறுப்பாக இருந்தார்.

தாக்குதல் நடைபெற்ற பின்னர் முல்லைத்தீவில் குடியேறியிருந்த சிங்கள மீனவக் குடும்பங்கள் பல தமது சொந்த ஊருக்குத் திரும்பிச் சென்றனர்.

## மீண்டும் ஒரு முயற்சி

1984 இல் ஈ.பி.ஆர்.எல்.எஃப். நடத்திய தாக்குதல்களில் ஒன்று கிளிநொச்சி பொலிஸ் நிலையம் மீதான தாக்குதல்.

ரெலோ சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தை தாக்கியிருந்தமையால், நல்ல சந்தர்ப்பத்தை தவறவிட்டோமே என்று ஈ.பி.ஆர்.எல்.எஃப். மக்கள் விடுதலைப்

ஈ.பி.ஆர்.எல்.எஃப்.அமைப்புக்கு 1984 இல் இரண்டாவது பெரிய தோல்வி அது.

## சுவையான சிக்கல்

இத்தாக்குதல் தொடர்பாக எழுந்த ஒரு சுவையான சிக்கல்.

கிளிநொச்சியில் தாக்குதல் நடந்த செய்தி தமிழ்நாட்டில் சென்னையில் இருந்த ஈ.பி.ஆர்.எல்.எஃப். அலுவலகத்திற்கு எட்டிவிட்டது.

சென்னையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பினர் ஈழமக்கள் தகவல் தொடர்பு நிலையம் (EPIC) என்னும் செய்தி நிறுவனத்தை நடத்திவந்தனர்.

இலங்கையில் நடக்கும் செய்திகளை உடனுக்குடன் வெளியுலகுக்கு தெரிவிப்பதில் அது முக்கிய பங்காற்றியது. அதற்கு பொறுப்பாக இருந்தவர் மித்திரன். (தற்போது விலகி வெளிநாட்டில் இருக்கிறார்)

அந்த நிறுவனத்தால் தமிழ் நாட்டில் வெளியிடப்பட்ட செய்தி ஏடு **'ஈழச் செய்தி'**. மாதாந்தம் பத்தாயிரம் பிரதிகள்வரை அப்போது தமிழ் நாட்டில் விற்பனை செய்யப் பட்டது. அதன் பொறுப்பாளராக இருந்தவர் ரமேஷ்.

தமிழ் நாட்டில் இருந்து இலங்கைச் செய்திகளை வெளியிட்டு வந்த இன்னொரு நிறுவனம் **தமிழ் தகவல் தொடர்பு மையம்.**

இதன் முக்கியஸ்தராக இருந்து கஷ்டப்பட்டவர் எஸ்.டி.சிவநாயகம். மற்றவர் மகேஸ்வரி வேலாயுதம்.

எந்த இயக்கச் சார்பும் இல்லாமல் ஓரளவு சுதந்திரமாக இயங்கியது தமிழ் தகவல் தொடர்பு மையம் (TIC)

## சிறு சந்தேகம்

கிளிநொச்சி பொலிஸ் நிலையத் தாக்குதல் செய்தியை ஈழமக்கள் தகவல் தொடர்பு நிலையம் உடனடியாக சகல இந்தியப் பத்திரிகைகள், மற்றும் வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்கு அறிவித்து விட்டது.

இச் செய்தி அப்போது சென்னையில் இருந்த ரெலோ தலைவர் சறீசபாரத்தினத்துக்கும் கிடைத்துவிட்டது.

சென்ற குழுவை டக்ளஸ் தேவானந்தா அழைத்துச் சென்றார். (ஏற்கனவே அவர் லெபனான் பயிற்சி பெற்றிருந் தவர்.) பயிற்சிக்கு சென்ற குழுவில் பெண்களும் இருந்தனர். குழுவுக்கு தயாபரன் பொறுப்பாக இருந்தார்.

புளொட் அமைப்பின் சார்பில் சென்ற குழுவில் மாணிக்கம்தாசன், ஜான்மாஸ்டர், மெண்டிஸ் ஆகியோர் முக்கியமானவர்கள். பெண்கள் யாரும் குழுவில் இருக்கவில்லை.

புளொட் சார்பில் சென்றவர்கள் பாலஸ்தீனப் போராளிகளோடு சேர்ந்து இஸ்ரேலியர்களுக்கு எதிரான தாக்குதல்களிலும் ஈடுபட்டனர். ஜான் மாஸ்டர் இஸ்ரேலிய டாங்கி ஒன்றை ஆர்.பி.ஜி ரக ஆயுதத்தால் தாக்கி சிதறடித்தார் என்று அப்போது கூறப்பட்டது.

ஜான்மாஸ்டர் தான் பின்னர் புளொட்டிலிருந்து வெளியேறி 'தீப்பொறி' என்ற பெயரில் இயங்கிய குழுவில் முக்கியமானவராக இருந்தார்.

இந்த நேரத்தில் இந்தியப் பத்திரிகையாளர் அனிதா பிரதாப் என்னும் பெண்மணி எழுதிய கட்டுரை ஒன்றில் இருந்து சில பகுதிகள்.

## கல்கியில் அனிதா

வெளியுலகம் முன்பு ஜே.ஆர். அரசு எப்படி கணிக்கப்பட்டது என்பதற்கு அது சான்று.

5.8.84 அன்று தமிழக சஞ்சிகை கல்கி அந்தக் கட்டுரையை வெளியிட்டு இருந்தது. இலங்கையில் ஒரு நடிகர் திலகம் என்பது தான் தலைப்பு.

"சினிமாக்காரர்கள் அரசியலுக்கு வரலாம்; அரசியல்வாதிகள் சினிமா எடுக்கலாம். ஆனால் சினிமாத்துறையுடன் சம்பந்தப்படாத ஒருவர் நாட்டின் ஜனாதிபதியாக இருப்பதும், அவர் ரொம்ப நன்றாக நாடகமாடத் தெரிந்தவராய் இருப்பதும் சிறீலங்காவில் மட்டுமே நடக்கிறது.

ஆமாம்! ஜெயவர்த்தனா போன்ற சிறந்த நடிகர் வேறு யாராவது உண்டா என்பது சந்தேகமே! அவரது நடிப்புத் திறமைக்கு



# கிளிநொச்சியில் ஒரு சறுக்கல்

அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

உடனடியாக அவர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். தலைவர் பத்மநாபாவோடு தொடர்பு கொண்டார்.

"கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தை நாம் தாக்குவதாக இருந்தது. நான் அனுமதியும் கொடுத்திருந்தேன். நீங்கள் தாக்கியதாக செய்தி கொடுத்துள்ளீர்கள். எதற்கும் ஒரு முறை உறுதி செய்து கொள்ளுங்கள். நானும் அங்கு தொடர்பு கொண்டு எனது ஆட்களிடம் கேட்கிறேன்."

என்று சொன்னார் சிறீ. இதனால் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்புக்கும் குழப்பம்.


விமான எதிர்ப்புத் துப்பாக்கியை இயக்குவதில் பாலஸ்தீனத்தில் பயிற்சியில் ஈடுபட்டுள்ள ஒரு போராளி. விமான எதிர்ப்பு துப்பாக்கி என்பதும் விமான எதிர்ப்பு ஏவுகணை என்பதும் வேறானவை என்பது குறிப்பிடத்தக்கது. ஏவுகணைகள் விமானத்தை அது வெளியிடும் வெப்பத்தை வைத்தும் அல்லது உலோகத்தை மோப்பம் பிடித்தும் துரத்தி தாக்கும் வல்லமை கொண்ட ரகங்களில் இருக்கின்றன.

# இலங்கையில் ஒரு நடிகர் திலகம்

1984 இல் சிங்கள-தமிழ் மீனவர்கள் மத்தியில் முல்லைத்தீவில் பிரச்சனைகள் ஏற்பட்டன.

தமிழ் மீனவர்களின் வலைகளும், வள்ளங்களும் சிங்கள மீனவர்களால் அழிக்கப்பட்டன. படையினரின் ஆசீர்வாதத்தோடுதான் அவை நடைபெற்றன.

முல்லைத்தீவு இராணுவ முகாம்தான் குடியேற்றங்களுக்கு பாதுகாப்பு அரணாக செயற்பட்டது.

## நிலக்கண்ணிகள்

1984 செப்டம்பர் 10 ம் திகதி. முல்லைத்தீவிலிருந்து ஏழு மைல் தூரத்தில் இருக்கிறது செம்மலைக் கிராமம்.

அங்கு புலிகளின் தாக்குதல் பிரிவொன்று அதிரடித் தாக்குதலுக்கு ஆயத்தமானது.

அந்தப் பிரிவில் 16 பேர் இருந்தார்கள். முல்லைத்தீவிலிருந்து செம்மலைக்கு ஊடாகச் செல்வதுதான் முல்லைத்தீவு கொக்கிளாய் பிரதான பாதை.

பிரதான பாதையில் புலிகள் நிலக் கண்ணிகளை புதைத்துவிட்டுக் காத்திருந் தனர்.

நேரம், காலை 10-15 மணி. ஒரு ட்ரக் வண்டி, இரண்டு ஜீப் வண்டிகள் சகிதம் இராணுவ அணி பிரதான பாதையில் வரத் தொடங்கியது.

நிலக்கண்ணி புதைக்கப்பட்டிருந்த இடத்துக்கு வந்தது ஜீப் வண்டி.

நிலக்கண்ணி வெடிக்கவில்லை. ஜீப் தப்பிவிட்டது. இரண்டாவது ஜீப் வண்டியும் அந்த இடத்தைக் கடந்து கொண்டிருந்த போது-

நிலக்கண்ணி வெடித்தது.

இரண்டாவது ஜீப் வண்டி சிதறியது.

படையின் யாழ் உறுப்பினர்களுக்கு வருத்தம்.

காரைநகர் கடற்படை முகாம் மீது தனது பொறுப்பின்கீழ் நடை பெற்ற முதலாவது தாக்குதல் தோல்வியில் முடிந்தமையால் சுரேஸ் பிரேமச்சந்திரனுக்கும் கவலை.

அதனால், கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தை தாக்கி அழிப்பது என்று திட்டமிட்டார்கள்.

தகவல் திரட்டப்பட்டன. கவச வாகனம் ஒன்றும் தயார் செய்யப் பட்டது.

கவச வாகனத்தில் இருந்து துப்பாக்கிப் பிரேயாகம் செய்தபடி பொலிஸ் நிலையத்துக்குள் முதல் அணி பிரவேசிக்க வேண்டும். அதன்பின்னர் ஏனைய தாக்குதல் பிரிவுகள் செல்ல வேண்டும் என்று திட்டமிடப்பட்டது. திட்டம் சரி!

தாக்குதல் நடத்த அணிகள் விரைந்தன. கவச வாகனம் உள்ளே செல்ல முடியவில்லை. பொலிஸ் நிலைய பிரதான வாயிலில் உழவு இயந்திரம் ஒன்று குறுக்கே நிறுத்தப்பட்டிருந்தது.

அதனால் தான் கவச வாகனம் உள்ளே செல்ல வழியின்றிப் போனது. பொலிசார் உஷாராகி துப்பாக்கிப் பிரயோகம் செய்ய ஆரம்பித்தனர்.

இதேவேளை பொலிஸ் நிலையம் மீது போராளிகள் மோட்டார் ஷெல் தாக்குதலும் நடத்தினர். மோட்டார் ஷெல்கள் பொலிஸ் நிலைய வளாகத்துக்குள் இருந்த மரங்களிலும் கிளைகளிலும் பட்டு குறிதவறி விழுந்து வெடித்தன.

தாக்குதலை நிறுத்திவிட்டு திரும்புமாறு கூறிவிட்டார் சுரேஸ் பிரேமச்சந்திரன்.



ரெலோதான் தாக்கியிருந்தால் பெரிய அவமானம். செய்தி கொடுத்தாகி விட்டதல்லவா.

மறுநாள் யாழ்ப்பாணத்திலிருந்து தொலைபேசி மூலம் ஈ.பி.ஆர்.எல்.எஃப். தாக்குதல் நடத்திய செய்தி சென்னைக்கு மீண்டும் உறுதிப் படுத்தப்பட்டது. அதன் பின்னர் தான் சென்னையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப்.பிற்கு நிம்மதி. சிறீயும் யாழ்பாணத்திலிருந்து உண்மையை அறிந்துகொண்டார்.

அந்தச் செய்தி மட்டும் தவறாக அமைந்திருந்தால் ஈழமக்கள் தகவல் தொடர்பு நிலையம் அதன்பின்னர் மூடப் பட்டிருக்க வேண்டியதுதான்.

## மீண்டும் பாலஸ்தீனத்தில்.

பாலஸ்தீனப் போராளிகளிடம் தமிழ் இயக்கப் போராளிகள் பயிற்சி பெற்றது குறித்து முன்னர் குறிப்பிட்டிருந்தேன்.

1984 இன் இறுதியில் மீண்டும் தமிழ் போராளிகள் பாலஸ்தீனப் பயிற்சிக்குச் சென்றனர்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்.அமைப்பும், புளொட் அமைப்பும் தனித்தனியே பாலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணியோடு (PFLP)தொடர்பு கொண்டன.

இரண்டு அமைப்புக்களுக்கும் தனித் தனியே பயிற்சி வழங்க பாலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணி முன்வந்தது.

ஈ.பி.ஆர்.எல்.எஃப்.அமைப்பின் சார்பாக

ஆஸ்கார் அவார்டே தரலாம்.

நான் போயிருந்த சமயத்தில் ஜயவர்த்தனாவின் உறவுக்காரப் பிள்ளை-பெயர் பிலிப் உபாலி-வியாபார விஷயமாய் கிழக்கிந்திய நாடுகளுக்குப் போய்விட்டு திரும்பும் போது, பாதி வழியில் விமானமே காணாமல் போய் விட்டது.

ஜெயவர்த்தனா நிலை குழைந்து போயிருந்தார். இலங்கையிலே ஒரே பரபரப்பு. காணாமல் போன விமானத்தைத் தேடும் முயற்சி தீவிரமாய் நடந்துகொண்டிருந்தது.

(உபாலியைப் பற்றி: இலங்கையின் மிகப் பெரிய பணக்காரன். அவரைத் தன் வாரிசாக உருவாக்கிக் கொண்டிருந்தார் ஜெயவர்த்தனா. நான் இந்தியா வந்த பிறகு அந்த விமானத்தின் சில பகுதிகள் மலாக்கா பகுதியில் கண்டுபிடிக்கப்பட்டதாக அறிந்து கொண்டேன்.)

ஈழத் தமிழர் பிரச்சனையில் "நான் ஒன்றும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறேன்" என்று ஜெயவர்த்தனா சொல்வதை என்னால் நம்ப முடியவில்லை. ஏதோ சில காரணங்களால் அப்படி நடிக்கிறாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

**ஜெயவர்த்தனாவை சுருக்கமாக விமர்சிக்க வேண்டுமெனில் 'அவர் தந்திரத்தில் நரி; நழுவுவதில் விலாங்கு மீன்!"**

இதுதான் அனிதாப் பிரதாப் என்ற நிருபரின் படப்பிடிப்பு.

## உபாலி மர்மம்

அனிதாவின் கட்டுரையின் இடையில் கூறப்பட்டுள்ள உபாலி விடயம் தொடர்பான மர்மம் 84 முதல் இன்றுவரை நீடிக்கிறது.

ஜே.ஆர்.உபாலியை தனது வாரிசாக நியமிக்கப் பார்த்தார். உபாலி பெரும் பணக்காரர் மட்டுமல்ல பிரபல சிங்கள, ஆங்கில தினசரிகள் அவரின் உரிமையாக இருந்தன. (இப்போது அவரது குடும்பத்தவர்களிடம் இருக்கின்றன)

இதனால் பிரேமதாசாதான் உபாலி மறைவுக்கு திட்டமிட்டார் என்று அப்போது எழுந்த பேச்சும் இதுவரை அப்படியே இருக்கிறது.

## மட்டக்களப்பில்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ளது களுவாஞ்சிக்குடி. அங்குள்ள பொலிஸ் நிலையத்தை தாக்குவதற்கு புலிகள் திட்டமிட்டனர்.

தாக்குதலுக்கு புலிகள் தயாராகிக் கொண்டிருந்த தகவல் பொலிசாருக்கு கிடைத்துவிட்டது.

தாக்குதல் எந்தத் திகதியில் எத்தனை மணிக்கு நடத்தப்படும் என்பதையும் பொலிசார் ஓரளவு தெரிந்து வைத்திருந்தார்கள்.

செப்டம்பர் 22,1984- புலிகள் வாகனமொன்றில் புறப்பட்டார்கள்

பொலிசார் எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள்.

(தொடர்ந்து வரும்...)

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# 'எல்லாளன் படை' பற்றி பிரஸ்தாபித்த வேளையில்

அலசுவது—இராஜதந்திரி



# கெமுனு படைப்பிரிவு மீது மண்டைதீவுத் தாக்குதல்!





யாழ்குடாநாட்டில் மண்டைதீவில் தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பாரிய தாக்குதல் இராணுவத்தினருக்கு பலத்த இழப்பைக் கொடுத்துள்ளது.

சுமார் 100 படையினர் மண்டைதீவில் உயிரிழந்துள்ளனர். அரசு தரப்பினர், புலிகள் தரப்பிலும் கணிசமான இழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். ஆனால் யாழ்ப்பாணத்தில் புலிகளின்

அறிவிப்பில் அவர்களது தரப்பில் இழப்புகள் சொற்பமாகவே இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஏப்ரல் 19ம் திகதி மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்த பின்னர் புலிகள் நடத்திய பெரும் தாக்குதலாக மண்டைதீவு முற்றுகை விளங்குகின்றது. அத்துடன் மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்ததை அடுத்து வட பகுதியில் புலிகள் மேற்கொண்ட முதலாவது பெரும் தாக்குதலாகவும் மண்டைத்தீவு நடவடிக்கை காணப்படுகின்றது.

இத் தடவை கிழக்குப் பகுதியிலேயே கடந்த இரு மாதங்களாக எல்.ரி.ரி.ஈ.யினரின் தாக்குதல்கள் மும்முரமடைந்திருந்தன. ஆனால் மண்டைதீவுத் தாக்குதல் வடக்கிலும் எல்.ரி.ரி.ஈ.யினர் மிகுந்த விழிப்புடன் இருப்பதனைப் புலனாக்கியுள்ளது.

கடந்த பத்துவருட கால யுத்தத்தில் யாழ் குடா நாடு ஒரு பூரண இராணுவ முற்றுகைக்குட்பட்ட பிரதேசமாகவே மாறியுள்ளது. யாழ் குடாநாட்டின் வரைபடத்தை எடுத்துவைத்து நோக்கும் பட்சத்தில் பூநகரி, ஆனையிறவு, காரைநகர், காங்கேசன்துறை, பலாலி, பண்டத்தரிப்பு ஆகிய பிரதேசங்களில் படையினர் பெருமளவில் நிலை கொண்டிருப்பதனை அறியமுடியும்.

இவ்வகையில் மண்டைதீவு இராணுவ முகாமும் வடப்குதியை முழுமையாகச் சுற்றிவளைக்கும் வகையிலேயே படையினரால் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

'ஈழப்போர் 2' ஆரம்பமான வேளைகளிலேயே மண்டைதீவு முகாம் செயல்பட ஆரம்பித்தது.

யாழ்ப்பாணம் கோட்டைக்குள்ளிருந்த படையினரைக் காப்பாற்றும் விதத்திலேயே மண்டைதீவு முகாம் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

இந்தியப் படையினர் இலங்கையிலிருந்து வாபஸ் பெற்றதைத் தொடர்ந்து இலங்கை அரச படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையே 'ஈழப்போர் 2' மூண்டிருந்தது.

அப்போரில் யாழ்பாணம் கோட்டை இராணுவ முகாமே எல்.ரி.ரி.ஈ.யினரின் பிரதான இலக்காக இருந்தது. கோட்டை இராணுவத்தை புறங்காணச் செய்யும் வகையில் அவர்கள் கோட்டையைச் சுற்றி மாபெரும் முற்றுகையை நடத்தியிருந்தார்கள்.

டச்சுக்காரர்கள், அதாவது ஒல்லாந்துக் காரர்கள் தென்கிழக்காசியாவில் தமது ஆதிக்க விஸ்தரிப்பை மேற்கொள்ளும் விதத்தில் கட்டியெழுப்பியவையே யாழப்பாணம் டச்சுக் கோட்டை, மற்றும் ஊர்காவற்றுறை கடல் கோட்டை என்பவையாகும்.

யாழ்ப்பாணக் கோட்டையை கட்டியெழுப்புவதற்காக யாழ்ப்பாணம் நல்லூர் கந்தசாமி கோயிலை இடித்து அதன் கற்களையும் டச்சுக்காரர் அன்று அப்புறப்படுத்தியிருந்தனர் எனவும் வரலாற்றுக் கதைகள் தெரிவிக்கின்றன.

கொத்தளங்கள், அகழிகள் என்பனவற்றுடன் நட்சத்திர வடிவில் யாழ்ப்பாணக் கோட்டை காணப்படுகின்றது. இக்கோட்டையின் கட்டமைப்பு பாரிய படை எடுப்பு மற்றும் அந்நியர்களின் ஊடுருவல் என்பவற்றை எதிர்பார்த்தே உருவாக்கப்பட்டது போல காணப்படுகின்றது.

இந்நிலையில் டச்சுக்காரர்கள் ஆட்சியில் யாழ்ப்பாணக் கோட்டை கட்டப்பட்ட பின்னர், அக்கோட்டையை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஒரு முழு அளவிலான முற்றுகையாகவே எல்.ரி.ரி.ஈ.யினரின் 'ஈழப்போர் 2' யுத்த நடவடிக்கை விளங்கியிருந்தது.

எல்.ரி.ரி.ஈ.யினர் தொடுத்த பெரும் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாதவகையில், கோட்டைக்குள் நிலை கொண்டிருந்த படையினர் புறமுதுகு காட்டியிருந்தனர்.

வடபகுதியின் பிரபலம் மிக்க இராணுவத் தளபதியாக விளங்கிய டென்ஸில் கொப்பேகடுவ, மண்டைத்தீவு வரை வந்து கோட்டை இராணுவத்தினரைக் காப்பாற்றும் நடவடிக்கைகளில் அன்று ஈடுபட்டிருந்தார்.

எல்.ரி.ரி.ஈ.யினரின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத படையினர் யாழ் கோட்டைக்குள்ளிருந்து அதன் பின்புறப் பகுதிவழியாக யாழப்பாணம் பண்ணைக் கடலைக் கடந்து மண்டைதீவைச் சென்றடைந்திருந்தனர்.

படையினரின் படகுகள் அன்று கோட்டையில் சிக்குண்ட இராணுவத்தினரைக் காப்பாற்றுவதற்காக மண்டைதீவிலிருந்தே வந்திருந்தன. இதுதவிர எல்.ரி.ரி.ஈ.யினரை எதிர்கொள்ளும் விதத்தில் அன்று மண்டைதீவிலிருந்தே ஷெல், மற்றும் பீரங்கி வேட்டுக்களைப் படையினர் தீர்த்திருந்தனர்.

இந்நிலையில் மண்டைதீவு இராணுவ முகாம் கோட்டை இராணுவ முற்றுகையின்போதே ஒரு கேந்திர ஸ்தானமாக விளங்கியதுடன் தற்போது படையினரின் கட்டுப்பாட்டிலிருக்கும் வடபகுதியின் தீவுப் பிரதேசத்தைக் கண்காணிக்கும் ஒரு முக்கிய இராணுவ அவதானிப்பு மையங்களில் ஒன்றாகவும் இருந்து வருகிறது.

1993 ம் ஆண்டு பூநகரி மீது எல்.ரி.ரி.ஈ.யினர் மேற்கொண்ட 'தவளைப்பாய்ச்சல்' என்று பெயரிடப்பட்ட இராணுவ நடவடிக்கையின் பின்னர் வடக்கே மேற்கொள்ளப் பட்ட மாபெரும் தாக்குதலாக மண்டைத் தீவுத் தாக்குதல் விளங்குகின்றது.

கூடவே ஜனாதிபதி சந்திரிகா பதவிக்கு வந்த பின்னர் இராணுவ முகாம் ஒன்றின்மீது புலிகள் மேற்கொண்ட முதலாவது பெரும் தாக்குதலாகவும் இது விளங்குகின்றது.

கடந்த 27ந்திகதி அதிகாலை மண்டைதீவு மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது.

மண்டைதீவில் நிலை கொண்டிருந்த படையினர் இலங்கை இராணுவத்தின் 'கெமுனு' படைப்பிரிவைச் சேர்ந்தவர்கள். இப்படைப்பிரிவு இலங்கை இராணுவத்தின் ஒரு சிரேஷ்ட பிரிவாக இருந்து வருகின்றது.

எல்லாளன் என்ற தமிழரசனை வெற்றி கொண்டதாகத் தெரிவிக்கப்படும் துட்டகைமுனு என்ற இலங்கை மன்னனின் பெயரையே 'கெமுனு' என்று அப்படைப்பிரிவு தாங்கியிருக்கின்றது.

இலங்கையின் அரசியல் வரலாற்றை நோக்கும் போது தமிழ்-சிங்கள இனவாதக்கண்ணோட்டத்துக்கு வித்திடும் ஒரு வரலாற்றுக் கதையாகவும் துட்டகைமுனு-எல்லாளன் பற்றிய கதை விளங்குகின்றது.

எல்லாளன் தனது ஆட்சியை அநுராதபுரத்தில் மேற்கொண்டிருந்த போது துட்டகைமுனு பெரும் படையுடன் வந்து எல்லாளனைப் போரில் வென்று அநுராதபுரத்தைக் கைப்பற்றினான் என்கிறது வரலாற்றுக் கதை.

போரில் எல்லாளனைக் கொன்றபோதிலும் அவன்மீது அதீத மதிப்பையும், நல்லெண்ணத்தையும் துட்டகைமுனு மன்னன் கொண்டிருந்தான் எனவும், தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் சிங்களச் சிறுவர்களுக்கான பாடப்புத்தகத்தில் கூட எல்லாளன் துட்டகைமுனு பற்றிய வரலாற்றுக்கதை ஒரு பாடமாகவும் புகட்டப்படுகின்றது.

சுதந்திர இலங்கையின் கல்விக் கொள்கையின் அடிப்படையிலேயே எல்லாளன்-துட்டகைமுனு பற்றிய கதையும் பாடப்புத்தகத்தில் இடம்பெற்றிருக்கக் காணப்படுகின்றது.

இலங்கையின் பிரபல இராஜதந்திரியும், தற்போதைய தென்மாகாண ஆளுநருமான டாக்டர் நெவில் கனகரட்ண முன்பு ஒரு வைபவமொன்றில் பேசியபோது இந்த எல்லாளன்-துட்டகைமுனு வரலாற்றுக் கதைபற்றியும் தமது கண்ணோட்டத்தை வெளியிட்டிருந்தார்.

"எல்லாளனை துட்டகைமுனு தோற்கடித்தது ஒரு வரலாற்றுக் கதையாக இருக்கலாம். ஆனால் அதன் அடிப்படையில் எமது சிந்தனைகள், உறவுகள் இருப்பதே இலங்கையின் இன ஒற்றுமைக்கு ஊறு ஏற்படுவதாக இருக்கின்றது" என்று ஆளுநர் டாக்டர் நெவில் கனகரட்ன குறிப்பிட்டிருந்தார்.

அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், தாம் கொழும்பு ரோயல் (Royal College) கல்லூரியில் கல்வி பயின்றதாகவும், தமது பாடசாலை நாட்களில் இத்தகைய இனத்துவேஷமான கருத்துக்களோ, சிந்தனைகளோ எவ்வகையிலும் தோன்றியிருக்கவில்லை எனவும் கூறினார்.

கூடவே தமது வகுப்பறையில் பல்வேறு இனங்களையும் சேர்ந்த மாணவர்கள் இருந்ததாகவும், ஆனால் இன, மத, பிரதேச வேறுபாடுகள் என்பன தம்மிடம் அறவே இருந்திருக்கவில்லை என்றும் டாக்டர் நெவில் கனகரட்ண தமது உரையில் கூறியிருந்தார்.

எனவே, இன்று இலங்கையில் தமிழ்-சிங்கள இனங்களிடையே இனத்துவேஷம் ஏற்படவும், அதனால் ஏற்பட்ட விளைவுகள் இன்று கொடிய போராக வெடித்திருப்பதற்கும் அரசியல் கொள்கை முதற்கொண்டு கல்விக் கொள்கை வரை துட்டகைமுனு, எல்லாளன் கதை ஓர் உயிரோட்டமாக இருந்து வந்துள்ளதும் முக்கிய காரணிகளில் ஒன்றாக கருதலாம்.

இந்நிலையில் கடந்த வாரங்களில் எல்.ரி.ரி.ஈ.யினரின் ஒரு இராணுவப் பிரிவு என்று தெரிவிக்கப்படும் எல்லாளன் படைப்பிரிவு பற்றியும் அதன் நடவடிக்கைகள் பற்றியும் பாதுகாப்பு வட்டாரங்களில் பிரஸ்தாபிக்கப்பட்ட தருணத்திலேயே தற்போது மண்டைத்தீவில் துட்டகைமுனு மன்னனின் பெயரைத்தாங்கிய 'கெமுனு' படைப்பிரிவு மோசமான தாக்குதலுக்குள்ளாகியுள்ளது.

கடந்த ஏப்ரல் 19ம் திகதி மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் முறிவடைந்ததையடுத்து கிழக்கிலங்கையிலேயே எல்.ரி.ரி.ஈ.யினர் பெருமளவில் தமது கைவரிசையைக் காட்டியிருந்தனர்.

இதனையடுத்து வடக்கே தொண்டமானாறுப் பகுதியிலும், அச்சுவேலிப் பகுதியிலும் இராணுவத்தினர் எல்.ரி.ரி.ஈ.யினர் மீது தாக்குதலொன்றை நடத்தியிருந்தனர்.

பலாலி இராணுவத் தளத்தையும், சுற்றாடல் பகுதிகளையும் எல்.ரி.ரி.ஈ.யினர் ஊடுருவுவதைத் தடுத்து நிறுத்துவதே தொண்டமானாறு, அச்சுவேலித் தாக்குதல்களின் நோக்கமாக இருந்ததென்று படையினர் தெரிவித்திருந்தனர்.

எனவே வடக்கே இராணுவ நடவடிக்கைகளின் சிரசாக இருக்கும் பலாலித்தளத்தை பாதுகாக்கும் பந்தோபஸ்த்துக்களைப் படையினர் மேற்கொண்டிருந்த தருணத்திலேயே முற்றிலும் எதிர்பாராத விதத்தில் யாழ்குடாநாட்டில் மண்டைதீவு முகாம் பெருந்தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.

மண்டைதீவு முகாம் மீதான தாக்குதலில் எல்.ரி.ரி.ஈ.யினரின் கடற்புலிகளும் பங்குபற்றியிருந்தனர். என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எது எப்படியிருந்த போதிலும் மண்டைதீவுத் தாக்குதலின் மூலம் ஒன்று மட்டும் தெட்டத் தெளிவாகியுள்ளது.

அதாவது படையினர் வடபுலத்தின் பெருநிலப்பரப்பில் நிலை கொள்வதென்பது எவ்வகையிலும் சாத்தியப்பட்டுவராது என்பதே இன்று நிதர்சனமாகியுள்ளது.

ஆளணிகள், விமானங்கள், கப்பல்களுடன் வடக்கு-கிழக்கை முற்று முழுதாக ஆக்கிரமிப்பதற்கு இலங்கை ஒரு வல்லரசு அல்ல.

இந்நிலையில் எல்.ரி.ரி.ஈ.யினருடனான அரசியல் அணுகுமுறைகளை 'விட்டகுறை, தொட்ட குறை' என்ற நிலையிலிருந்து மீண்டும் ஆரம்பிப்பதே உசிதமானதாகும். இதன்மூலம் அரசியல் தீர்வை விரைந்து எட்டாவிடினும், உயிரிழப்புக்களையாவது பெருமளவில் தவிர்த்துக் கொள்ளமுடியும்.

**'விட்ட குறை தொட்ட குறை, என்ற நிலையிலிருந்து எல்.ரி.ரி.ஈ.யினருடன் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும் !**

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

**த**ன் முன்பாக வைக்கப்பட்ட இரண்டு கைக்குண்டுகளையும், ஒரு கைத் துப்பாக்கியையும் மலர்ந்த விழிகளால் நோக்கினாள் லைலா காலித்.

பொறுப்பாளர் லைலாவிடம் சொன்னார்,

"கைக் குண்டுகள் உனக்கு. கைத் துப்பாக்கி இன்னொரு தோழருக்கு!"

யாரந்த இன்னொருவர் என்பது

**2 தருவது ரசிகன்**

போல விழிகள் உயர்த்திப் பொறுப்பாளரைப் பார்த்தாள். அவர் புன்னகைத்தபடி சொன்னார்,

"ரோமில் உனக்காக ஒருவர் காத்திருப்பார். இதுதான் அவர்."

பொறுப்பாளர் நீட்டிய புகைப் படத்தில் ரோமில் லைலா காலித் சந்திக்க வேண்டிய இளைஞன் வசீகரமாய் சிரித்துக் கொண்டிருந்தான்.

"இவர் என்னை எப்படி.....?"

"யோசிக்கவேண்டாம் தோழர் லைலா. உங்கள் புகைப்படம் இப்போது அவரிடம் சேர்ந்திருக்கும். நீங்கள் நேராக ரோம் விமான நிலையம் செல்கிறீர்கள். அங்கு அவர் உங்களோடு சேர்ந்து கொள்வார்."

"நாங்கள் கடத்த வேண்டிய விமானம்."

"போயிங் 707,அமெரிக்க விமானம் ரோமிலிருந்து எதன்ஸ் நகருக்கு புறப்படத் தயாராக நிற்கும். புறப்படும் ஆனால் போய்ச் சேராது."

"ஏன் தோழர்?"

"தோழர் லைலா காலித் அதனை டமஸ்கஸ் விமான நிலையத்திற்கு அன்போடு அழைத்து வந்துவிடுவாரே!"

லைலாவின் உதட்டில் சட்டென்று வெடித்தது சிரிப்பு. மடியிலே மரணம் சுமக்கும் போதும் உதட்டிலே புன்னகை மலர்ந்திருக்கும்.

□□

**ரோம்** விமான நிலையம் புரட்சியாளர்கள் போல சுறுசுறுப்பாக இருந்தது.

இந்த நகரம்-பற்றி எரிந்து கொண்டிருந்த போதுதானே நீரோ மன்னன் நிம்மதியாக பிடில் வாசித்துக் கொண்டிருந்தான்!

அடுத்து நேரப்போகும் விபரீதம் அறியாமல் விமான நிலையம் மகிழ்ச்சியாக இயங்கிக் கொண்டிருந்தது.

இத்தாலியன் மொழியில் அறிவிப்புக்கள், அழகான பெண்களின் நளினமான உச்சரிப்பில் விமான நிலையத்தை உற்சாகப்படுத்திக் கொண்டிருக்க,

"ஹலோ" என்றபடி லைலாவுக்கு அருகில் வந்த இளைஞன், எதிர் பார்த்ததைவிட இளமையாக இருந்தான்.

அறிமுகமற்றவர்கள் போல நடந்து கொள்ளக் கூடாது; அது சந்தேகத்தை ஏற்படுத்தும்.

லைலாவும், அவனும் ஏறக்குறைய காதலர்கள் போல நெருக்கமாய் நடந்து, வேண்டுமென்றே அதிகமாகக் குழைந்து, தேவையானளவு சிரித்து,

"எல்லாம் தயாராக இருக்கிறதா?"

என்றான் மிக மெல்லிய குரலில்.

"ஆம்"

என்ற லைலாவின் உடலில் கைக்குண்டுகள் பொருத்தப்பட்டிருந்தன. கைத் துப்பாக்கியும் மறைத்து வைக்கப் பட்டிருந்தது.

பாதுகாப்பு அதிகாரி ஒருவர் அவர்களைக் கடந்த போது,

"டியர்! எதன்ஸ் எங்களுக்கு சொர்க்கமாகப் போகிறது பார்!"

என்றான், அவன் சொன்னது காதில் வாங்கி, தனக்குள் சிரித்துக் கொண்டு,

தனது காதலியை நினைத்துக் கொண்டு போனார் பாதுகாப்பு அதிகாரி.

விமானத்தில் ஏறுவதற்கு முன்னர் இருவரும் சோதனையிடப்பட்டார்கள்.

பரிசோதனைக் கருவி லைலாவைத் தடவிப் பார்த்துவிட்டு, 'நல்ல பிள்ளை உள்ளே ஒன்றுமேயில்லை,' என்று சொன்னது.

பரிசோதனைக் கருவிகளை ஏமாற்றி விடக் கூடிய முறையில் லைலா காலித்தின் உடம்போடு கைக்குண்டுகளும், கைத் துப்பாக்கியும் பத்திரமாகப் பொருத்தி வைக்கப்பட்டிருந்தன.

விமானப் படிக்கட்டில் பணிப்பெண் தயாராக வைத்திருந்த 'ரெடிமேட்' புன்னகையை வழியவிட்டுக் கொண்டிருந்தாள்.

விமான இருக்கைகளில் எதன்சுக்குப் போகும் அவசரத்தில் பயணிகள்.

விமானத்தின் உள்ளே கழிவறைக்குள் போனாள் லைலா. உடம்போடு பொருத்தியிருந்த கைக்குண்டுகளை விடுவித்தாள். கைத்துப்பாக்கியையும் எடுத்துக் கொண்டாள்.

விமானம் நீல வானத்தை முத்தமிடலாமா என்று துடிப்பது போல உயர்ந்து பறந்து கொண்டிருந்தது.

கைத்துப்பாக்கியை தனது தோழனின் கரத்தில் கொடுத்தாள் லைலா.

கொடுத்துவிட்டு நிமிர்ந்த நடையோடு விமானியின் அறைக்குள் சென்றாள்.

பயணிகள், விமானப் பணியாட்கள் நிலமையைப் புரிந்து கொள்வதற்கிடையில் மின்னல் வேகத்தில் அத்தனையும் நடந்தன.

விமானியின் அருகே போன லைலா,

"நண்பரே! இங்கே பாருங்கள்"

என்றாள். பார்த்தவர் அவள் கைகளில் இருந்த கைக்குண்டுகளைக் கண்டதும் புரிந்து கொண்டார். முகத்தில் அடர்த்தியான அதிர்ச்சி. சக விமானியை நோக்கினார். அவரும் திகைத்துப் பார்த்துக் கொண்டிருந்தார். லைலா பேசினாள்:

"விமானம் இப்போது எமது கட்டுப்பாட்டில் இருக்கிறது. நாங்கள் சொல்வதற்கு கட்டுப்பட்டு நடப்பதுதான் பெறுமதியான உங்கள் உயிர்களுக்கு நல்லது."

விமானி கேட்டார்,

"நீ என்ன சொல்கிறாய் பெண்ணே?"

"இந்த விமானம் எங்கே போகிறது?"

"எதன்ஸ் நகருக்கு."

"நான் என்ன சொல்கிறேன் என்றால், எதன்சுக்குப் போக வேண்டாம், டமஸ்கஸ் விமான நிலையத்திற்கு போகலாம் என்கிறேன்."

விமானி யோசித்தார்.

"அது சிரமம் பெண்ணே!"

லைலா சிரித்தாள்.

"எங்கள் கோரிக்கைக்கு உடன்படா விட்டால்தான் சிரமம் நண்பரே! சிரமம்! நாங்கள் பயங்கரவாதிகளல்ல, விடுதலைப் போராளிகள்! ஆனால், முன்வைத்த கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால் பயங்கரவாதிகளாக அல்ல பயங்கரமானவர்களாக மாறிவிடுவோம். புரிகிறதா? இந்த விமானத்தின் விதி எமது கையில், விமானத்தில் உள்ள பயணிகளின் கதி உமது முடிவில்! என்ன, டமஸ்கஸ் போகலாமா?"

"ஓ.கே!"

"நன்றி நண்பரே! நமக்காக அல்ல இங்குள்ள பயணிகளுக்காக!"

சொல்லிவிட்டு, விமானியின் அறையில் இருந்தே பயணிகளோடு பேசினாள் லைலா.

"நண்பர்களே! நாம் உங்கள் எதிரிகளல்ல. உங்களைத் துப்பாக்கி முனையில் வைத்திருப்பதையிட்டு நாம் வருந்துகிறோம். தேவை கருதி இப்படிச் செய்ய வேண்டியதாகிவிட்டது. மன்னியுங்கள். நீங்கள் எங்களோடு ஒத்துழைத்தால் என் நண்பனின் கைத்துப்பாக்கி கண்டிப்பாக அமைதி காக்கும்."

டமஸ்கஸ் விமான நிலையத்துக்கு விமானி தகவல் சொன்னார். இறங்க அனுமதி கேட்டார். அனுமதி மறுத்தால் பயணிகள் உயிர் விரயமாகும் என்று சொன்னார். அனுமதி கிடைத்தது.

டமஸ்கஸ் விமான நிலையம். மாலை ஐந்து மணி. விமானம் தரையிறங்கியது.

விமானப் பயணிகளை வெளியேறச் சொன்னாள் லைலா.

மரணத்தில் இருந்து மீண்ட சந்தோசம். சிலர் அழுதே விட்டனர். அனைவரும் வெளியேறிய பின் லைலா விமானத்தை ஒரு தடவை முழுமையாகப் பார்த்தாள்.

நிதானமாக தனது கைக்குண்டில் இருந்த 'கிளிப்பைக்' கழற்றிப் போட்டுவிட்டு விமானத்துக்குள் குண்டை வீசினாள்.

வீசிவிட்டு லைலாவும் அவள் தோழனும் விலகி ஓடி தரையில் விழுந்து படுத்துக் கொள்ள,

விமானம் வெடித்துச் சிதறியது. டமஸ்கஸ் அந்த ஓசையால் அதிர்ந்தது.

பாலஸ்தீன போராட்டத்தில் அதுவே முதலாவது விமானக் கடத்தல்.

'லைலா காலித்' தமது இயக்கத்தால் பாராட்டப்பட்டாள்.

உலகெங்கும் பேசப்படும் அளவுக்கு பிரபலமான பெண் போராளியானாள்.

அது ஆரம்பம்!

விமானத் தகர்ப்பு உலகின் கவனத்தை தம் பக்கம் திருப்பியதால் பாலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணி (P.F.L.P) யோசித்தது.

விமானக் கடத்தல் நடவடிக்கைகளை போராட்டத்தின் ஒரு அம்சமாக்கினால் என்ன?

செய்யலாமே! திட்டம் தயாரானது நடவடிக்கைக்கு போராளிகள் தயாரானார்கள்.

அதில் முக்கியமானவளாக லைலா காலித்.

அந்த நடவடிக்கைக்கு பெயரும் சூட்டப்பட்டது.


**'ஒப்பரேசன் அபு-கலாலி'** அதுதான் பெயர். பாலஸ்தீன போரில் உயிர் துறந்த பெண்போராளி ஷாடியா-அபு-கஸாலியின் நினைவாகவே அந்தப் பெயர் சூட்டப் பட்டது.

இரண்டாவது நடவடிக்கை எத்தனை பயங்கரமாக இருக்கப் போகிறது என்று தெரியாமல் லைலா காலித் மகிழ்ச்சியில் துள்ளினாள். ***(தொடர்ந்து வரும்....)***

(சென்றவாரம் நடந்தது)

*1948ல் இஸ்ரேல் உருவானபோது பாலஸ்தீனத்திலிருந்து தனது குடும்பத்தோடு வெளியேற்றப்பட்டபோது லைலாவுக்கு வயது 4. சொந்த மண்ணிலிருந்து துரத்தப்பட்ட லைலா காலித்-இஸ்ரேலியர்களை வெறுத்தாள். ஆசிரியை தொழிலுக்கு போன லைலா அதனை கைவிட்டு பாலஸ்தீன மக்கள் விடுதலை முன்னணியில் (P.F.L.P) சேர்ந்தாள். பயிற்சி முடித்த லைலா காலித்திடம் விமானம் ஒன்றை கடத்தும் பொறுப்பு ஒப்படைக்கப்படுகிறது. இனி.....*

# லைலா காலித்



## ஆயுதப் போரில் தீரப் பெண்

---

அறிந்து கொள்ளுங்கள்—ஆரோக்கியம் பெறுங்கள்—ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ + விந்தைகள்

## ஹலோ! டாக்டர் பேசுகிறேன்

வழுக்கை ஏன்



"**ஹ**லோ! டாக்டர் சௌக்கியமா?"

"சௌக்கியமா? என்பது எனக்குரிய கேள்வியாச்சே! சௌக்கியம்தான். நீங்கள் எப்படி?"

"நீங்கள் கொடுத்த மருந்தால் நல்ல சுகம்."

"சந்தோசம், வந்த விசயம்?"

"அதாவது, கம் டுத பொயின்ற் என்கிறீர்கள். நல்ல தரத்தில் சில கேள்விகள் வைத்திருக்கிறேன். பதில் உதவி தேவை."

"ஓ.ஹோ....கேளுங்களேன்"

"என் தலையைப் பாருங்கள் டாக்டர். முடி உதிர்கிறது. வருத்தமாக இருக்கிறது எனக்கு. ஏன் டாக்டர் இப்படி?"

"ஆண்களின் முடி வளர்ச்சிக்கு காரணமாக இருப்பது ஹார்மோனாகிய ஆன்ட்ரோஜன். வயது ஆக ஆக இந்த ஹார்மோன் இரத்தத்தில் கொஞ்சம்

ஒத்துக்கொள்ளுமா?



கொஞ்சமாக குறைய ஆரம்பிக்கும். அதனால் தலையில் உள்ள முடி உதிர்ந்து வழுக்கை விழுகிறது. அது சரி, உங்கள் தந்தையாருக்கு தலை வழுக்கையா?"

"அட......ஆமாம்.....எப்படி டாக்டர் கண்டுபிடித்தீர்கள்?"

"இவ்வளவு இளமையாக இருக்கிறீர்கள். அதனால் உங்கள் வழுக்கைக்கு பரம்பரைக் காரணம் தான் இருக்க வேண்டும். தந்தைக்கு சிறு வயதிலேயே தலை வழுக்கையானால் மகனுக்கும் சிறு வயதில் வழுக்கை வரும் வாய்ப்பு அதிகம்."

"ஆக, தந்தையின் முடி எவ்வழி தனையனின் முடி அவ்வழி! டாக்டர் உங்ளைப் போல வயது முதிர்ந்த- கோபிக் காதீர்கள். வயதானாலும் இளமை துள்ளுகிறது-ஆ...என்ன சொன்னேன், உங்களைப் போல வயது முதிர்ந்த ஆட்களோடு பேசும்போது என்னிடம் பயம், வெட்கம், நடுக்கம் போன்றவை ஏற்படுகின்றனவே; ஏன் டாக்டர்?"

"உங்களைவிட வயதில் முதிர்ந்தவர்களிடம் பேசும் போது தோன்றும் பய உணர்வு மற்றும் பரிவு நரம்பு மண்டலத்தைத் தூண்டுகிறது. இது அட்ரினலின் சுரக்கக் காரணமாகின்றது.

இவ்வாறு அட்ரினலின் சுரக்கும் போது படபடப்பு, நடுக்கம் வந்துவிடுகிறது."

"இதற்கு சிகிச்சை உண்டா டாக்டர்?"

"தேவையில்லை. மனதை அமைதிப் படுத்தக் கற்றுக்கொள்ள வேண்டும். தியானம், உடற்பயிற்சி, போன்றவை உடலை கட்டழகாக்கவும், மனதைக் கட்டுக்குள் வைத்திருக்கவும் உதவும்."

"டாக்டர், ஆண்கள்-பெண்கள் அனைவரும் ஐஸ்கிரீம் என்றால் விரும்பிச் சுவைக்கிறார்கள். இவற்றை அதிகம் விரும்புவதால் பிரச்சனை வரும் என்கிறார்களே?"

"தொண்டையில், தொண்டையின் பாதுகாப்புக் கென்று காவலரண் மாதிரி உள்ள பகுதி டொன்சில்ஸ் என்று அழைக்கப் படுகிறது. அது பெரிதாக விரிவடையும் போது டொன்சிலிட்டிஸ் என்னும் நோய் வருகிறது. நாம் ஐஸ்கிரீம் மற்றும் குளிர்பானங்களை சாப்பிடும் போது தொண்டையின் வெப்பநிலை குறைந்து விடுகிறது. அதனால் தொற்றுக் கிருமிகள் தமது தாக்குதலை நடத்துவதற்கு வாய்ப்புக் கிடைக்கிறது

பக்டீரியாக்களின் தாக்குதலால் டொன்சில்ஸ் அழற்சி அடைகிறது. வெப்பநிலை மாறுபடும் போதும் டொன்சில்ஸ் பாதிக்கப் படுகிறது.

"தடுத்துநிறுத்தக்கூடிய பதிலடி ஏதாவது?"

"ஆரம்ப நிலையில் மருந்துகள் மூலம் கட்டுப்படுத்தலாம். அடிக்கடி டொன்சில்ஸ் வந்தால் அறுவைச் சிகிச்சைதான் தேவைப் படும்.

உப்பு கலந்த வெந்நீரில் அடிக்கடி

நோமூட்




வாயைக் கொப்பளித்து வந்தால் சுகமாக இருக்கும்."

"நல்லது டாக்டர், இது ஒரு மாதிரியான கேள்வி. எனது நண்பன் ஒருவனுக்கு அந்த சமாச்சாரத்தில் அவ்வளவு ஈடுபாடு இல்லை. திருமணம் வேறு நடந்து விட்டது. என்ன செய்யலாம்?"

"இதைக் கேட்கும் போது நீங்கள் ஏன் நெளிகிறீர்கள். வாழ்க்கையில் 'செக்ஸ்' ஒரு முக்கிய அம்சம் அல்லவா. சிக்கல்கள் வரும்போது தீர்வு காணாமல் தேவையில்லாமல் வெட்கப்பட்டுத் தொலைக்கிறோம். அது ஒரு பாவச் செயல் மாதிரி நினைக்கிறோமா? தம்பதியர் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள வேண்டும்.

மனதை ஒரு நிலைப்படுத்த வேண்டும். பூகம்பம் மனதில் இருந்தால் பூவை இரசிக்க மனம் வருமா? அதனால் மனச்சுமையை சுத்தமாக துடைத்துவிட வேண்டும். மனதை தயார் படுத்த இனிய இசை கேட்கலாம், பாடல் கேட்கலாம், அதைவிட்டு இதற்கெல்லாம் மருந்து தேடி போலிகளிடம் ஏமாறக் கூடாது. தேவையானால் நல்ல மனநல மருத்துவரை நாடலாம். உங்கள் நண்பரை தினமும் ஒரு குறிப்பிட்ட தூரம் ஓடச் சொல்லுங்கள். அல்லது நடக்கச் சொல்லுங்கள். காதல் உணர்ச்சி பொங்கிக் கொண்டு வந்துவிடும். இது மொஸ்கோவில் ஒரு ஆராய்ச்சியில் கண்ட முடிவு."

"ஐடியாக்களை விரல் நுனியில் வைத்திருக்கிறீர்கள் டாக்டர். மருத்துவ உலகில் விந்தையான செய்தி ஏதாவது லேட்டஸ்டாக.........."

"இயந்திர மனிதர்களை வைத்து பல பரிசோதனைகளை விஞ்ஞானிகள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா? இப்போது ஒரு புதிய ஆராய்ச்சி!"

"அது என்ன, டாக்டர்?"

"இயந்திர மனிதர்களை வைத்து குழந்தை பெற முடியுமா என்பதுதான் அந்த ஆராய்ச்சி. ஆராய்ச்சியில் இறங்கியிருப்பது ஜப்பான் விஞ்ஞானிகள்."

"அசத்தலான செய்திதான். நீங்கள்தான் அசதியாகிவிட்டீர்கள். நான் வருகிறேன் டாக்டர். அடுத்த வாரமும் கண்டிப்பாய் வருவேன்."

# வட்டப் பந்தில் சுற்றும் சைக்கிள்



1994 இல் அமெரிக்காவில் நடந்தது உலக கிண்ண உதைப்பந்தாட்டப் போட்டி. எள் போட்டால் எண்ணெய்யாகுமளவுக்கு ரசிகர் கூட்டம். அவர்களை கவர விளம்பரத் தயாரிப்பாளர்கள் மத்தியில் போட்டா போட்டி!

படத்தில் இருப்பது வித்தியாசமான துவிச்சக்கர வண்டி. (சைக்கிள்) கூர்ந்து பாருங்கள். ரயர்-டியுப் எதுவுமே கிடையாது. 60 உதைப்பந்தாட்டப் பந்துகளை (சொக்கர்பந்துகள்) எடுத்து ரயருக்கு பதிலாக பொருத்தியிருக்கிறார்கள்.

இந்த அதிசய தயாரிப்பை உருவாக்கியவர் டி.டி. சென்றி. உதைப்பந்தாட்டம் காணவந்த ரசிகர்களை மேலதிகமாக கவர்ந்தவற்றுள் இந்த சைக்கிளும் ஒன்று.

# 'நான் மாட்டேன் தூக்கிப் போ'

படத்தில் இருப்பது சூரிய சக்தியால் இயங்கும் நவீன கார் ஜேர்மன் நாட்டில் இது தயாரிக்கப்பட்டது.

இதில் ஒரு அட்டகாசமான வசதி என்ன தெரியுமா? பாதி வழியில் ஏதாவது கோளாறு வந்துவிட்டால் தள்ளி மாயும் சிரமம் இருக்காது. அப்படியே இரு கையாலும் அள்ளி தலைக்கு மேலே தூக்கிக் கொண்டு பொடி நடையில் போய்விடலாம். காரின் எடை 50 கிலோ கிராம் மட்டுமே. (ஒரு சீமெந்து பக்கெட்டின் நிறையளவுதானே!)

மற்றுமொரு வசதி என்ன வென்றால், எந்த மாதிரியான போக்குவரத்து நெருக்கம் என்றாலும் சுலபமாக புகுந்து சொயிங் என்று சென்றுவிடும் கையடக்கமான கார். நம் நாட்டுக்கு எப்போது வரும்?

# தகவல் பெட்டி

ஒட்டியபடி பிறக்கும் இரட்டைக் குழந்தைகளை 'சயமீஸ் இரட்டையர்' என்று அழைப்பார்கள்.


மூன்று குழந்தைகள் ஒட்டியபடி பிறந்தால் எப்படி அழைப்பது? 'சயமீஸ் மூவர்' என்று அழைக்கலாமோ? இனித்தான் தீர்மானிக்க வேண்டும்.

ஏனெனில் இப்போதுதான் முதற்தடவையாக மூன்று குழந்தைகள் ஒட்டியபடி பிறந்துள்ளன. மருத்துவ உலகுக்கே இது வியப்பான செய்தி!

இது நடந்தது அவுஸ்திரேலியாவில் உள்ள போர்ட் பிமிறி என்னுமிடத்தில். வெற்றிகரமான இந்த வெளியீட்டை நடத்தியவர் 'பமீலா மொறுயோ' (வயது 23) கடந்த வருடம் டிசம்பர் மாதம் இந்த பிரசவ சாதனை நடந்துள்ளது.அதனால்தான் தாமதித்து விசயம் கவிந்தது. வெளியே தெரிவித்து பரபரப்பாக்க பமீலாவும் கணவரும் விரும்பவில்லை.

அது தவிர, மூன்று குழந்தைளும் தப்பப்போவதில்லை என்றுதான் மருத்துவர்களும் சொன்னார்கள். அந்தளவுக்கு எடை குறைந்து காணப்பட்டனவாம். மூன்று குழந்தைகளும்! மூன்றும் பெண் குழந்தைகள்! இப்போது இரு மாதிரியாக பிழைக்க வைத்துவிட்டனர்.

இப்போது கொழு கொழுவென்று இருக்கின்றன பாருங்கள். இந்த வருட இறுதியில் மூன்று குழந்தைகளையும் தனித்தனியே பிரித்தெடுக்கும் அறுவை சிகிச்சை நடக்கப் போகிறது. ஏதாவது ஒரு குழந்தை உயிர் தவறக் கூடும் என்று அஞ்சப்படுகிறது. அப்படி எதுவும் நடவாமலிருக்க நாமும் பிரார்த்திப்போமே!



# ஊசலாடும் உயிர்கள்

## ஒட்டியபடி மூன்று குழந்தைகள்



www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# 3 ஹீரோ-2 ஹீரோயின்

மூன்று கதாநாயகன்கள். மூவரும் புதுமுகங்கள். திரைப்படக் கல்லூரியில் நடிக்கக் கற்றவர்கள். கதாநாயகிகள் இருவர். ஆனால் இதுவரை கற்றுக்கொள்ளவில்லை நடிக்க. ஒருவர் பெயர் செம்பருத்தி. பெயர் தமிழாக இருந்தாலும் இறக்குமதி பம்பாயிலிருந்து. இன்னொருவர் ரேஜ்மா. இவரும் இறக்குமதிதான்.

இவர்கள் நடிக்கப் போகும் படம் 'பிரிய தர்ஷினி'. கவுண்டமணி, செந்தில், பூர்ணம் விஸ்வநாதன், தலைவாசல் விஜய் ஆகியோரும் நடிக்கின்றனர். இயக்குபவரும் புதியவர். பெயர் கே.கே.ஆர்.




## டும்-டும்-டும்!

. வீட்டில விஷேசங்க படத்தில் நடிக்கும்போது லேசாக குண்டாக இருந்து, தற்போது மேலும் தசை போட்டிருப்பவர் பிரகதி. பிரகதிக்கு விரைவில் திருமணம் நடக்கப் போகிறதாம். வாழ்க மணமக்கள் (அட்வான்ஸ் வாழ்த்துக்கள்)

## பொருத்தமான ரஞ்சிதா

'முந்தபா' என்னும் படத்தில் நெப்போலியன் நடித்து வருகிறார் அல்லவா. அவருக்கு ஜோடியாக நடிக்க ரஞ்சிதாவை பிடித்திருக்கிறார்கள். ரஞ்சிதாவுக்கு சான்ஸ் வரக்காரணம் பாத்திரத்துக்குத் தேவையான உயரப் பொருத்தம்தான்.

'அவள்-அது-அவர்கள்' என்ற பெயரில் தமிழக சஞ்சிகை ஒன்றில் வெளியான உண்மைக்கதைதான் 'முந்தபா' என்ற பெயரில் தயாராகிறது. கூலிக்கு கொலை செய்யும் முரட்டு ஆசாமி வேசம் நெப்போலியனுக்கு. இந்தப் படத்திற்காக உண்மையாகவே தாடி வளர்த்து வருகிறார் நெப்போலியன்.

## மாயா பஜார்

இம்மாதம் திரைக்கு வரும் படங்களில் 'மாயா பஜார் 95' யும் சேர்த்துக் கொள்ளுங்கள். 95ம் ஆண்டு முடிவடைவதற்கிடையில் படம் திரைக்கு வந்து ஓடி முடித்துவிட வேண்டும் பெயர் அப்படி.



ஊர்மிளா

ரங்கீலா பட நாயகி(இந்தி)

## முகப்பில்

உலக அழகி ஐஸ்வர்யா

ரோஜா

## கிசு-கிசு-நியூஸ்

## அப்பாவுக்கு டாட்டா

சில்க் சுமிதாவோடு அவரும், அவரோடு சுமிதாவும் பிரியமாயிருந்தார்கள். அந்த அவரின் பெயர் தியாகராஜன். (நடிகர் அல்ல) தியாகராஜன் சுமிதாவுக்கு இடையே தற்போது விரிசல். சுமிதாவோடு ஒரு இளைஞர் சுற்றுகிறார். இப்போதுதான் அவருக்கு லேசாக மீசை முளைக்க ஆரம்பித்திருக்கிறது. அவர் யார் என்று விசாரித்த போது கிடைத்த பதில்: தியாகராஜனின் மகன்.

சுமிதா சமூகசேவை செய்யப்போவதாக சொல்லித் திரிந்தது யாருக்காவது ஞாபகமிருக்கலாம். அது என்னாச்சு. இன்னும் பல சேவைகள் பாக்கியிருக்கிறது. அதெல்லாம் முடிய சமர்த்தாக சமூக சேவை.

## நக்மாவால் சிக்கல்

நக்மாவை இனி எப்படி உபயோகப்படுத்தலாம் என்று 'லவ் பேர்ட்ஸ்' பட இயக்குநர் தலைமுடியைப் பிய்த்துக் கொண்டாராம். திரைக்கு வந்துள்ள 'வில்லாதி வில்லன்' படத்தில் இதுவரை யாருமே பயன்படுத்தாத மாதிரி சத்யராஜ் பயன்படுத்தி விட்டார். பூரணமாக ஒத்துழைத்து கிட்டத்தட்ட முழுக் கவர்ச்சியையும் நக்மா காட்டிவிட்டார். பிரபுதேவாவுடன் நக்மா நடித்து வரும் படம் 'லவ்பேர்ட்ஸ்'. வெளிநாடுகளில் படப்பிடிப்புக்கள் நடத்தபட்டுள்ளன. இந்த நேரத்தில் 'வில்லாதி வில்லன்' வெளிவந்து ஓடிக்கொண்டிருப்பதால் அடுத்து வரும் படத்தில் நக்மாவை வைத்து வித்தியாசமாக என்ன செய்யலாம் என்பதுதான் பிரச்சனையாம்

## குஷ்புவின் புது முயற்சி

குஷ்பு நியூஸ் ஏதாவது உண்டா என்று விசாரிக்கும் சினி விசிட் வாசகர்களுக்கு ஒரு செய்தி.

குஷ்பு புதிதாக செய்யும் முயற்சி ஒரு படத்தை இயக்குவது. ஆமாம், பட இயக்குநராகி விட்டார் குஷ்பு படத்தின் பெயர் 'உறவு' (முறிந்த உறவா? முறியாத உறவா?) ஆனால் குஷ்பு இயக்கும் படத்தை நம் நாட்டு ரசிகர்கள் அநேகமாக காணமுடியாது. ஏனெனில் குஷ்பு இயக்குவது தொலைக்காட்சிப் படம். நடிகை ரேவதி தயாரித்துள்ள 12 வார தொலைக்காட்சித் தொடரில் ஒரு வாரம் மட்டும் குஷ்பு இயக்குகிறார்.

## ராசய்ய

எப்போதோ முடிந்திருக்க
நீடித்து, வெளிநாடுகளுக்குப் ப
புதிதாய் இணைத்து இப்போது த
திரைக்கு வந்துவிட்டது மாதிரித
காட்சிகள் வாலிப விருந்து 'கா
ரசிகர்களின் எதிர்பார்ப்பை பூர்த்தி
ரோஜாவை உரித்துவிட்டார்களா

## -இளம் ஹீரோக்

இந்தியில் இளம் கதாநாயகிகள
கொண்டிருக்கிறார்கள்.
இளம் ஹீரோக்களும் அறிமுகமாகி
ஸ்ரீதேவி, ஜெயப்பிரதா, ரேகா போன்





## பாசவலையில் ஒரு போனஸ்

தெலுங்கில் கமல் நடித்து 'சுபசங்கல்பம்' வெளியாகி ஓடிக்கொண்டிருக்கிறது. நல்ல வசூல். அந்தப் படம்தான் தமிழில் 'பாசவலை' என்ற பெயரில் வருகிறது.

கமலஹாசனுக்கு நல்ல பெயர் கொடுத்த படங்களில் 'சலங்கை ஒலி', 'சுவாதி முத்தியம்' (தமிழில், சிப்பிக்குள் முத்து என்ற பெயரில் வெளிவந்தது) ஆகியவையும் அடக்கம். அந்த இரண்டு படங்களையும் இயக்கியவர் கே.விஸ்வநாத். அவர்தான் 'பாசவலை'யையும் இயக்கி உள்ளார். கமலின் விருப்பம் காரணமாக விஸ்வநாத் முக்கிய வேடத்தில் நடித்தும் இருக்கிறார்.

மீனவ இளைஞனாக நடிக்கிறார் கமல். மீனவ நடனமும், பரத நாட்டியமும் ஆடியு மிருக்கிறார்.

கமலுக்கு ஜோடி ஆம்னி. மேக்கப் போடாமல் நடித்துள்ள ஆம்னிக்கு கமல் முத்தம் கொடுக்கும் காட்சியும் போனஸாக உண்டு. பிரியாராமன், வைஷ்ணவி ஆகியோரும் நடித்துள்ளனர். இசை, மரகதமணி, ஒளிப்பதிவு, ஸ்ரீராம். பாடல்கள், வைரமுத்து. விரைவில் திரைக்கு வருகிறது.

இம்மாதம் திரைக்கு
ஜோடி யுவராணி
ஓட்டிக்கொண்டாராம்
திரைப் புதுமுக

## சுகன்ய

பிரகாச இயக்க
மெட்ராஸ்' ஒரு கதாந
வினிதாவையும் சேர்
'பெரிய குடும்ப
ஒத்துழைத்தாரா
வினிதாவுக்கு இப்போ

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

★ ★ சிகலைகலா சம்பந்திகள் ★ ★

# ஜெயாவிடம் சிவாஜி சொன்ன ஜோக்

சிவாஜியின் மகன் சாந்தி. சாந்தியில் சிவாஜிக்கு கொள்ளைப்பிரியம். சென்னையில் உள்ள சிவாஜியின் திரையரங்கத்திற்கு பெயரும் சாந்தி. சாந்தியின் மகள் சத்தியலட்சுமி அழகாக இருப்பவர். திருமண வீடொன்றில் சத்தியலட்சுமியைக் கண்ட இளைஞர் ஒருவருக்கு அவரைப் பிடித்துவிட்டது.

திருமணம் காணச் சென்று தனக்குரிய மணமகளைக் கண்ட இளைஞர் பெயர் சுதாகர். பெரிய புள்ளி. அதாகப்பட்டது தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் தகமும், சதையுமாக இருக்கும் சசிகலாவின் அக்கா வனிதாவின் மகன்தான் சுதாகர்.

ஜெயலலிதாவோடு சசிகலாவும் தங்கியிருப்பதால் சுதாகரும் ஜெயலலிதாவின் வீட்டிலேயே இருந்து வருகிறார். தவிர ஜெயலலிதா வீட்டு நிர்வாகப் பொறுப்பும் சுதாகர் கையில்.

சுதாகர் மீது ஜெயலலிதாவுக்கும் பாசம். அதனைக் கவனித்த சிந்தி சசிகலா ஒரு நல்ல நாளாகப் பார்த்து சுதாகரை தனது 'வளர்ப்பு மகன்' என்று ஜெயலலிதாவை அறிவிக்க வைத்துவிட்டார். ஜெயலலிதாவின் பெருவாரியான கோடிகள் பெறுமதியான சொத்துக்களை அமுக்கும் திட்டம்தான் இது என்று ஒரு பேச்சு எழுந்திருக்கிறது.

அது அவ்வாறு இருக்க, சிவாஜியின் பேத்தியை தனக்குப் பிடித்திருப்பதாக சுதாகர் சொன்னதும், உடனே சுறுசுறுப்பான ஜெயலலிதா சிவாஜிக்கு தூது அனுப்பினார். 'செவாலியே சிவாஜி' பாராட்டு விழாவை ஜெயலலிதா பிரமாண்டமாக நடத்தியதால் குளிர்ந்திருந்த சிவாஜி திருமணத்திற்கு பச்சைக் கொடி காட்டிவிட்டார். சிவாஜி வீட்டுக்கு தடபுடலாகச் சென்று பெண் பார்த்து பேசி முடித்தார் ஜெயலலிதா.

சுதாகர் ஜெயலலிதாவின் வளர்ப்பு மகன் என்று ஆகிவிட்டதால், இப்போது இரு பெரும் தலைவர்களான சிவாஜியும், ஜெயலலிதாவும் சம்பந்தி ஆகிவிட்டார்கள்.


ஒரு அந்தநாள் ஞாபகம்.

ஜெயலலிதாவின் அம்மா சந்தியாவும் ஒரு நடிகை. எம்.ஜி.ஆர், சிவாஜி என்று பலரோடு நடித்தவர்.

சந்தியாவோடு நடித்த சிவாஜி ஜெயலலிதாவோடு நடித்தார். ஜெயலலிதாவோடு ஜோடி சேர்ந்து நடித்த முதல் நாள் படப்பிடிப்பில் சிவாஜி ஜெயலலிதாவிடம் வேடிக்கையாக சொன்னார் இப்படி:

"சிக்கிரமா ஒரு பொண்ணைப் பெத்துக் கொடு என்னோடு ஜோடியாக நடிக்க"

ஜெயலலிதா பெற்றுக் கொடுக்கவோ இல்லையோ, சிவாஜியின் பேத்திக்கு ஒரு ஜோடியைக் கொடுத்துவிட்டார். சுகலைகலா சம்பந்திகள்.



பாண்டியராஜன்-யுவராணி
படம்-மாப்பிள்ளை மனசு பூப்போல



சரத்குமார்-மீனா
படம்-நாடோடி மன்னன்

# மினி சினி

* பாரதிராஜாவின் 'பசும்பொன்' படத்தில் நடித்ததற்குப் பிறகு சரண்யாவுக்கு மீண்டும் கதாநாயகி வாய்ப்புக்கள் வருகின்றன. தற்போது 'பட்டக்காரர்', 'மீண்டும் சாவித்திரி' ஆகிய படங்களில் கதாநாயகியாக நடிக்கிறார் சரண்யா.
* ஜெயராம்-குஷ்பு நடித்த 'முறைமாமன்' படத்தை இயக்கிய சி.சுந்தர், அடுத்து இயக்கும் படத்தில் கார்த்திக் கதாநாயகனாக நடிக்க இருக்கிறார்.
* 'மாதங்கள் 7' என்ற படத்தை இயக்கி, கதாநாயகனாக நடித்துள்ள யூகிசேது இத்தாலிய தொலைக்காட்சிக்காக 'ஷுகர் கண்டி' என்ற அரைமணி நேரப்படத்தில் நடித்திருக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்புக்கள் யாவும் கல்கத்தாவில் படமாக்கப்பட்டன.
* வில்லனாக நடித்து அறிமுகமாகி கதாநாயகனாக பதவி உயர்வு பெற்றுக்கொண்டிருப்பவர்கள் வரிசையில் சமீபத்தில் இணைந்திருப்பவர் அசோக்குமார். பாக்கியராஜின் 'பவுனு பவுனுதான்' படத்தில் வில்லனாக நடித்துள்ள இவர் தற்போது 'நீதியின் வாசலிலே' என்ற புதிய படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார்.
* தெலுங்கிலிருந்து தமிழுக்கு மொழிமாற்றப்பட்டுக்கொண்டிருக்கும் கமலின் 'பாசவலை' படத்தில் முக்கிய வேடமொன்றில் நடிக்கும் சிறுமிக்கு கமலின் மகள் ஸ்ருதி பின்னணி பேசியுள்ளார்.
* சென்ற ஆண்டின் சிறந்த பின்னணிப் பாடகிக்கான தேசிய விருது பெற்ற சுவர்ணலதா, ஏ.ஆர். ரகுமான் இசையமைத்திருக்கும் 'ரங்கீலா' 'ஷிகார்' ஆகிய இரண்டு இந்திப் படங்களில் பாடல்களைப் பாடியுள்ளார்.
* 'நானை மனிதன்' 'அதிசய மனிதன்' போன்ற படங்களைத் தயாரித்தவர் தக்காளி சீனிவாசன். அவர், ரகுவரன் கௌதமி ஜோடியாக நடிக்கும் 'வீடனஸ்' என்ற படத்தை கதை-திரைக்கதை எழுதி இயக்கி வருகிறார்.
* பாரதிராஜாவிடம் உதவி இயக்குநராக இருந்த ஜெயபிரகாஷ், 'சாதிசனம்' என்ற படத்தை முதன் முறையாக இயக்குகிறார். 'தலைவாசல்', 'அமராவதி' போன்ற படங்களைத் தயாரித்த சோழா பொன்னுரங்கம் இப்படத்தைத் தயாரிக்கிறார்.
* 'தாய் தங்கை பாசம்' படத்தில் டி.ராஜேந்தர் அறிமுகப்படுத்திய நகைச்சுவை இரட்டையர்களான அண்ணா-பின்னா இருவரையும் தனது அடுத்த படத்திலும் ஒப்பந்தம் செய்துள்ளார்.
* 'ஆயிரம் பூக்கள் மலரட்டும்', 'ராஜாதி ராஜ...', 'இராவணன்' போன்ற படங்களை இயக்கிய ச.இராமதாஸ், இப்போது 'மாஸ்டர்', 'மக்கள் ஆட்சி' போன்ற படங்களுக்கு வசனம் எழுதி வருகிறார்.



என்றும் பேசாத
தென்றல்-
இன்று மட்டும்
காதில் வந்து
இன்பம்-இன்பம்
என்று சொல்வதும்
என்ன?

படம்-[illegible]

கிளிகட்டர்

# மாறுதலுக்காக ராஜ்கிரண்

'எல்லாமே என் ராசாதான்'-இசைராஜாவான இளையராஜாவை மனதில் வைத்துக் கொண்டு படத்துக்கு சூட்டிய பெயர் அது. சூட்டியவர் ராஜ்கிரண். இளையராஜா குளிர்ந்து போனாரோ என்னவோ நன்றாக இசை பொழிந்திருந்தார். படம் வெளியாகி நன்றாக ஓடிக்கொண்டிருக்கிறது. வெற்றிக்கு இசையும் ஒரு காரணம்.

இப்போது ராஜ்கிரண் புதிய படம் ஒன்றில் நடிக்க ஒப்பந்தமாகியுள்ளார். இதுவரை தானே தயாரித்து தானே இயக்கி நடித்தவருக்கு ஒரு மாறுதல் தேவைப்பட்டது. அதனால் வெளியார் தயாரிப்பில் நடிக்க சம்மதித்துவிட்டார். படத்தை இயக்குவது புதுமுகம், பெயர், கே.வி.பாண்டியன். படத்தொடக்க விழா சென்றமாதம் 29ம் திகதி (ஜுன் 29) ஆரம்பமானது. படப் பெயரும், கதாநாயகியும் இன்னும் முடிவாகவில்லை.

# கிளி கட்டர்

ராக்கம்மா கையைத் தட்டு படத்தில் ரஜினிக்கு ஜோடியாக நடித்து தமிழ்பட ரசிகர்களுக்கும் அறிமுகமானவர். நேரடியாக தமிழ்ப் படமொன்றில் நடிக்க ஆசையென்கிறார் இந்த இந்தி நட்சத்திரம்.

# னி
# சி

## ...ரெடி

... படப்பிடிப்பை மேலும் ... காட்சிகளை எடுத்து ... விட்டார்கள் ராசய்யாவை. ... தேவா-ரோஜா நடனக் ... த்தில் பின்னர் வந்ததால் ... வேண்டுமல்லவா. அதற்காக ...

## ...னும்-தேவியும்-

... புதுசாக வந்து மின்னிக் ... வருகிறார்கள்.

... ஓரம்போக வேண்டியதுதான். ... ஸ்ரீதேவி 'இன்றும் பதினாறு ... பதினாறு' என்று உடலை ... வைத்திருக்கிறார். சமீபத்தில் ... போட்டி ஒன்றுக்கு களில் ... ஓட்டிக்கொண்டு போன ... ந்தார். இளம் ஹீரோக்களை ... என்னாலும் முடியும்' என்று ... தெரியவில்லை.



கலியில் ஷெட்டி-ஸ்ரீதேவி

## ...பிசின் ராணி

... 'மாப்பிள்ளை மனசு பூப்போல' பாண்டியராஜன்-யுவராணி ... அணைந்து பாண்டியராஜனுடன் பிசின் மாதிரி ... நடித்திருப்பதால் கண்ணுக்கு குளிர்ச்சிகள் நிறைய இருக்கும்.

## ...ம்-வினிதாவும்

... கஸ்தூரி நடிக்கும் படம் 'மிஸ்டர் ... போதாது என்று இன்னொரு கதாநாயகியாக ... கிறார்கள்.

... சிரிப்போடு நடித்த வினிதா நன்றாக ... வினிதாவுக்கு சிபாரிசு செய்தார். ... நிலைத்தில் இல்லையாம்.

# அங்கே-என்ன இருக்கு?

தமிழ்ப் படவுலக நடிகைகள், நடிகர்களுக்கு அவுஸ்திரேலிய மோகம் பயங்கரமாக வளர்ந்து வருகிறது.

'ஓய்வு தேவையா உடனே போகலாம் அவுஸ்திரேலியாவுக்கு' என்கிறார்கள். அவுஸ்திரேலியாவுக்கு சென்று ஓய்வு பெறும் சமாச்சாரத்தை ஆரம்பித்து வைத்தவர் ரஜினிகாந்த். தொடர்ந்தவர் ராதிகா. தொடர்ந்திருப்பவர்கள் பலர். அப்படி என்னதான் அங்கே இருக்கு?

# லேடீஸ் ஸ்பெஷல்

## தேக வசீகரம் தேவையான குறிப்புக்கள்

டியர் வாசகீஸ்....நாம இப்போ 'அழகி' ஆகறதுன்னு முடிவு பண்ணிட்டோம். இல்லையா.... அப்போ...முதல்ல உங்ககிட்ட உள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கணும்.... புரிஞ்சுதா..கலரா....ஒல்லியா....உயரமா இருக்கிறவங்கதான் அழகு! அப்படின்னு நெனச்சி....மனச தளர விடாதீங்க.....! கடவுள் எல்லார் கிட்டேயும் ஏதோ ஒரு வசீகரத்தை வைத்துத்தான் இருக்கிறார். ஓகே! இப்போ விஷயத்துக்கு வருவோம்!

*பெண்கள் அழகாக இருக்கணும்னா சருமம் 'பளபள'ன்னு இருக்கணும் இல்லையா? அதுக்கு என்ன பண்ணணும்னு தெரியுமா? சருமம் 'பளபள'ப்பாக இருக்க......உணவில் காரம், புளிப்பு வகைகளை குறைக்க வேண்டும்.



*ஒரேஞ்ச் பழச்சாற்றை பஞ்சில் நனைத்து முகத்தில் லேசாக தடவி இருபது நிமிடங்களுக்குப் பிறகு சீயாக்காய் தூள் அல்லது பயறு மாவினால் முகத்தைக் கழுவி விடுங்கள்.

*தக்காளிப் பழங்களை நிறையச் சாப்பிடுவதால் தோல் பிரகாசமாக இருப்பதுடன் சுருக்கங்கள் நீங்கும்.

*எலுமிச்சம் பழச் சாற்றை உடலில் தேய்த்துக் குளிப்பது மிகவும் நல்லது.

*சோறுவடித்த கஞ்சியில் அரப்புத் தூளை போட்டு உடம்பு தேய்த்துக் குளிப்பது சரும மென்மைக்குச் சிறந்தது.

இது.....நீயா...இல்ல....பட்டு மேனியான்னு உங்களைப் பார்த்து எல்லாரும் சொல்கிறார்களா?

## இரு பாலுக்கும் இது பொது



**டியர்ஸ்....**

**இது பொதுவான சமாச்சாரம்ங்க!**

என்னதான் பிரஷ்ஷா குளித்து விட்டு அழகாக டிரஸ் பண்ணிக் கொண்டாலும் நேரம் ஆக ஆக கொஞ்சம் வியர்வை வாடை கிளம்பத்தான் செய்யும். சிலருக்கு இந்த 'கப்ஸ்' அதிகமாகவே அடிக்கும்.

ஆளை அசத்துவது போல் அழகாக இருந்து கொண்டு ஆசையாக பேச யாராவது கிட்டே வந்தாலே 'அய்யோ.. அம்மா.....' என்று மூக்கை பிடித்துக் கொள்ளும்படி வைக்கலாமா? ஸோ... நம்மைச் சுற்றி எப்போதும் நறுமணம் வீசும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். என்ன செய்யலாம்.!

செண்ட் போட்டுக்கோங்க! செண்ட் போட விருப்பம் இல்லாதவர்கள் வாசனைப் பூக்களைப் பறித்து பாக்கெட்டில் வச்சுக்கோங்க!

- ★ ஆண், பெண் இருவரும் கிடைத்த சென்ட்டை எடுத்து அப்படியே ஈஷிக்கக் கூடாது. இருவருக்கும் தனித்தனி 'சென்ட்' விற்பனை செய்கின்றனர். அதைக் கேட்டு வாங்கிக் கோங்க.
- ★ 'சென்ட்'டை பார்த்ததும் காணாததைக் கண்டது போல் அப்படியே பூசி மெழுகி.....ஒரு 'சென்ட்' குளியலே நடத்தி விடக் கூடாது. அப்புறம் வேப்பெண்ணை தேய்ச்சிருப்பவர்களிடம் எப்படி ஏல்லாரும் நெருங்க பயப்படுவார்களோ...அந்த மாதிரி....நம்ம கிட்டேயும் நெருங்க பயப்படுவர்.
- ★ மெல்லிய நறுமணம் வீசும் வகையில் பூசிக் கொள்ள வேண்டும்.
- ★ 'சென்ட்' போடும் போது முன் கழுத்திலும், பின் கழுத்திலும் கொஞ்சம் தடவிக் கொள்ளுங்கள். இதனால் நாள் முழுவதும் நறுமணம் கமழ்ந்து வீசும்.
- ★ சில 'சென்ட்', அத்தர் போன்றவை உடைகளில் கறையை உண்டாக்கும். இந்தக் கறையைப் போக்கவே முடியாது. இது போன்ற திரவியங்களை பஞ்சில் நனைத்து காதில் சொருகிக் கொள்ளுங்கள். நறுமணம் கமழும் நாள் முழுவதும். ஜாக்கிரதை! அசிங்கமா பஞ்சு வெளியே தெரிஞ்சிடப் போகுது.
- ★ சில 'சென்ட்'டும், அத்தரும் தலைவலியை உண்டாக்கும். இவற்றை அறவே நீக்கிவிட வேண்டும். உங்கள் மூக்கிற்கு எந்த 'சென்ட்' பிடிக்கிறதோ அதையே வாங்கி உபயோகியுங்கள்
- ★ சென்ட்' அத்தர் பிடிக்காதவர்கள் ஜவ்வாதை பொட்டாக வைத்துக் கொள்ளுங்கள்.

**நீங்கள் போகும் இடமெல்லாம் .....கூட்டம் உங்களைச் சூழ்ந்து கொள்கிறதா?**

## குளித்தால் செழிக்கும் அழகு.



இந்த அழகு குறிப்பு இருவருக்குமே பொதுவானது. உங்கள் மேனியில் மெருகு ஏறி, நக்மா, அமீர்கான், அரவிந்த சாமி போல காட்சியளிக்க யாருக்குத்தான் ஆசை இருக்காது. இதுக்கு என்ன செய்யணும் தெரியுமா?

ரொம்ப சிம்பிள். குளிக்கணும்ங்க! சிலர் வீட்ல....அம்மாக்கள் துடைப்பைக் கட்டையை தூக்கிக் கொண்டு தங்கள் பிள்ளைகளைக் குளிக்கப் போகச் சொல்லி துரத்து....துரத்துன்னு துரத்துவர். சிலருக்கு 'மேக்அப்' பிடித்த அளவிற்கு குளிக்கப் பிடிக்காது.

ஆனால், மேனியில் மெருகு ஏற....ஒரு நாளைக்கு மூன்று முறை குளிக்கணும் தெரியுமா? முடியாதவர்கள் இரண்டு முறையாவது குளிக்க வேண்டும். ஒரு முறை குளிப்பது நோ....யூஸ்...!

இந்த குளியலுக்கும், மேனி அழகுக்கும் என்ன சம்பந்தம்னு நெனைக்கிறீங்களா... சொல்றேங்க....சொல்லத்தானே போறேன்.

*குளிக்காதவர்களுடன் அழகு உறவே வைத்துக் கொள்ளாது தெரியுமா?

*மெருகு போடப் போடத்தானே தங்கமும் ஜொலிக்கிறது. அது போலத்தான் நாமும் குளிக்கக் குளிக்கத்தான் அழகு மேனி கிடைக்கும்.

*நீர்வீழ்ச்சி, அலைகள், புது ஊற்று, ஆறு போன்றவற்றில் குளிப்பது உடலுக்கு நல்லது. ஒரு வாளி தண்ணீர் குளிக்க கிடைப்பதற்கே பெரும்பாடாக இருக்கு. இதையெல்லாம் தேடி எங்கே போவது என்கிறீர்களா? கிடைத்தவர்கள் பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

*உச்சந் தலைமுதல் உள்ளங்கால் வரை தேங்காய் எண்ணை தேய்த்துக் குளிப்பது மிகவும் நல்லது. தோல் பளபளக்கும்.

*ஓடைக்கரையோரம் குடியிருப்பவர்கள் தவறாமல் ஓடையில் குளியுங்கள். ஒப்பற்ற அழகைப் பெறுவீர்கள். (மற்றவர்கள் பெருமூச்சு விடுவதே சாலச் சிறந்தது)

*நகர மக்கள் கிடைக்கும் தண்ணீரில் அழுக்கு நீக்கி சுத்தமாக இரண்டு வேளையாவது குளியுங்கள். உடம்பிற்கு புத்துணர்ச்சி கிடைப்பதுடன் அழகும் கிடைக்கிறதே!

## சமைப்போம் சுவைப்போம்

(தொகுத்துத் தருவது சுகந்தினி)

### தோய் மீச்

**தேவையான பொருட்கள்.**

நல்ல சதைப்பற்றுள்ள மீன்1/2 கிலோ
உப்பு - ஒரு தேக்கரண்டி
சீனி - ஒரு தேக்கரண்டி
மஞ்சள் தூள் "
நெய் "
தயிர் - 1/2கப்
இஞ்சி - சிறு துண்டு
வெங்காயம் - 1
கரம் மசாலாபொடி- அளவாக
பச்சைமிளகாய் - 4
எண்ணெய் - தேவையான அளவு

**செய்முறை:**

மீனை நன்கு கழுவி, முட்களை நீக்கி 3 அங்குல கன சதுரத் துண்டுகளாக்கி, மீண்டும் தண்ணீர் விட்டு அலசிக்கழுவவும். பின்னர் அதில் மஞ்சள் பொடி, உப்பு இவற்றைப் போட்டுக் கலக்கவும்.

எண்ணெயை வாணலியில் ஊற்றி, கொதித்ததும் மீன் துண்டுகளைப் போட்டு பொன்னிறமாகும் வரை வதக்கவும். வதக்கிய மீனை எடுத்து வைத்து விட்டு, அதே எண்ணெயில் நறுக்கிய வெங்காயம், இஞ்சி இவற்றையும் வதக்கவும். இறுதியில் இவற்றுடன் சீனி, தயிர், சேர்த்துக் கிளறவும். இப்போது அதில் மீன் துண்டுகளைப் போட்டு நன்கு கிளறவும். பின்னர் நீளவாட்டில் நறுக்கிய பச்சை மிளகாயைப் போட்டு, மீன் துண்டுகள் மூழ்குமளவு தண்ணீர் விட்டு, கொஞ்சம் உப்பு சேர்த்து, சிறிது நேரம் கழித்து இறக்கவும்.

இதைச் சுடச்சுட இருக்கும் சோற்றுடன் சேர்த்துச் சாப்பிட்டால் சுவையாக இருக்கும்.

## உலக அழகியின் அந்தநாள் வாக்குமூலம்

**உலக அழகி ஐஸ்வர்யா நம் நாட்டுக்கும் வந்தார், சென்றார். யானையும் மாலை போட்டது. (கண் அடித்தது என்றும் தகவல்) இத்தனை புகழும் தனக்குச் சேரும் என்றுஐஸ்வர்யா நம்பியிருந்தாரா? அதுதான் இல்லை. உலக அழகியாகும் முயற்சியில் குதிக்க முன் ஐஸ்வர்யாராய் அளித்த பேட்டியொன்று இது. 'நினைக்காதது நடந்து கிடைக்காதது எல்லாம் கிடைக்கிறது. ஐஸ்வர்யா அதிஷ்டக்கட்டை' என்பீர்கள்.**

பம்பாய் ஆர்ய வித்யா மந்திரில் தான் என் பள்ளிப்படிப்பு தொடங்கியது. ஒன்பதாம் வகுப்பு வரை நான் தான் முதல் மாணவி. அதற்குப் பிறகு ஏனோ தெரியவில்லை, எனது மதிப்பெண்கள் சரிய ஆரம்பித்தன. ஜெய் இந்துக் கல்லூரியில் பட்டப்படிப்பில் சேர்ந்தேன். விஞ்ஞானம் தான் எனது பாடம். கல்லூரியில், அட்டென்டென்சில் மிகவும் கண்டிப்பாக இருந்தார்கள். நானோ அடிக்கடி மட்டம் போடும் டைப். உயிரியலில் கெட்டிக்காரியான நான்; கல்லூரியிலும் அதே பாடத்தை எடுத்துக் கொண்டு; டாக்டருக்குப் படிக்க அதுவே ஆரம்பம் என்று நினைத்துக் கொண்டிருந்தேன்.

மிகப் பெரிய மனப் போராட்டத்தில் இருந்த நேரம் அது.

டாக்டருக்குப் படிக்க விரும்புவது வேறு. டாக்டராகத் தொழில் நடத்தத்தயார் செய்து கொள்வது வேறு என்று புரிந்தது. பேசாமல் கட்டடக்கலை வகுப்பில் சேர்ந்தேன். என் முடிவு சரியானதே என்று இப்போது உணர்கிறேன்.

ஒரு நாள் திடீரென்று நான் மொடல் உலகிற்கு அறிமுகம் செய்யப்பட்டேன். இதோ- 1993ம் ஆண்டின் சுப்பர் முகம் என்று தலைப்பிட்ட என்னை ப்ளாஷ் செய்தார்கள்.

'கிளட்ரக்ஸ்' என்ற பத்திரிகையின் அட்டையில் என்படம் வந்தபோது, பம்பாய் பாலிஹில்ஸ் பகுதியில் காதில் வோக்மன் சகிதம் குதித்து ஆடிக்கொடிருந்த பெண், ஒரே நாளில் மாறிப்போனாள். சாயம் போன ஜீன்சும், கையில்லாத சட்டையுமாக சாதாரணமாக வெளியில் போனாலும் என்னை எல்லோரும் உற்றுப் பார்க்க ஆரம்பித்தார்கள்.

கட்டடக்கலைப்படிப்பு என்ன ஆயிற்று என்று பார்க்கிறீர்களா? கட்டடக்கலையை இடையிடையே கவனித்துக் கொண்டால் போயிற்று டாக்டருக்குப் படித்திருந்தால் இப்படி மொடலிங் செய்ய முடியுமா?

இன்னொரு ஆச்சரியம். நீங்கள் நினைப்பதுபோல் மொடலிங் உலகம் ஒன்றும் மோசமானதில்லை. இங்கேயும் மனிதர்கள் தான் இருக்கிறார்கள். முதல்நாளில் இருந்தே என் அனுபவம் அதுதான். சகமொடல்கள், மேக்கப் கலைஞர்கள், புகைப்பட நிபுணர்கள் எல்லோருமே என்னிடம் அன்புடனும், மரியாதையுடனும் நடந்து கொள்கிறார்கள். போட்டி, பொறாமை நிறைந்த உலகம் இது.

ஐஸ்வர்யா என்று பெயர் வைத்த தாலேயே அதிஷ்டக்காரியாகத் தான் இருக்க வேண்டும் என்கிறார்கள். அப்படியில்லை. செல்வச் செழிப்பில் மிதப்பேன் என்று என் பெற்றோர்கள் எதிர்பார்த்து என்னை அப்படி அழைத்தார்கள். அவர்கள் நினைப்பு வீண்போகவில்லை.

இத்தனை பிரபலமான முகமாயிற்றே நீ ஏன் மிஸ் இந்தியா ஆகக்கூடாது என்று என் சிநேகிதிகள் துளைத்தெடுக்கிறார்கள். அதற்கு வேறு நேரம் ஒதுக்க வேண்டும். பயிற்சிகள் வேறு. இடையில் படிப்பையும் கவனித்துக் கொள்ள வேண்டும்.

உங்களிடம் மறைப்பானேன்? என் முகம் போல் உடற்கட்டு அத்தனை கவர்ச்சியில்லை. என் உதடுகளைப் போல் பற்கள் அத்தனைஅழகில்லை. என்னைப் பற்றிய மதிப்பீடுகளை நானே சரி செய்து கொண்ட பிறகு தானே மிஸ் இந்தியா, மிஸ் யுனிவேர்ஸ் என்று காரியத்தில் இறங்க முடியும்.

என் முகம் எளிதில் மறக்க முடியாத முகம். இதை அடிக்கடி மாறுதலாகத் தோன்றும்படி செய்தவதற்கே நான் படாதபாடு பட வேண்டியிருக்கிறது. 'கிளட்ரக்ஸ்' அட்டையில் நனைந்த மேனியுடன் தோன்றினேன். அதே தோற்றத்தை லெஹர் பெப்ஸி காரர்களும் கேட்டார்கள். இப்படி ஒரே மாதிரிப் போஸ் மொடல் உலகில் நீண்ட நாள் காலம் தள்ளமுடியாது.

தோற்றத்தை அடிக்கடி மாற்றிக் கொண்டால்தான் ஒரு மொடல் நீடிக்க முடியும். முதலில் முடியை 'பொப்' செய்து கொள்ள உத்தேசம். ஆனால் இந்திய பாவனைப் பொருள்களுக்கு நீண்ட சிகை வேண்டும் என்கிறார்கள். இது ஒரு புதுத்தொல்லை.

என் கண்கள் பூனைக்கண்கள். அவற்றை மறைக்க வண்ண லென்ஸ் அணிய வேண்டும். இப்படிப் பல திட்டங்கள் வைத்திருக்கின்றேன்.

**"மறைக்காமல் சொல்லு கிறேன் என் முகம்- என் உடல் கவர்ச்சியே இல்லை"**



எட்டரை மாதக் குழந்தை ஐஸ்வர்யா. இப்போதுள்ளதை விட அப்போது அழகோ?

**முரசின் முகப்பில் பாருங்கள் இருக்கிறார் ஐஸ்வர்யா என்ன ஒரு நளினம்**



கொஞ்சம் வளர்ந்து தேறியபின் கொஞ்சம் பெற்றோருடன் ஐஸ்.


பரிசுக் கூப்பன்
மகளீர் மட்டும்
இல 20

## மகளிர் மட்டும் -பரிசுப் போட்டி-

முதல் அதிஷ்டசாலிக்கு
தங்கநகை

- முரசு 90 முதல் தொடர்ந்து 25 வாரங்கள் பரிசுக்கூப்பன்கள் வெளியாகும்.
- 25 கூப்பன்களையும் பத்திரமாகச் சேகரித்துக்கொள்ளுங்கள்.
- 25 கூப்பன்களும் வெளியான பின்னர் நாம் அனுப்பச் சொல்லும்போது நீங்கள் கூப்பன்களை அனுப்பி வைக்கலாம்.
- முதல் அதிஷ்டசாலிக்கு தங்கநகை பரிசு காத்திருக்கிறது.
- 25 அதிஷ்டசாலிகளுக்கு அசத்தலான பரிசில்கள் காத்திருக்கின்றன.

அடுத்த முரசில்



ஒரு நிமிஷ நிசப்தம்
கிரைம் சக்கரவர்த்தி
ராஜேஷ்குமாரின் -நாவல்!-
உச்சக்கட்ட திக் - திக்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

## வாழ்க்கை இதுவெனில்...?

துள்ளிய பருவமும் துருவிய நிழலும்
கற்றது நாளும் கனிந்த மொழிகள்
பெற்றது பட்டம் போதனை வழிகள்
சுற்றிய நாட்கள் சுமந்தன துயரம்
பாதைகள் எல்லாம் படிகள் தானே
மாமியார் வீட்டில் வாங்கிய உதைகள்
எண்ணிக் கொண்டது சொப்பன வாழ்வு
எட்டிப் பிடித்தது வேதனை கிளைகள்
பாசமும் நேசமும் தேடிய கண்கள்
பார்த்து துடித்தது கண்ணீர் கோடுகள்
வற்றிய குளத்தில் வறண்டது மீன்கள்
சுற்றிய மானும் சுருண்டது மண்ணில்
வாழ்க்கை இதுவெனில் வாழ்வது..?

**தெ.லோஜனா-கொழும்பு-15.**

## “கைதியிடமிருந்து காதலிக்கு...”



அவசர
அவசரமாக உனக்கு
ஒரு கடிதம்
காதல்
கை கொடுத்து
கரம்
பிடிக்கும்
வேளையில்
காலன் போல் என்னை
கைது செய்தனரே....!

இன்றுடன்
இரண்டு மாதம்..!
ஏன் என்று–என்னை
ஒரு வார்த்தை
கேட்கவில்லை
என்னடா இதுவென்று
எனக்கே
சந்தேகம்!

இங்கு எனக்கு
ஏராளம்
நண்பர்கள்!
அவரவர்
கதை கேட்டால்
பொழுதே
கழிந்து விடும்!

என்றாலும்,
எனக்கு
எண்ணமெல்லாம்
உன்மீதுதான்...!
கண்மணியே!
எனக்காக
கண்கலங்க
வேண்டாம் –என்று
இங்கிருந்து
உனக்கு
எத்தனைநாள்
கதை சொல்ல...?

பொறுத்ததோடு
பொறுத்துவிடு
‘போவோம் நாம்
“சுவிசுக்கு” (?!)
அங்குதான்
எமக்கு
காதல் கல்யாணம்...’.

**எம். சுராஜ்-காரைதீவு-02.**

## உயிர் தூவும் சமாதானம்!

இவர்களின் சமாதானம்
தேன் தடவிய இனவாதம் தான்!

அழுத பிள்ளைக்கு
மிட்டாய் கொடுப்பதாய்
பொருளாதார பகட்டில்
மக்கள் மயங்கினர்

எல்லாம் தந்தனர்
ஆனால்
ஒன்றுமே நமக்காய் இல்லை!

எல்லோருக்கும்
மகிழ்ச்சிதான்,
மக்களைக் கொன்று
வெற்றிக் கொடி நாட்டுவதில்

இத்தேசத்தின் சமாதானம்
வானவில்லாயிற்று...!
லயித்திருக்கும்போதே
அழிந்து போயிற்று.

போர்க்காற்று சுழன்றடிக்கிறது



கொஞ்சகால நிம்மதிக்குள்,
நீண்ட கால பாதை விரித்துள்ளது
யுத்தம்!
இனி உயிர்கள் முழுதும்
பூத்தூவும் வெறும் சடலமாய்!

**கன்ஸியா.**

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

“கொழும்பில்
சுற்றி வளைப்பு!”
“தமிழ் இளைஞர்கள்
கைது!”

செய்திகள்
தேயிலைத் தேசமெங்கும்
எதிரொலிக்க
அம்மா அழுகின்றாள்!

வறுமைப்பேய்
வாட்டும் குடும்பம்!
படிக்காமல்–
வேலையில்லாத அக்கா;
படித்தும்
வேலையில்லாத அண்ணா!;
இருவரும்
வேலை தேடும்
வேலைக்காக
கொழும்பு போய்
ஒரு வாரம் தான்!
அதற்குள் கைது

“பாவம்....!
‘அடையாள அட்டை’
இருந்தாலாவது
அடையாளம் கண்டு
அ(பி)டிப்பார்கள்....!
அதுவுமில்லாமல்...”
அம்மா அதிகாலையில்
‘தேயிலை’யிடம்
சொல்லி அழுகின்றாள்.

‘தேயிலை’யும்
கண்ணீர் வடிக்கின்றது.
இந்த தேசத்தின்
அவலத்தைக் கண்டு!

பனை மரமும்
பலா மரமும் உரச
அப்பாவியான
தேயிலைச் செடிகளின்
வேர்களில் பற்றுகின்றது.
தீ!

**கோவுஸ்ஸ ராம்ஜீ-எல்ல.**

## அளவான தொப்பி


ஊருக்குக் கவி சொன்னேன்
தாண்டவக் கோனே–தொப்பி
அளவென்று போட்டெடுத்தீர்
தாண்டவக் கோனே!
பாருக்கு வழி சொல்லி
தாண்டவக் கோனே–நானும்
பாதை வெற்றி கண்டுவிட்டேன்
தாண்டவக் கோனே!

வாய் திறக்கப் பொய்யுதிரும்
தாண்டவக்கோனே–சொல்லி
வாழ்விலெதை வென்றெடுத்தீர்
தாண்டவக் கோனே!
சாய்ந்திருக்கும் பக்கமதில்
தாண்டவக் கோனே–சாய்ந்து
சோற்று வழி தான் முடித்தீர்
தாண்டவக்கோனே!

முள்தைத்த காலுமொன்று
தாண்டவக் கோனே–முள்ளை
முள்ளாலே தானெடுப்போம்
தாண்டவக் கோனே!
பொள்ளுண்ட கள்ளுமுட்டி
தாண்டவக் கோனே–கள்ளும்
பிறிட்டுப் பரவிடிச்சே
தாண்டவக் கேனே!

நாயிருக்கும் விதிவழி
தாண்டவக் கோனே–சென்று
நாகரீகம் இழக்காதீர்
தாண்டவக் கோனே!
போயிருக்கும் மனமுமது
தாண்டவக் கோனே–சுற்றும்
பாரினுக்கே உதவாது
தாண்டவக் கோனே!

**மாவை-வரோதயன்.**



# தேன் கிண்ணம்





### “ஆயுள் கைதி”

என்
இதயத்தில்
உன்
நினைவுகள்!

### “சுதந்திர தினம்”

என்னை
நீ
தூக்கியறிந்த
நாள்!

### “மறந்துவிடு”

என்
காதலுக்கு
நீ
தந்த
நினைவுப் பரிசு!

### “துரோகம்”

நீ
மேடையேற்றிய
காதல்
நாடகம்!

### “முடிவு”

நம்
காதலுக்கு,
என்
கவிதைகளுக்கல்ல!

**ஹெந்தளை நவா.**



## ரதி ஒன்று விழி நதிக்குள்



விதி எனது
கையைப் பிடித்து
எங்கோ ஒரு
பாதாளத்தை நோக்கி
வழி நடத்திச் செல்கிறது!

உனது நிம்மதிக்காக
நீ எனக்குக் காட்டிய
பாதையில்
அம்புகளும் கத்திகளும்
கூர் முனையேந்தி
என்னைக்
குறிபார்த்திருக்கின்றன!

உன் மனதின்
அந்தப்புரங்களைக் கூட
அன்று கண்டவள்
இன்று
உனது நிழலைக்கூட
காணாமல் போய்..!

உன் மீது
நான் வைத்த அன்பு
எனது உயிரை உறிஞ்சும்
எமனாக
**எம். சுராஜ்-காரைதீவு-02.**
உருவாகிவிட்டது!

காதல்....
தன் எல்லைகளில்
மலர்களை நட்டு
மத்தியில்
சூனியத்தை வைத்துள்ள
போலி நந்தவனம்!

எறும்பூரக் கற்குழியுமாம்!
அது எப்படியோ...
வேதனையூர உயிர்தேயும்..!
சாட்சி சொல்ல
என்னுடல்
பாரமான மனதை
இழுத்துக் கொண்டு
பின்னிடும்
பாதங்களோடு வருகிறது!

ஓராயிரம் துளி
உதிரக் கண்ணீரை
காதல் தன்னுள்ளே
புதைத்து வைத்திருந்தது!
நான்
தனித்து விடப்பட்டபோது
எனது விழிகளுக்குள்
திணித்து மறைந்தது!

**பஹீமா ஜஹான்-மெல்சிரிபுர.**

## இனியென்ன ?

மலையெல்லாம் பச்சை.
மனசுக்குள் தெளிவில்லை!
நம்பிக்கைத் தூண்களைக்
கறையான் அரிக்கிறது.

ஒரு நேரச் சோற்றுக்கே
சிலவேளை
ஓயாத சண்டை–
ஸ்ரீபாதக் கல்லூரி
சந்தி சிரிக்கிறது–

உரிமைக்கு இன்னும்
போராட்டத் தாலாட்டா?

மகனைப் படிக்க வைத்து
மலைமுகடு மகிழ
மனிதனாக்கி–

சொந்த வீடு கட்டி
சிங்கார வாழ்வளித்து,

சுற்றம் நட்புச்சூழ
சுதந்திரமாய்ச் சுவாசித்து

உழைத்த மண்ணிலே
இன்பமாய் இருப்போம்
என்ற நினைவெல்லாம்
கனவாய்ப்
பழங்கதையாய்.......!

அவராலும் இவராலும்
ஆகாதது ஆகுமென
நம்பிக் கெட்டோமா?
வெம்பிக் கெட்டோமா?

அவரும் நிலைதளர
இவரும் மலைத்திருக்க....
எங்கள் பொழுதெல்லாம்
எண்ணப் பெருமூச்சாய்!
வியர்வை பேராறாய்.......!

ரொட்டி இருக்கிறது
சட்டியிலே சோறு!
தேநீர் இனிக்கிறது–
தேயிலை மலையிருக்க?
ம்.......இனியென்ன?

**பண்டாரவளை-அன்புச் செல்வன்.**



## கத்தரித்த கடி ஜோக்ஸ்

**பொலிஸ்:**–ஆஸ்பத்திரியிலை படுக்கப் போன உங்களுக்கு பாதுகாப்பு ஏன் கேட்கிறீங்க?
**அவர்:**–கிட்னி திருடிருவாங்களோன்னு பயமாயிருக்குங்க.

**நண்பர்:**–எடை குறையணும்னா ஏதாவது விளையாட்டு ஆடுங்கன்னு சொன்னதை நம்பி ஆடினதில் எக்கச்சக்கமாக நஷ்டம் ஆயிடுச்சு.
**அவர்:**–என்னது எடையா?
**நண்பர்:**–இல்லை, என்னுடைய பணம். நான் ஆடினது சூதாட்டம் ஆச்சே!



**காதலன்:**– கண்ணே! நாம் ஓடிப் போய் விடலாமா?
**காதலி:**–ஓடினால் கால் வலிக்கும் ஸ்கூட்டரில் போயிடுவோம்.

**ராமு:**– எங்க அப்பா பெல்டைக் கழற்றினார் என்றால், யாரையோ விளாசப் போறார் என்று அர்த்தம்.
**சோமு:**– எங்க அப்பா பெல்டைக் கழற்றினார் என்றால், எங்கியோ விருந்து சாப்பிட போறார்னு அர்த்தம்.....!



### அதுவும் சரிதான்

மெதுவாப் பேசு, அது உன் ரகசியங்களைப் பாதுகாக்கும்.
நல்ல எண்ணத்தோடு இரு; அது உன் நடத்தையைப் பாதுகாக்கும்.
உண்மையைச் சொல்; அது உன் வார்த்தைகளைப் பாதுகாக்கும்.
கலந்து யோசனை செய்; அது உன் சிந்தனையை வளமாக்கும்.

**–வள்ளலார்.–**

## இந்த வாரம் உங்கள் பலன்

(09.07.95 முதல் 15.07.95 வரை)

சோதிட மாமணி
‘தில்லை’

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| மிதுனம் | - சூரியன், புதன், வெள்ளி |
| சிம்மம் | - செவ்வாய் |
| துலாம் | - இராகு |
| விருட்சிகம் | - வியாழன் |
| கும்பம் | - சனி |
| மேடம் | - கேது |

★ சந்திரன்–விருட்சிகம், தனு, மகரம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார். ★

### மேடம்:

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| மேடம்: | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் நிலை மந்தம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- திடீர் பிரயாணம், மனக்கவலை. | காலை 6 மணி |
| புதன்- புதிய முயற்சி, பணவிரயம். | பகல் 11 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பி.ப 1 மணி |
| வெள்ளி- பொருள் வரவு, காரிய சித்தி. | காலை 7 மணி |
| சனி- துன்பம் நீங்கும், முயற்சி பலிதம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-புதன் அதிஷ்ட இலக்கம்-5

### இடபம்:

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| இடபம்: | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, கௌரவம். | காலை 6 மணி |
| திங்கள்- முயற்சி பலிதம், பொருள் வரவு. | காலை 7 மணி |
| செவ்வாய்-மனமகிழ்ச்சி, காரிய சித்தி. | பகல் 12 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, உயர்ந்த நிலை. | காலை 8 மணி |
| வியாழன்- வீண் மனஸ்தாபம், துன்பம். | பகல் 11 மணி |
| வெள்ளி- காரிய சித்தி, பணவரவு. | காலை 9 மணி |
| சனி- செலவு மிகுதி, பயனற்ற செயல். | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-7

### மிதுனம்:

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| மிதுனம்: | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் நிலை பிரச்சனை,பணவிரயம். | காலை 9 மணி |
| திங்கள்- காரியத் தடை, பயணமிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- உறவினர் தொல்லை, மனக்கிலேசம். | பி.ப. 2 மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், உயர்ந்த நிலை. | பகல் 11 மணி |
| வியாழன்- காரிய சித்தி, பொருள் வரவு. | காலை 7 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, கௌரவம். | பி.ப. 2 மணி |
| சனி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### கர்க்கடகம்:

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| கர்க்கடகம்: | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- துயர் நீங்கும், முயற்சி பலிதம் | காலை 6 மணி |
| திங்கள்- புதிய நட்பு, பணவரவு. | பி.ப. 2 மணி |
| செவ்வாய்- காரிய சித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| புதன்- பயனற்ற செயல், தொழில் நிலை சிறப்பு. | காலை 7 மணி |
| வியாழன்- வீண் மனஸ்தாபம், மனக்கலக்கம். | பகல் 11 மணி |
| வெள்ளி- தொழில் நிலை சிறப்பு, பொருள் வரவு. | காலை 6 மணி |
| சனி- துன்பம் நீங்கும், கௌரவம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்- 4

### சிம்மம்:

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| சிம்மம்: | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | காலை 7 மணி |
| திங்கள்- உறவினர் பகை, மனக்கிலேசம்.. | காலை 6 மணி |
| செவ்வாய்-தொழில் நிலை மந்தம், பணவிரயம். | பகல் 11 மணி |
| புதன்- பெரியோர் உதவி, கௌரவம். | காலை 7 மணி |
| வியாழன்- வீண் குறை கேட்டல், செல்வாக்கு. | பகல் 12 மணி |
| வெள்ளி- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 7 மணி |
| சனி- உயர்ந்த நிலை, தொழில் சிறப்பு. | பகல் 11 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-9

### கன்னி:

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| கன்னி: | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- வீண் குறை கேட்டல், மனக்கலக்கம்.. | பகல் 12 மணி |
| திங்கள்- புதிய முயற்ச்சி, தொழில் சிறப்பு. | காலை 6 மணி |
| செவ்வாய்-வெளியிட வாழ்க்கை, மனக்கலக்கம். | பி.ப. 2 மணி |
| புதன்- தொழில் நிலை சிறப்பு, கௌரவம். | காலை 7 மணி |
| வியாழன்- அந்நியர் உதவி, மனமகிழ்ச்சி. | பகல் 11 மணி |
| வெள்ளி- உயர்ந்த நிலை, புதிய முயற்சி. | காலை 6 மணி |
| சனி- செய்தொழில் விருத்தி, முயற்சி பலிதம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### துலாம்:

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| துலாம்: | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் விருத்தி, முன்னேற்றம். | காலை 7 மணி |
| திங்கள்- பயனுள்ள செயல், கௌரவம். | காலை 6 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, வெளியிட வாழ்க்கை. | பகல் 12 மணி |
| புதன்- தனலாபம், பெரியோர் உதவி. | காலை 7 மணி |
| வியாழன்- உறவினர் உதவி, செய்தொழில் விருத்தி. | காலை 9 மணி |
| வெள்ளி- அந்நியர் உதவி, பொருள் விரயம். | பகல் 12 மணி |
| சனி- உயர்ந்த நிலை, மனமகிழ்ச்சி.. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 3

### விருட்சிகம்:

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| விருட்சிகம்: | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- முயற்சி பலிதம், தெழில் சிறப்பு. | காலை 7 மணி |
| திங்கள்- பெரியோர் உதவி, இனசன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- வெளியிட வாழ்க்கை, மனக்குறை நீங்கும். | பகல் 11 மணி |
| புதன்- உறவினர் பகை, மனக்கலக்கம். | காலை 9 மணி |
| வியாழன்- பலவித பேறு, கௌரவம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | காலை 7 மணி |
| சனி- அந்நியர் உதவி, செலவு மிகுதி. | காலை 9 மணி |

அதிஷ்டநாள்-புதன் அதிஷ்ட்ட இலக்கம்-4

### தனு:

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| தனு: | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, பொருள் வரவு. | காலை 7 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, இனசன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | காலை 9 மணி |
| புதன்- அந்நியர் உதவி, கௌரவம். | பகல் 11 மணி |
| வியாழன்- இனசன விரோதம், மனக்கலக்கம். | பி.ப. 1 மணி |
| வெள்ளி-பெரியோர் உதவி, மனமகிழ்ச்சி. | காலை 7 மணி |
| சனி- புதிய முயற்சி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம் -5

### மகரம்:

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| மகரம்: | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பெரியோர் உதவி, மன மகிழ்ச்சி | காலை 6 மணி |
| திங்கள்- வெளியிட வாழ்க்கை, அந்நியர் உதவி. | பகல் 1 மணி |
| செவ்வாய்-திடீர் பயணம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| புதன்- மனக்குறை நீங்கும், பணவரவு. | பகல் 11 மணி |
| வியாழன்-அந்நியர் பகை, வீண் மனஸ்தாபம். | பகல் 12 மணி |
| வெள்ளி-உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| சனி- வீண் மனஸ்தாபம், கௌரவக் குறைவு. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம் -1

### கும்பம்:

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| கும்பம்: | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 7 மணி |
| திங்கள்- காரிய சித்தி, பொருள் வரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்-வெளியிட வாழ்க்கை, மனப்பயம். | பி.ப. 1 மணி |
| புதன்- வீண் குறை கேட்டல், தேகசுகம் பாதிப்பு. | காலை 6 மணி |
| வியாழன்- பலவித பேறு, மனக்கலக்கம். | காலை 9 மணி |
| வெள்ளி-தொழில் சிறப்பு, இனசன மகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| சனி- உயர்ந்த நிலை, முயற்சி பலிதம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள் சனி, அதிஷ்ட இலக்கம்-8


### மீனம்:

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| மீனம்: | சுப நேரம் |
|---|---|
| ஞாயிறு- பொருள் நட்டம், மனக்கலக்கம். | காலை 7 மணி |
| திங்கள்- பயனற்ற செயல், உயர்ந்த நிலை. | பகல் 11 மணி |
| செவ்வாய்- மனக்கலக்கம், வீண் மனஸ்தாபம். | காலை 7 மணி |
| புதன்- துன்பம் நீங்கும், மனமகிழ்ச்சி. | பி.ப. 2 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, கௌரவம். | காலை 7 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி மனப்பயம். | பகல் 11 மணி |
| சனி- தனலாபம், குடும்ப மகிழ்ச்சி. | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-?





## புகைவண்டி



இரும்பு றோட்டு பாருங்கள்
இரண்டு கம்பி தானுங்கள்
கட கடவென ஓடுங்கள்
காணப் போறோம் கொழும்பை நாம்.

பத்துப் பெட்டி பூட்டுமாம்
பல நூறு பேரை ஏற்றுமாம்
சந்து பொந்து பூருமாம்
சத்தம் போட்டு ஓடுமாம்

புளுவைப் போல நெளியுமாம்
மலையைக் கண்டால் வளையுமாம்
புகையை நன்றாய் கக்குமாம்
சுக்குப் புக்கு என்று ஓடுமாம்.

கல்/நன்முனையூர் கையூம்-நாவிதன்வெளி.

"நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம்-இது
நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம்-இந்தப்
பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்-பரி
பூரணனுக் கேயடிமை செய்து வாழ்வோம்"

சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறு கதை



# பொய்யும் சொல்லலாம்!

ஒரு நாள் ஒரு வயோதிபத் தம்பதியர் ஒரூரிலிருந்து இனனோர் ஊருக்குக் காட்டுப் பாதை வழியே சென்று கொண்டிருந்தனர்.

அவர்கள் மிக நீண்ட தூரத்தில் இருந்து நடந்து வந்ததாலும், தள்ளாத வயதினாலும் மிகவும் சோர்ந்து காணப்பட்டனர். இருவரும் மிகவும் சிரமப்பட்டு தள்ளாடித் தள்ளாடி நடந்து சென்று கொண்டிருந்தார்கள்.

ஓரிடத்தில் நிறைய வயல் வெளிகள் காணப்பட்டன. அவற்றில் ஒரு வயலில், ஒரு தந்தையும் அவரது மகனும் மாடு பூட்டி உழுது கொண்டிருந்தனர்.

அவர்களைப் பார்த்த அந்த முதியவர், அவர்களுக்கு அருகில் சென்று,

"தம்பி! பாரதிபுரம் செல்வதானால் இன்னும் எவ்வளவு தூரம் போக வேண்டும்?" என்று கேட்டார்.

சோர்ந்து போயிருந்த அந்த வயோதிபத் தம்பதியரை தந்தையும், மகனும் பார்த்தனர்.

"பாரதிபுரத்திற்கு இன்னும் ஆறுமைல் தூரம் இருக்கு பெரியவரே" என்றான் உழுதுகொண்டிருந்த மகன்.

உடனே அவனது தந்தை குறுக்கிட்டு, "ஐயா பெரியவரே! எனதுமகன் தவறாகச் சொல்லுகிறான். பாரதிபுரத்திற்கு இன்னும் இரண்டு மைல் தூரம் தான் இருக்கிறது. நீங்கள் விரைவாகப் போய்விடலாம்!" என்றார்.

வயோதிபத் தம்பதியர், தந்தைக்கும், மகனுக்கும் நன்றி சொல்லிவிட்டு விடை பெற்றுச் சென்றனர்.

அவர்கள் சிறிது தூரம் சென்றதும், மகன், தந்தையைப் பார்த்து,

"தந்தையே! இங்கிருந்து பாரதிபுரத்திற்கு ஆறுமைல் தூரம் இருக்கிறது என்ற உண்மையைத்தான் அந்தத் தாத்தாவிடம் நான் சொன்னேன். ஆனால், நீங்களோ இரண்டு மைல் தூரம் தான் உள்ளது என்று பொய் சொன்னீர்கள். ஏன் அப்படிச் சொன்னீர்கள்?" என்று கேட்டான்.

அதைக்கேட்ட அவனது தந்தை அவனை நோக்கி,"மகனே! பாரதிபுரத்திற்கு இங்கிருந்து ஆறுமைல் தூரம்தான் உள்ளது. அது எனக்கும் தெரியும். ஆனால் நான் ஏன் இரண்டு மைல் தூரம்தான் உள்ளது என்று அவர்களிடம் சொன்னேன் தெரியுமா? அவர்களின் நிலையைப் பார்த்துத்தான். அவர்களோ முதியவர்கள். எவ்வளவு தூரம் நடந்து வந்தார்களோ, மிகவும் களைப்பாகத் தெரிந்தார்கள்.

அவர்களிடம் இன்னும் ஆறு மைல் தூரம் நடக்க வேண்டும் என்று சொன்னால், 'அவ்வளவு தூரம் இருக்கிறதா?' என்று நினைத்து நடப்பதற்கு முன்னேயே மேலும் சோர்ந்து போய் விடுவார்கள். அவர்களது துன்பத்தையும், சோர்வையும் போக்கவே இரண்டு மைல் என்று பொய் சொன்னேன். இரண்டு மைல் என்று சொன்னவுடன். 'இன்னும் சிறுது தூரம் தானே', என்று நினைத்து அவர்கள் முகம் மலர்ந்தது. இந்த மலர்ச்சியிலேயே அவர்கள் ஆறுமைல் தூரத்தையும் எளிதில் நடப்பார்கள். நான் சொன்ன பொய் அவர்களுக்குத் தன்னம்பிக்கையைக் கொடுப்பதற்குத் தான்" என்றார்.

இந்த விளக்கத்தைக் கேட்ட மகன்,

"பிறருக்குத் துன்பம் நேரும் என்று தெரிந்தும், அந்த நேரத்தில் உண்மையைச் சொல்வதைவிட, பிறருக்கு நலம் விளைவிப்பதற்காகப் பொய்யும் சொல்லலாம், அல்லவா அப்பா?"

என்று சொன்னான்.

"மெத்தச் சரி" என்று தந்தை கூற, மகனும் நிம்மதியடைந்து, இருவரும் வேலையைத் தொடர்ந்தார்கள்.

## உலகம்
### அடிப்படைத் தகவல்கள்



நாடுகள்: 200க்கும் மேல்
பரப்பு: 14,89,50,800 ச.கி.மீ
மக்கள் தொகை: 566,00,00,000
ஆண்,பெண்: 1014 ஆண்களுக்கு விகிதம். (1990 இல்) 1000 பெண்கள்
எழுத்தறிவு ஆண்கள்: 71%
பெண்கள்: 51%

மக்கள் தொகை
வளர்ச்சி விகிதம்: 1.7% (நாளொன்றுக்கு 2,63,000/ ஒரு நிமிடத்திற்கு 102.)
பிறப்பு விகிதம்:
(1000 த்திற்கு): 26
இறப்பு விகிதம்:
(1000 த்திற்கு): 09
குழந்தை இறப்பு விகிதம்:
(1000 த்திற்கு) : 62
சராசரி ஆயுட்காலம்: 65 வயது
நகரங்களில் வசிப்போர் (1972): 44%
கிராமங்களில் வசிப்போர்: 56
நகரங்களின் வளர்ச்சி: 2.7%

பாப்பா முரசுக்கு உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்ப வேண்டிய முகவரி:

பாப்பா முரசு
தினமுரசு
வாரமலர்
த.பெ.இல.
1772
கொழும்பு.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 15.07.1995.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 98
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 95

பரிசுக்குரியவர்:
செல்வன் ஆர். குலேந்திரன்
இ/பரி. யோவான் த.ம.வி இறக்குவானை.

பாராட்டுக்குரியவர்கள்

| | |
|---|---|
| த. ஜமுனா<br>ஆஸ்பத்திரி வீதி -4 மட்டக்களப்பு, | எம்.எம். நிலூஜன்.<br>ஆர்டன். போரெஸ்ட், சரிக்கமுல்லை,<br>மொரட்டுவை |
| ஹினாயா ஸவாஹிர்<br>குருகொடை, அக்குறணை. | எம். பஸாம் அக்ரம்.<br>அல். மிஸ்பா, மு.ம. வித்தியாலயம், ஒல்டவுன்,<br>மாதம்பை. |
| அ.அ. முஹம்மத் அஸாம்<br>ஸாஹிரா தேசிய கல்லூரி<br>புத்தளம். | மு.அ. சாஜஹான்<br>508ஏ, எம். கே. வீதி, ஓட்டமாவடி,<br>வாழைச்சேனை. |
| சிவநேசராசா வியூரகன்.<br>மட்./ குருமண்வெளி சிவசக்தி<br>ம.வித்தியாலயம் களுவாஞ்சிக்குடி | கே. ராமச்சந்திரன்.<br>தெஹியோவிட்ட த.ம.வி. தெஹியோவிட்ட |
| எம்.எம். மதனியா.<br>ஸாதாத் ம. வித்தியாலயம். அக்குரேஸ்ஸ. | |

## அறிவோம் மனதில் பதிவோம்




மிகப் பெரிய ஒரு முகம் கொண்ட கடிகாரம் 'கோல்கேட்' கடிகாரமாகும். அமெரிக்காவில் உள்ள நியூஜெர்சியில் இருக்கும் இந்தக் கடிகாரத்தின் விட்டம் 15.24 மீற்றர்கள்.



வத்தகைப்பழம் (தர்ப்பூசணி) உலகம் முழுவதும் பயிரிடப்படுகிறது. துருக்கி, சீனா ஆகிய நாடுகளில் தான் இது அதிகம் விளைகிறது.

## வாரம் ஒரு நாடு



# சைப்பிரஸ்

தலைநகர்: நிகோஸியா
பரப்பளவு: 9,251, சதுர கிலோ மீற்றர்.
மக்கள் தொகை: 7,16,000
பேசும் மொழிகள்: கிறீக், துர்கிஷ், ஆங்கிலம்
எழுத்தறிவு: 95%
மதம்: கிறிஸ்தவம், இஸ்லாம்
தனிநபர் வருமானம்: 7812 டொலர்கள்.
அமைவிடம்: மத்தியதரைக் கடலின் கிழக்கே அமைந்துள்ள ஒரு தீவு. துருக்கியின் தெற்கே 70 கிலோ மீற்றர்; சிரியாவின் மேற்கில் 100 கிலோ மீற்றர் தொலைவில் சைப்பிரஸ்தீவு அமைந்துள்ளது.
வரலாறு: 1878 இல் பிரிட்டனின் ஆதிக்கத்திற்குட் பட்டது. கிறீசுடன் சேரும் முயற்சியை துருக்கிய இனத்தவர் எதிர்த்தனர். 1955-56 இல் பெரும் கலவரத்தில் முடிந்தது. பிரிட்டன், கிறீஸ், துருக்கி, மற்றும் சைப்பிரஸ் பிரதிநிதிகளின் பேச்சு வார்த்தையின்பின், முக்கிய பிரதிநிதிகளைக் கொண்ட ஓர் அரசை நிறுவுவது என முடிவு செய்யப் பட்டது. 1960 இல் சுதந்திரம் பெற்றது. ஆர்ச் பிஷப் மகாரியேஸ் அதிபரானார். உள் நாட்டுக் கலவரங்கள் தொடர்ந்தன. 1979 இல் துருக்கி இதனை ஆக்கிரமித்து, பல பகுதிகளைத் தனது கைக்குள் ஆக்கியது. துருக்கி கைப்பற்றிய இடங்களில் கிரேக்க வம்சத்தினர் அடைக்கலம் தேடினர். ஐ.நா.சபை இதில் தலையிட்ட போதி லும் ஒரு பயனும் ஏற்படவில்லை. 1975 இல் துருக்கிய வம்சத்தவர் சுதந்திர நாட்டிற்கென வாக்களித் தனர். 1976 இல் அதிபரையும், ஆட்சி அதிகார சபையையும் தெரிவுசெய் தனர். கிரேக்க வம்சத்தினர் இடத் தைக் காலி செய்ததால் அங்கு துருக்கிய வம்சத்தினர் குடியேறினர். 1983 இல் வடசைப்பிரஸ் தனியாகப் பிரிந்து 'வட சைப்பிரஸ் துருக்கிக் குடியரசு' எனப் புதிய பெயர் சூட்டப்பட்டுள்ளது. ஏனைய நாடுகள் இப்புதிய குடியரசை அங்கீகரிக்க வில்லை.
பொருளாதாரம்: செம்பு ஏற்றுமதிப் பொருள். விவசாயம் செழித்துள் ளது. பெருந் தொழிற்சாலைகள் எதுவுமில்லை.
அதிபர்: கிலாப்கோஸ் கிளெரிடஸ்.

## மணிப்பறவைகள்

மணிப்பறவைகள் மணி அடிப்பது போலவே சத்தமிடும். தென் அமெரிக்கா, மேற்கு இந்தியத் தீவுகளில் காணப்படும் தாடி மணிப் பறவை பெரிய மணிகள் அடிப்பது போன்று சத்தமிடும். இவற்றின் சத்தம் மிக அருகில் இருந்து கேட்க முடியாத அளவிற்கு பெரியதாய் இருக்கும். ஒரு கிலோ மீற்றர் வரை இதன் குரல் ஒலிக்கும். அவுஸ்திரேலியாவில் காணப்படும் சிறிய மணிப்பறவைகள், மாடுகளின் கழுத்தில் கட்டப்படும் சிறிய மணிகள் ஒலிப்பது போல சத்தமிடும்.



www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

# 7 ஒரு தேவி என்னைத் தேடுகிறாள்

ஒன்றைத் திறந்து பார்த்தபோது ஸூப் போன்ற ஏதோ காய்கறி புகை கக்கியது-மூடினான்.

"இன்று சரி. நாளைக்கு மட்டும் நீங்கள் வெறும் ரொட்டியும் வெண்ணெய் பிஸ்கட்டுகளுமாக சமாளிக்க வேண்டி வரும்!"

"ஏன் வழிகாட்டியே?"

"நாளைக்கு அமாவாசை. நிலவு இல்லாத இரவு. தவிர நாளைக்கு சூரிய கிரகணம் வேறு. அது ஓய்ம்வரை நாங்க யாரும் சாப்பிட மாட்டோம். மாமிசங்களை ஆக்கவும் மாட்டேன். மன்னிக்க வேண்டும். சீமானே."

"சரி. எங்களுக்காக உங்கள் சம் பிரதாயத்தை கைவிடத் தேவையில்லை. கோ-எஹெட்."

"இன்னொரு வேண்டுகோள்!"

"என்ன விசேஷம்?"

"இன்று இரவே விசேஷ அமாவாசை துவங்குவதால் இந்த ஊரில் எந்த வீட்டிலும் ஆண்-பெண் சேர்க்கை நடக்கக் கூடாது."

சிரித்தான் எட்வர்ட் "சே! அதை ஏன் என்னிடம் சொல்கிறாய்? படுக்கையளவு சங்கதிகள் இரகசியமானவை. வெளியில் சொல்லக் கூடாது."

"அதற்காக இல்லை." என்ற அவனது தயக்கம் இவருக்குக் கோபத்தை ஏற்படுத்தியது.

"யூ ஸ்டுப்பிட் ஃபெலோ! உங்கள் தர்மத்தை என் வீட்டிலுமா எதிர்பார்க் கிறாய்? என் அந்தரங்கங்களில் தலையிடாதே! என் பெருந்தன்மை உனக்குமிருக்க வேண்டும். என் படுக்கையறை சங்கதிகளிலே நீயும் தலையிடாதே!"

"ஆனால் சார்......"

"யூ மே கோ நௌ." என்று சொல்லிவிட்டு, திரும்பி நின்றதும்-

அவன் கோபமாக முறைத்தவாறு வெளியேறிப் போனபோது-

அங்கே அந்த லூசி நின்றிருந்தாள். "இங்கே அடிக்கடி மழை வருமா?"

"நினைத்த நேரத்தில் வரும்."

"யார் நினைத்த நேரத்தில்?"

"நான் நினைத்த நேரத்தில்."

"அப்படியா? இப்போது நினை. வருகிறதா பார்ப்போம்."

கைகளைக்கோர்த்து மண்டியிட்டுக் கண்களை மூடினான்.

திறந்தான். "நினைத்துக் கொண்டு விட்டேன்."

"ஆனால்-மழை வரவில்லையே."

"நினைத்துக் கொண்டேன் என்றேனே தவிர எப்போது வரவேண்டும் என்று நினைத்தேன் என்று சொல்ல வில்லையே. வரும். இரவு வரும். பன்னிரண்டு மணிக்கு வரும். புயலுடன் கூடிய கொடிய மழை வரும்!"

சிரித்துக் கொண்டாள்.

கடுப்புடன் பார்த்துவிட்டுத் திரும்பிப் போனான் அவன்.

சாப்பிட்டானதும்-

"வா. ஒரு சின்ன அவுட்டிங் போய் வரலாம்" என்றான்.

"எங்கே?"

"பக்கத்தில் பாழடைந்த கோயில் இருக்கிறதே! அதைச் சுற்றிப் பார்த்துவிட்டு வரலாம்."

"அங்கேயா?" கேட்டாள் பீதியாக. "அந்த சிதைந்து போன கோயிலுக்கா?"

"ஏன்! என்ன?"

"வேண்டாம். அபாயகரமாக நிற்கிறது."

"பரவாயில்லை வா. உள்ளே போய் போட்டோக்களை எடுத்துக் கொண்டு வருவோம். என்னிடம் தானியங்கி கேமரா இருக்கிறது."

தயங்கினாலும் கிளம்பினாள். "இப்போது மணி என்ன?"

"மாலை மூன்று மணி."

"ஐந்துக்குள் வந்துவிட வேண்டும். இந்த ஊரில் எப்போது என்றே சொல்ல முடியாது."

"அரை மணியில் வந்து விடலாம்."

போனார்கள். கோயிலை நெருங்க நெருங்க ஏதோ ஒன்று அவர்களைச் சிலிர்க்க வைத்தது.

அந்த மணல் மேடுகளைக் கடக்கும் போது அவை மெலிதாக அதிர்வது போன்ற உணர்வு தோன்றி மெலிதாக நடுங்க வைத்தது.

அலட்சியப்படுத்திவிட்டு உடைந்து சரிந்து நின்றிருந்த தூணின் கீழே குனிந்து உள்ளே போனார்கள்.

இருட்டும் அமைதியும் அவர்களைப் பாதித்தன. இருட்டில் ஆராய்ந்தார்கள்.

கண்கள் தெளிவாக ஆக அந்த உருவம் தெரிந்தது.

பிரம்மாண்டமான உயரத்தில் நிறையக் கைகளும் தொங்கின-நாக்கும் பிதுங்கிய கண்களுமாக காளி சிற்பம். கையில் சூலாயுதமும் மறுகையில் வெட்டப்பட்ட ராட்சதனின் தலையுமாக-

மிரண்டார்கள்

"என்ன இது?"

## திகில் கதை மன்னன் ராஜேந்திரகுமார்



"அவர்கள் கும்பிடும் தெய்வமாக இருக்கலாம் டார்லிங்!"

இறங்கிக் கொண்டிருந்த சூரிய ஒளி ஒரு சிறு துவாரம் வழியாக வந்துகொண்டிருந்தது. வெளிச்சம் அந்த சிலையின் உச்சந்தலையில் பட்டதும்-

திடீரென்று பெரிய வெளிச்சம் அந்த அறையில் பரவ-

விதான சுவற்றில் தொங்கிக்கொண்டிருந்த வெளவால்கள் சிறகடித்துப் பறந்து இவர்கள் முகத்தைத் தாக்கி அலறவைத்து அல்லாடின.

முழு வடிவமும் தெரிந்து பயமுறுத்தவே-

கதறிக்கொண்டே வெளியே ஓடிய லூசியைத் துரத்தினான்.

"ஏய்! ஏன் இப்படிப் பயந்து ஓடறே?"

"பயமாயிருக்கிறது. எனக்குப் பயமாயிருக்கிறது."

"சரி நில். உன்னைப் படம் எடுக்கிறேன்."

"வேண்டாம். முதலில் இந்த இடத்தை விட்டுப்போனால் போதும்."

"பயப்படாதே. நில்" நிறுத்திவிட்டு தானியங்கி கெமராவினால் அவளைப் படமெடுத்தான். மெலிதான வீறலுடன் வெளியே வந்த வெள்ளைக் காகிதம் வெளிச்சம் பட்டுப்பட்டு படம் தெளிவாகத் தெளிவாகத் தெரிய-

('நூறு வருசத்துக்கு முன்னால் ஏது போல்ராய்ட் கெமரா? ரீல்' என்று எழுதாதீர்கள்-ப்ளீஸ். அது எனக்கும் தெரியும். ஆனால் கதைக்குக் கால் ஏது?)

முகம்மாறினார். அவளுக்குப் பின்னால்-

தோளுக்கு மேல் முகமில்லாத இரண்டு இந்தியப் பெண்களின் உருவம் நிற்பது நிழலாகத் தெரிந்ததும்-

பரட் பரட் என்று கிழித்துப் போட்டான் போட்டோவை.

"ஏன் கிழித்துப் போட்டே? நான் பார்த்திருக்க மாட்டேனா?"

"நீ பார்க்கவேண்டாம்னு தான் கிழிச்சுப் போட்டேன்."

"ஏன்?" என்று கேட்டவளுக்குப் பதில் சொல்லாமல் இழுத்துப்போனான்.

□□

"என்ன அடிக்கடி ஜன்னல் கதவை திறந்து பார்க்கிறாய்?"

"யாரோ கூப்பிடுகிற பிரமை இன்னமும் எனக்குள் இருக்கிறது. அதுமட்டுமில்லை. அந்த டிரைவர் இன்றைக்கு சரியாக பன்னிரண்டு மணிக்கு மழைவரும் என்றான். வானம் மேகமேயில்லாமல் தெளிவாக இருக்கிறது. அதெப்படி மழைவரும்? அதுவும் புயலோடு?"

"உளறல். வெறும் உளறல். வா. வந்துவிடு."

படுத்தவளை அணைக்க முயன்றபோது யாரோ பிடித்துத் தள்ளுவது போன்ற உணர்வு வந்ததும் - அவள் தான் தள்ளி விட்டாள் என்ற கோபத்துடன் திரும்பி படுத்துக் கொண்டவன் தூங்கிப் போனான்.

இரவு மணி பன்னிரண்டை நெருங்க கொஞ்ச நேரமிருக்கும் போது -

தூக்கம் வராமல் தவித்துக் கொண்டிருந்தவள், எதுவோ ஜன்னலில் இருந்து விட்டெறிந்தாற்போல வந்து விழவே-

சட்டென்று பிடித்தவள் உள்ளங்கையில் சுருக்கென்ற வலி ஏற்பட பார்த்தாள்.

எலுமிச்சம்பழம்! மஞ்சள் சந்தனப் பட்டையின் நடுவில் சிகப்பாக ஒரு பொட்டு.

நடுவில் செருகிய ஊசியைப்பிடுங்கி பழத்தை விட்டெறிய அது நின்ற நிலையிலே ஆடியது, மெலிதான இரவு விளக்கு ஒளியில் பயமுறுத்துவதாக இருந்தது.

கூடவே பெரிய ஓசையுடன் இடி முழங்கியதும் தொடர்ந்து திடீரென்று பெய்த மழையும் அவளுக்குத் திகிலூட்டின.

மெல்ல கட்டிலை விட்டிறங்கி மாடிப் படியில் இறங்கி வந்து நீண்ட ஹோலைக் கடந்து சென்று கதவைத் திறந்த போது பெரும் ஓசையுடன் பெரும் புயல் காற்று உள்ளே வந்து இவளைப் பின்னோக்கித் தள்ளுமளவு சக்தியுடன் வீசியது.

பிடிவாதமாகக் கதவு அருகே போய் நின்ற போது-

சற்றுத் தொலைவில் மின்னல் வெளிச்சத்தில் அவள் தெரிந்தாள்.

சமையல்காரி என்று அறிமுகப்படுத்தப்பட்ட அதே பெண். "லூசி வா" என்றாள் இருகைகளையும் நீட்டி. "வா லூசி, வந்து விடு" என்றாள் அதிகாரமாக-

கண்மயங்கிய நிலையில் படி இறங்கிப் போய் அவள் அருகில் நிற்க, இவள் கையைப் பற்றிய அவள் நடந்து சென்றாள்.

அந்த பாழடைந்த கோயிலுக்கு நடந்தார்கள்.

நடந்து கொண்டே இருந்தார்கள்.

கோயிலுக்குள்ளே போனதும் அந்தப் பெண் இவள் நைட்டியின் நாடா முடிச்சை அவிழ்த்துவிட விலக்கியதும்-

கவுன் தரையில் சரிந்து விழுந்து அவளை முழுக்கத் திறந்த நிலையில் காட்டியது. அவளை அழைத்துப் போய் நடுவில் குழிந்த மரத்துண்டு ஒ'றில் -

மெலிதான நிதானத்துக்கு அவள் வந்த போது -

எதிரே பெரிதாக நெருப்பு எரிவது தெரிந்தது. கண்களை உயர்த்தி பக்க வாட்டில் பார்த்த போது-

அவன் தெரிந்தான். இந்தப் பக்கம் பார்த்த போது இவளும் தெரிந்தாள்.

இரண்டு பேர் கைகளிலும் வெட்டரிவாள் இருந்தது. அந்தப் பெண் நெருங்கி வந்து இவளது புறங்கழுத்தில் சரிந்திருந்த தலைமயிரை ஒதுக்கி முன்புறம் தள்ளிவிட-

அடுத்த வினாடி-

பின்னங் கழுத்தில் ஆவேசமாய் ஏதோ பலமாகத் தாக்குவதை மட்டுமே உணர்ந்தாள்.

காலையில் எழுந்ததும் எட்வர்ட் ஜன்னல் வழியாகப் பார்த்து வியந்தான். எட்டிப் பார்த்துக் கொண்டு விழித்தவாறு இருந்தாள்.

"ஹேய்! காலையிலே அங்கேயிருந்து என்ன எட்டிப் பார்க்கிறாய்?"

அவள் பதில் பேசாமல் இருக்கவே எழுந்து ஜன்னலருகே போய்ப் பார்த்தவனுக்கு வயிற்றுக் குடல் எழுந்து வாய்க்கே வந்து விட்டது போல அதிர்ச்சி வந்தது.

ஜன்னல் மேடையில் அவள் தலை-தலை மட்டுமே இருந்தது.

வாய்விட்டு அலறினான்.

□□□

கதையை நிறுத்திச் சுற்றிலும் பார்த்தாள் தேவி-

யார் முகத்திலும் எந்த மாற்றமும் தெரியவில்லை என்றதும்- ஏமாற்றத்தால் துவண்டு போனாள்.

எல்லோர் முகத்திலும் கதை கேட்கும் ஆர்வம் மட்டுமே இருந்தது. மற்றப்படி எந்தத் திருட்டு உணர்வும் இல்லை.

"தோற்று விட்டேன் சார்! நான் தோற்றுப் போனேன்."

"தேவி" என்று அவள் முதுகைத் தொட்டேன்.

"துவண்டு போகாதே தேவி"

"தோத்துட்டேன் சார். நான் சுத்தமாகத் தோற்றுப் போயிட்டேன்."

"எப்படிச் சொல்றே? எல்லார் முகத்தையும் பார்த்தே. சரி. மெர்லீன் முகத்தைப் பார்த்தியா?"

"அவளுக்குத்தான் விதிவிலக்கு கொடுத்திருக்கேனே!"

"அப்போ தைரியமா எதிரே நின்று நடுங்கி இருக்கலாமே? ஏன் ஓடி ஒளிந்திருக்கணும்?"

புரியாமல் பார்த்தாள்.

"ஆமாம். எங்கே அவள்? கூட்டத்தில் இல்லையே" என்று அவள் சொல்லும் போதே-

கூட்டம் கலையத் துவங்கியது.

போதை மிக ஏறிய ஒருவர் இவள் இடுப்பைத் தொட்டார். "ஓ கை இங்கே இருக்கா?" என்று அப்பாவித்தனமாக சொல்லிக் கை குலுக்கிவிட்டு புறப்பட்டுப் போனார்.

ஒரு இளம் பெண் அக்கறையாக வந்து "கண்டு பிடித்து விட்டாயா? நானில்லையே?" என்று அக்கறையாகக் கேட்டு விட்டுப் போனாள்.

கொஞ்ச நேரத்தில் -

பார்ட்டி ஹோல் முழுக்க காலியாகி விட்டதும்-

துவண்டு சரிந்து சோகம் காட்டிய அந்த தேவியை அணைப்பாக நடத்தினேன்.

"வா, அந்த மெர்லீனைத் தேடி அவள் மாயமாய் மறைந்த காரணத்தைக் கேட்போம்."

நாங்கள் போகும் போது ஹோட்டல் ஆட்கள் பேசுவதும் மேஜையை இழுப்பதும் நாற்காலிகளை மடக்கிப்போடுவதுமாக ஓசைப் படுத்திக் கொண்டிருந்தார்கள்.

ஒரு அறைக்குப் போன போது-

அவள் படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

அறையிலிருந்த ஒலி பெருக்கியில் அங்கே ஹோலில் மேஜைகள் இழுக்கப் படுவதும்-நாற்காலிகள் மடக்கப்படுவதுமான ஓசைகள் கேட்டவண்ணமிருந்தன.

"இவள்தான்" தேவி பூரித்துப் போனாள். "நேரே நின்று கேட்டால் எங்கே மாட்டிக் கொள்ளுவோமோ என்கிற பயத்தில்- தன்னையும் மீறி கண்கள் காட்டிக் கொடுத்து விடுமோன்னு இங்கே வந்து இரகசியமாக மறைஞ்சிருந்து கேட்டிருக்கிறாள் இவள். இவள் தான் நூற்றாண்டுக் கால இளமை மாறாத குற்றவாளி!"

சட்டென்று அவள் கைகளை மடக்கி முதுகோடு ஒட்டவைத்து என்னோடு சேர்த்துக் கொண்டேன்.

"கத்தாதே!"

"என்ன இது? விடுங்க என்னை. நான் குற்றவாளியைக் கண்டு பிடிச்சிட்டேன்."

"நிஜம். நீ குற்றவாளியைக் கண்டு பிடிச்சிட்டே. ஆனால் அது அவள் இல்லே"

பைக்குள் கைவிட்டு மடக்கிய நிலையிலிருந்த பட்டன் கத்தியை எடுத்தேன்.

"மூன்று சூரிய கிரகணம் சேரும் அமாவாசைகளில் மூன்று பெண்களை நரபலி கொடுத்து அந்த இரத்தத்தை அந்தக் கோயில் தெய்வத்துக்கு அபிஷேகம் செய்தால் நிரந்தர இளமையும் நீண்ட ஆயுளும் கிடைக்குமாம். அதனால் தான் என் இளமை நிரந்தரமாக இருக்கிறது. இதுவரை யாருக்குமே தெரியாத இரகசியத்தை தெரிந்து வந்த பெண்ணே-"

பட்டனைத் தட்டிவிட, கத்தி டக்கென்று நாக்கை நீட்டிக் கொண்டது.

கண்கள் விரியப் பார்த்தாள். "நீயா? நீயா நான் தேடும் ஆள்?" என்று அவள் கேட்கும் போதே-

பின்னுக்குப் போன அதே வேகத்தில் முன்னுக்குப் பாய்ந்தாள். என் வலது கை-

அவள் மார்பில் ஜீவாதாரமான பகுதியில் செருக்கிக் கொண்டது.

இழுத்தேன்.

"என் இரகசியம் இரகசியமாகவே இருக்க வேண்டும். முட்டாள் பெண்ணே! போ, ஒழிந்து போ!"

இரண்டு-

மூன்று-

நான்காவது குத்துக்கு முன்னால்- சரிந்து விழுந்தாள் பிணமாக.

அதிகம் அலட்டிக் கொள்ளாமல் குளியலறைக்குப் போய் கத்தியை சுத்தமாக அலம்பிவிட்டு வெளியே வரும் போது-

ஹோல் ஓசைகள் அடங்கி அமைதியாக இருந்தது.

மெர்லீனை எழுப்பினேன். "வா, போகலாம்."

தூக்கம் கலைந்து எழுந்து நடந்தவள் தரையில் துவண்டு கிடந்த அவளையும் பரவி நின்ற இரத்தத்தையும் பார்த்துக் கேட்டாள்

"என்ன இது?"

"நத்திங். யாரோ அவளைக் கொலை செய்து விட்டார்கள். நீ வா. போய் விடலாம், பொலிஸ் வரும் முன்னே-" என்று அலட்சியமாக சொல்லி- நடந்தோம்.

**-முற்றும்-**

அமர்க்களமான தொடர் வேகமாய் விறு-விறு வென்று முடிந்துவிட்டதே என்று வருத்தமாக இருக்கிறதா?

-வருந்த வேண்டாம்-


12ம் பக்கம் பாருங்கள்

## பேனா நண்பர் அரங்கம்



பெயர்:-எம். சலீம்
வயது:-19
முகவரி:-எஸ்.கே. ஹாஜியார் வீதி, காத்தான்குடி-06.
பொ.போ:- வானொலி, பேனாநட்பு, கதைப்புத்தகம்.

பெயர்:-சம்ஜான் பீபி
முகவரி:-HOUSE NO-638 BLOCKNO-3, ROADNO-4, SABAHIYA, KUWAIT.
பொழுது போக்கு:- பத்திரிகை, ரீ.வி., வானொலி.





பெயர்:- அன்ரன் பிரமில்
வயது:- 26
முகவரி:- 120/30, விவேகானந்தா மேடு, கொழும்பு-13.
பொழுது போக்கு:-உதைபந்து, வானொலி, ரீ.வி.

பெயர்:-எச். பதஹுல்லா
வயது:- 22
முகவரி:- கும்பல் அங்க, இப்பாகமுவ.
பொழுது போக்கு:- பத்திரிகை, வானொலி.





பெயர்:- கே. மனோசாந்தி
முகவரி:- P.O. BOX-90-570, JDEDTH EL METN, LEBANON.
பொ. போ.:- பத்திரிகை, கதைப்புத்தகம், வானொலி.

பெயர்:-கே. திரு
வயது:-25
முகவரி:- 65, ST. JOHNS ROAD, WEMBLEY, MIDDX, HA9 75G, LONDON.
பொ.போ:-வழமையானவை.

பெயர்:-எம். முகமது ஜகபர்தீன்
வயது:-37
முகவரி:-P.O. BOX-4638, DUBAI, U.S.E.
பொழுது போக்கு:- வழமையான பொழுது போக்குகள்.

# மக்சீம் கார்க்கி

# தாய்

## 32



அந்த ஜனங்கள் நிகலாயைப் பார்த்து உரத்துக் கூச்சலிடுவார்கள். மானாங்காணியான வசை மொழிகள் குழவிக் கூட்டத்தைப் போல அவனை மொய்த்துப் பிடுங்கும். அவன் அவற்றுக்கு எந்தப் பதிலும் சொல்வதில்லை. நிமிர்ந்தும் பார்ப்பதில்லை. வெறுமனே உரத்துக் கூச்சலிட்டுத் தன் குதிரைகளை முடுக்குவான்:

"போ. முன்னே!"

வெளிநாட்டிலிருந்து புதிதாக வந்த ஒரு பத்திரிகையையோ புத்தகத்தையோ வாசித்துக் காட்டுவதற்காக, அந்திரேய் சமயங்களில் எல்லோரையும் வீட்டுக்கு அழைத்து வருவதுண்டு. அந்தச் சமயங்களில் நிகலாயும் வருவான்; வந்து ஒரு மூலையிலே சென்று உட்காருவான். ஒரு மணியோ, இரண்டு மணியோ, அவன் அப்படியே வாய் பேசாது உட்கார்ந்து வாசிப்பதை மட்டும் கேட்டுக் கொண்டிருப்பான். வாசித்து முடிந்தவுடன், அந்த இளைஞர்கள் காரசாரமான விவாதங்களில் இறங்குவார்கள். அவற்றில் நிகலாய் பங்கெடுத்துக் கொள்வதேயில்லை. எல்லோரும் சென்ற பிறகு அவன் மட்டும் பின் தங்கி அந்திரேயோடு தனிமையில் பேசுவான்.

"யாரை அதிகமாகக் குறை கூறுவது?" என்று துயரத்துடன் கேட்பான்.

"குறைகூற வேண்டிய மனிதர்களில் முதன்மையானவன் யார் தெரியுமா? 'இது என்னுடையது' என்று எவன் முதன் முதல் சொன்னானோ, அவன் தான். அந்தப் பயல் செத்துப் போய் எத்தனை ஆயிரம் வருஷங்களோ ஆகிவிட்டன. இனி அவன்மீது நாம் பாய்ந்து விழ முடியாது" என்று வேடிக்கையாகப் பதில் சொன்னான் ஹஹோல். எனினும் அவனது கண்களில் உற்சாகம் இல்லை. நிலைகொள்ளாமல் அவை தவித்தன.

"பணக்காரர்கள்? அவர்களைத் தாங்கிப் பிடிக்கும் கூட்டத்தார்? அவர்கள் மட்டும் ஒழுங்கானவர்களா?"

அந்திரேய் தன் தலை மயிரை விரல்களால் உலைத்து விட்டுக் கொண்டிருந்தான். வாழ்க்கையைப் பற்றியும், மாந்தர்களைப் பற்றியும் விளக்கமான முறையில் விவரித்துச் சொல்வதற்குரிய எளிய வார்த்தைகளைப்பற்றி யோசித்தவாறே மீசை முனையை இழுத்து விட்டுக் கொண்டான். ஆனால் அவன் எதைச் சொன்னாலும் சகல மக்களையும் பொதுப்படையான முறையில் குறை கூறுவதுபோலத்தான் இருந்தது. அது நிகலாய்க்குத் திருப்தியளிக்கவில்லை. அவன் தனது தடித்த உதடுகளைக் கப்பென்று மூடியவாறே தலையை அசைப்பான். 'அது அப்படியல்ல' என்று ஏதாவது முணுமுணுப்பான். கடைசியாக அவன் திருப்தியடையாத கலங்கிய மனத்தோடு விடைபெற்றுக்கொண்டு சொல்வான்.

ஒரு நாள் அவன் சொன்னான்:

"இல்லை, குற்றம் சாட்டப்பட வேண்டிய மனிதர்கள் இருக்கிறார்கள். அவர்கள் இங்கேயே இருக்கிறார்கள். நான் சொல்கிறேன், கேள். நாமோ வாழ்நாள் முழுவதும் தழைபடர்ந்த வயல் வெளியை கருணையின்றி உழுது தள்ளுவது மாதிரி உழைத்து உழைத்துச் சாகவேண்டியிருக்கிறது!"

"உன்னைப் பற்றி இஸாயும் இதைத்தான் ஒரு நாள் சொன்னான்" என்று சொன்னாள் தாய்.

"யார், இஸாயா?" என்று ஒரு கணம் கழித்துக் கேட்டான் நிகலாய்.

"ஆமாம். அவன் ஒரு மோசமான பயல். அவன் எல்லோர் மீதும் ஒரு கண் வைத்திருக்கிறான். எல்லோரைப் பற்றியும் அநாவசியமான கேள்விகளையெல்லாம் கேட்கிறான். அவன் நமது தெருவுக்குள்ளும் வந்து, ஜன்னல் வழியாக எட்டிப் பார்க்கிறான்."

"என்னது? ஜன்னல் வழியே எட்டிப் பார்க்கிறானா?" என்று திருப்பிக்கேட்டான் நிகலாய்.

ஆனால் அதற்குள் தாய் படுக்கச் சென்றுவிட்டாள். எனவே அவனது முகத்தை அவள் பார்க்கவில்லை. இருந்தாலும் ஹஹோல் பேசியதைப் பார்த்தால், தான் அந்த விஷயத்தை நிகலாயிடம் சொல்லியிருக்கக் கூடாது என்றுதான் அவளுக்குப்பட்டது.

ஹஹோல் அவசர அவசரமாகக் குறுக்கிட்டுச் சொன்னான்: "அவனுக்குப் பொழுது போகாவிட்டால் இப்படி எட்டிப் பார்த்து விட்டுத்தான் போகட்டுமே...."

"நிறுத்து" என்றான் நிகலாய்; "குற்றம் சாட்டப்படவேண்டியவர்களில் அவனும் ஒருவன்!"

"அவனை எதற்காக குற்றம் கூற வேண்டும்? முட்டாளாக இருப்பதற்காகவா?" என்று அவசரமாகக் கேட்டான் அந்திரேய்.

நிகலாய் பதிலே பேசாமல் எழுந்து சென்று விட்டான். ஹஹோல் அறைக்குள்ளே மெதுவாகவும் சோர்வோடும் மேலும் கீழும் நடந்தான். அவனது ஒல்லியான கால்கள் சரசரத்து மெதுவாக நடந்தன. அவன் தனது பூட்சுகளைக் கழற்றிவிட்டு நடந்தான். நடப்பதால் சத்தம் உண்டாக்கி பெலகேயாவை எழுப்பிவிடக் கூடாது என்று கருதினான். ஆனால் அவளோ தூங்கவில்லை. நிகலாய் சென்ற பிறகு அவள் ஆத்திரத்தோடு பேசினாள்:

"அவனைக் கண்டாலே எனக்குப் பயமாகத்தானிருக்கிறது."

"ஹும்!" என்று முனகினான் ஹஹோல். "ஆமாம், அவன் எப்போதுமே வக்கிர புத்தி கொண்டவனாகவே இருக்கிறான். இனிமேல் அவனிடம் இஸாயைப்பற்றிப் பேச்செடுக்காதீர்கள், அம்மா. இஸாய் உண்மையில் ஒரு ஒற்றன்தான்."

"அதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது?" என்றாள் தாய்; "அவனது பந்துக்களில் ஒருவன் ஒரு போலீஸ்காரன்."

"இல்லை. நிகலாய் அவனை வெளுத்து வாங்கி விடுவான்" என்று மேலும் தொடர்ந்து பேசினான் ஹஹோல்; "அதிகாரத்திலே இருக்கும் கனதனவான்கள் இந்தச் சாதாரண மக்களின் மனத்திலே வளர்த்து விட்டிருக்கிற உணர்ச்சிகளைப் பார்த்தீர்களா, அம்மா? நிகலாய் மாதிரி நபர்கள் தமக்கு இழைக்கப்பட்ட தீங்கை உணர்ந்தால், அதனால் தமது பொறுமையையும் இழந்து விட்டால் என்ன நடக்கும் தெரியுமா? அவ்வளவுதான். வானத்தில் இரத்த வெள்ளம் பரவும்; பூமி ஒரு சோப்புப் போல இதில் நுரை தள்ளும்!"

"பயங்கரமாய் இருக்கிறது. அந்திரியூஷா!" என்று வியந்து போய்ச் சொன்னாள் தாய்.

"ஈக்களை விழுங்கினால் குமட்டத்தான் செய்யும்" என்ற ஒரு நிமிஷம் கழித்துச் சொன்னான் அந்திரேய். முதலாளியின் ஒவ்வொரு துளி இரத்தமும், மக்களின் கண்ணீர்ச் சமுத்திரத்தால் கழுவப் பட்டிருக்கிறது."

திடீரென அவன் சிரித்தான், பிறகு சொன்னான்:

"இதெல்லாம் உண்மைதான். ஆனால் இதுமட்டும் ஆறுதல் தராது!"

□□

ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று தாய் கடைக்குச் சென்று விட்டு, வீட்டுக்குத் திரும்பி வந்ததும் கதவைத் திறந்தாள்; திறந்தவுடனேயே வாசல் நடையில் அப்படியே நின்று விட்டாள்; வேனிற்கால மழையிலே நனைந்து விட்டதைப்போன்ற குதூகலத்தில் மூழ்கித் திளைத்து தன்னிலை மறந்து அப்படியே நின்றுவிட்டாள். ஏனெனில் வீட்டினுள் பாவெலின் வலுவான குரல் கேட்டது.

"இதோ அவளும் வந்துவிட்டாளே" என்று கத்தினான் ஹஹோல். திடீரெனத் திரும்பிய பாவெலின் முகத்தில் ஏதோ ஆறுதல் தரும் உறுதிமிக்க உணர்ச்சி பிரகாசிப்பதாக அவளுக்குத் தோன்றியது.

"வந்துவிட்டான்-வீடு வந்து சேர்ந்து விட்டான்" என்று அவள் தடுமாறிக் குழறினாள். அவனது எதிர்பாராத வரவினால் அவள் மெய்மறந்து நிலைகுழம்பிப்போய் அப்படியே உட்கார்ந்து விட்டாள்.

அவன் தனது வெளிறிய முகத்தை அவள் பக்கமாகக் கொண்டு போனான். அவனது உதடுகள் துடித்து நடுங்கின. கண்ணின் கடையோரத்தில் ஈரம் பளபளத்துக் கசிந்தது. ஒரு கண நேரம் அவன் எதுவுமே பேசவில்லை. அவளும் அவனை மௌனமாக வெறித்துப் பார்த்தாள்.

ஹஹோல் அவர்களை விட்டு விலகி வெளி முற்றத்துக்கு வந்து சீட்டியடிக்கத் தொடங்கினான்.

"நன்றி, அம்மா" என்று தணிந்த குரலில் தளதளத்துக் கொண்டே தனது நடுங்கும் விரல்களால் அவளது கரத்தைப் பற்றி அமுத்தினான் பாவெல், "என் அன்பே! மிகுந்த நன்றி."

"அவனது முகத்திலே தோன்றிய உணர்ச்சியையும், சொல்லிலே தொனித்த இனிமையையும் கண்டு புளகாங்கிதம் அடைந்து தன்னை மறந்துபோன அந்தத் தாய், மகனின் தலையைத் தடவிக் கொடுத்தாள்; தனது இதயத்தின் படபடப்பைச் சாந்தி செய்ய முயன்றாள்.

"அட, கடவுளே, எனக்கு எதற்காக நன்றி கூறுகிறாய்?" என்றாள் தாய்.

"எங்களது மகத்தான கருமத்தில் நீ ஒத்துழைத்ததற்காக! உனக்கு நன்றி, அம்மா!" என்று திரும்பச் சொன்னான்; "தானும்தன் தாயும் ஒரே மாதிரி உணர்ச்சி கொண்டவர்கள், ஒரே கொள்கை வசப்பட்டவர்கள் என்று ஒருவன் கூறிக் கொள்வது கிடைப்பதற்கரிய பேரானந்தம், அம்மா!"

அவள் மௌனமாக இருந்தாள். அவனது வார்த்தைகளைத் திறந்த மனத்தோடு, ஆர்வத்தோடு அள்ளிப் பருகினாள். தன் முன்னே மிகவும் நல்லவனாக, அன்புருவமாக நின்ற தன் மகனைக் கண்டு வியந்து கொண்டிருந்தாள் தாய்.

"அம்மா, உனக்கு எவ்வளவு சிரமமாயிருந்திருக்கும் என்பது எனக்குத் தெரியும். ஏதேதோ உன் மனத்தைப் பிடித்து இழுத்தது என்பது எனக்குத் தெரியும். நீ எங்கள் கருத்துக்களோடு ஒத்துவரமாட்டாய், எங்கள் கருத்துக்கள் உன்கருத்துக்களாக என்றுமே ஆகப்போவதில்லை என்றெல்லாம் நான் நினைத்துப் பார்த்ததுண்டு. ஆனால், நீ உன் வாழ்க்கை முழுவதையும் எப்படிப்பொறுத்துச் சகித்து ஏற்றுவந்தாயோ, அது போலவே மௌனமாகப் பொறுத்து விடுவாய் என்றுதான் நான் நினைத்தேன். அதுவே எனக்குச் சங்கடமாயிருந்தது"

"அந்திரியூஷா எனக்கு எவ்வளவோ விஷயங்களைப் புரிந்து கொள்ள உதவி செய்தான்" என்றாள் அவள்.

"அவன் உன்னைப் பற்றிச் சொன்னான்" என்று கூறிச் சிரித்தான் பாவெல்.

"இகோரும் கூடத்தான். அவனும் நானும் ஒரே ஊர்க்காரர்கள். அந்திரியூஷா எனக்கு எழுதப்படிக்கக்கூட கற்றுக் கொடுக்க விரும்பினான்."

"ஆனால் நீ வெட்கப்பட்டுப்போய், யாருக்கும் தெரியாமல் இரகசியத்தில் எழுதப் படிக்க முனைந்தாய் இல்லையா?"

"அது கூட அவனுக்குத் தெரியுமா?" என்று வியந்தாள் அவள். தனது இதயத்தில் பொங்கிய ஆனந்தத்தோடு அவள் பாவெலை நோக்கிச்சொன்னாள்:

"அவனை உள்ளே கூப்பிடு. நம்மிருவருக்கும் இடையில் தானும் இருக்கவேண்டாம் என்றுதான் அவன் வெளியே போனான். பாவம், அவனுக்கு என்று ஒரு தாய் இல்லை....."

"அந்திரேய்!" என்று வாசற்கதவைத் திறந்து கொண்டே கூப்பிட்டான் பாவெல்; "நீ எங்கே இருக்கிறாய்?"

"இங்கேதான். கொஞ்சம் விறகு தறிக்க வேண்டும்."

"வா இங்கே!"

அவன் உடனே வந்துவிடவில்லை. சிறிது நேரம் கழித்து சமையல் கட்டுக்குள் வந்து வீட்டு விஷயங்களைப் பேசத் தொடங்கினான்:

*(தொடர்ந்து வரும்.)*

---

# கேலி

**எம். சுரேஷ்**



பதட்டம், வதந்திகள், யுத்தம்..நாட்டு நிலமை மீண்டும் சேற்றுக்குள் இறங்கிய எருமையின் கதையாய்ப் போனது. எங்குமே சடுதியான மாற்றங்கள். மௌனமாய் முக்கியத்துவம் பெற்று, வினாடிக்கு வினாடி கடுகதியில் வளரும் இனவாதம் ஆங்காங்கே சிலரின் விமர்சன வார்த்தைகளில் இருந்து புரிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது.

நெருக்கமான, சிநேகபூர்வமான முகங்கள்கூட ஏனோ இப்போது பார்ப்பதற்கு மிகவும் அந்நியப்பட்டுத் தெரிந்தன. கருத்துக்களும், சிலவிடயங்கள் தொடர்பான விமர்சனங்களும் மனதைப் புண்படுத்தின. எமக்கு எல்லாவற்றையும் கேட்க மட்டும்தான் முடிந்தது.

கிட்டத்தட்ட ஒரு 6 மாதங்கள் மிகவும் சுமுகமாய் இருந்துவிட்டு மீண்டும் பழைய நிலைக்கு மாறியபோது அலுவலக அல்லது தொழில்சார் ரீதியில் பலர் எதிர்நோக்கும் பிரச்சனைகள் உளரீதியான தாக்கத்தை அதிகப்படுத்தன.

பொதுவாக எனது அலுவலகத்தில் என்னைத் தவிர எல்லோருமே பெரும்பான்மை இனத்தவர்கள். எல்லோருமே என்னோடு மிக அன்பாகப் பழகுவார்கள். பிரச்சனைகள் சற்று அதிகரித்த நேரங்களில்கூட அவர்கள் என்மீது அதிக அன்பு செலுத்தினார்கள், ஒரு சகோதரனைப் போல...

நாங்கள் வழமையாக வேலை இல்லாத நேரங்களில் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் கேலி செய்து இரசிப்போம். உண்மையில் அது இரசிக்கும்படியாக இருக்கும். அத்தகைய ஒரு சந்தர்ப்பம்தான் இது.

"மச்சான்! நீயும் பயங்கரவாதியோ தெரியாது!" ஒரு நண்பன் சகோதர மொழியில் கேலி செய்தான். அது வெறும் 'கேலி'தான் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்.இருப்பினும் மனதிற்குள் லேசாய் வலி எடுத்தது!!

---

# பெண்ணுக்கு மறுபெயர்...!

**நிந்தவூர் உஸனார் ஸலீம்**



சாப்பாட்டுக்கு வழியின்றி அந்தக் குடும்பமே அல்லாடிக் கொண்டிருந்தது. குடும்பத் தலைவன் வாகன விபத்தில் அகப்பட்டு, நடமாட முடியாது வீட்டுக்குள் முடங்கியும் சில மாதங்கள் கடந்துவிட்டன. மூன்று மாதக் கைக்குழந்தைக்கு பால்கொடுக்க பவித்திரா படும் இன்னல் கொஞ்ச நஞ்சமல்ல. ஏனைய ஐந்து சிறுவர் சிறுமியரும், கணவரும் உயிர்வாழ அவள் பக்கத்து வீடுகளில் பாத்திரம் தேய்த்துத் தேய்த்துத்தானும் ஓடாகி உருக்குலைந்து தேய்ந்து போனாள்..

அப்படியிருக்கும் போதுதான் "பவித்திரா...முடியாதுண்ணு சொல்லிடாத...மண்தின்னப்போற ஒடம்ப மனுசனுக்குக் கொடுத்தா குறைஞ்சா போகும்...? மொத்தமா ஆயிரம் ரூபா தரப்போறதாகச் சொல்றாரு...அவரோட மனைவி ஒரு மாசத்துல வந்திடுவா..அதுவரைக்கும்தான் நீ அங்க போகணும்..மாலையில் அஞ்சிமணிக்குப் போயி ஆறுமணிக்கெல்லாம் வீட்டுக்கு வந்துடலாம்..நல்ல பணக்கார இடம்...நீ அவரோட மனசுகுளிரும்படி நடந்துக்கிட்டா இன்னும் நெறையப் பணம் கொடுப்பாரு..கார் அனுப்புவாரு..காருலயே போயிட்டு வந்துடு..இந்தா காசப்புடிம்மா" ஆயிரம் ரூபா நோட்டொன்றை அலமேலுப்பாட்டி பவித்திராவின் கரங்களுக்குள் வலுக்கட்டாயமாகத் திணித்தாள்.

பவித்ரா வேதனையுடன் காசை வாங்க மனமின்றி வாங்கிக்கொண்டாள். "பாட்டி..உயிர் போனாலும் இந்த விஷயத்த அவர்கிட்ட மட்டும் சொல்லிடாத...விஷயம் தெரிஞ்சா அவரு அவமானத்துல உசிரையே விட்டிடுவாரு" பாட்டியைப் பார்த்துப் பயத்துடன் சொன்னாள். பாட்டியும் சிரித்துக் கொண்டே "மறந்துடாம சாயங்காலம் காருவரும் போயிடு" சொல்லிவிட்டுப் போய் விட்டாள்.

கணவருக்குத் தெரியாமல் காரிலே போவதும்; காரியத்தைக் கச்சிதமாக முடிப்பதும்; கணவருக்குத் தெரியாமல் வீட்டுக்கு வருவதுமாகப் பலநாட்களைப் பயந்துபயந்து பவித்ரா கடத்திவிட்டாள். பிள்ளைகளும், கணவரும் வயிறுநிறையச் சாப்பிட்டு மகிழ்ச்சியுடனிருப்பது அவளின் இதயத்தை நிறைத்துத் திருப்திப்படுத்தியது.

அன்றும் ஆறு மணிக்குப் பின் பவித்ரா முதலாளியின் வீடுசென்று வந்தாள். கணவருக்கும் பிள்ளைகளுக்கும் அவசர அவசரமாகச் சாப்பாடு பரிமாறினாள். கணவன் சொன்னான் "பவித்ரா...என்னோட சாப்பாட்டுல கொஞ்சம் விஷத்தையும் கலந்து கொடுத்துடு....நீ மானத்தக் கொடுத்துப் போடுற இந்தச் சோத்த விட விஷத்தத் தின்னு செத்துப்போயிடுறன்" அவன் கூறிவிட்டு ஓவென அழுதான். பவித்ரா அந்தக் கொடிய வார்த்தைகளைக் கேட்டுத் துடித்துப் போனாள்.

மறுகணமே உண்மைகளை மறைக்காது கணவரிடம் சொன்னாள் "அந்த வீட்டுக்கு நான் தப்புச் செய்யப் போகல்லீங்க..அவரோட மனைவிக்கி புற்றுநோய்..அவ ஒப்பரேசனுக்காக இந்தியா போயிருக்கா..ஒரு மாசக் கைக்குழந்தைக்கு பாலூட்ட தாயில்ல..நான் அந்தக்குழந்தைக்கு பாலூட்டத்தாங்க ஒவ்வொரு நாளும் போய் வந்தன்...காலையில ஒரு பொம்புளயும்..மாலையில நானும் அந்தப் பச்ச பாலகனுக்கு பாலூட்டுறம்..ஒங்களுக்குத் தெரிஞ்சா நிச்சயமா மறுத்து விடுவீங்கன்னுதான் ஒங்களுக்கே தெரியாம இதச் செஞ்சன்..என்ன மன்னிச்சிடுங்க" அவள் கணவனின் கால்களில் விழுந்து கண்ணீர்சொரிந்தாள். மனைவியின் தியாகம் அவனை அப்படியே நெகிழ வைத்து விட்டது. மறுகணம் அவளை அப்படியே வாரியணைத்துக் கொண்டான். அவனின் அணைப்பில் பவித்திரா பட்ட துன்பங்களையே மறந்து போனாள்!

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# அவன் ராமன் இல்லை



ஜெயந்தி ஜெய்சங்கர்.கொழும்பு

தேவி குழந்தைகளைத் தூங்க வைத்து விட்டு சுவர் ஓரம் சாய்ந்தபடி உட்கார்ந்து இருந்தாள். தூக்கம் அவளைத் தொட வில்லை. மூன்று மாதமாக அதை அவள் தொலைத்து விட்டாள்.

அழுது சிவந்த கண்களுடன் அமைதி யாகத் தூங்கும் குழந்தைகளின் முகத்தில் ஆறுதல் தேட முனைந்தவள் எழுந்து முற்றத்துக்கு வந்தாள். நிலவின் குளிர்ச்சியில் கண்கள் குளிர்ந்தாலும் நெஞ்சம் கொதித்தது. பாபு இப்படி பொறுப்பில்லாமல் நடந்து கொள்வான் என்று அவள் சற்றும் எதிர் பார்க்கவில்லை.

தேவி பாபுவைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டவள். காதல் திருமணத்தி னால் ஏற்பட்ட பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு தாய் மையடைந்த புது மனைவியையும் தனியே விட்டு விட்டு அவள் நினைவையும் அன்பை யும் சுமந்து வெளிநாடு சென்றவன்தான் பாபு.

வாராவாரம் தவறாமல் கடிதத்தில் காதலையும் அன்பையும் பகிர்ந்து கொண்ட வன் ஒரே நேரத்தில் இரண்டு பெண் குழந்தைகளுக்கு தகப்பனான செய்தியை கடிதத் தின் மூலம் அறிந்து அந்த மகிழ்வோடு இரண்டு வருடங்களைக் கழித்து விட்டு ஓடோடி வந்த பாபு மனைவியையும் மழலை களையும் கண்டு உல்லாச உலகில் சஞ் சரித்தான்.

அருகில் வர அச்சப்பட்ட நிருபா, கிருபா இருவரையும் தன் அன்பாலும் ஆசையோடு விளையாட்டுப் பொருட்களையும் காட்டியும் அருகில் அரவணைத்து விளை யாடியவன் மூன்று மாதங்கள் உருண் டோடியதும் தெரியாது இருந்தான்.

"தேவி இப்படியே இருந்தால் ஒன்றுமே செய்ய முடியாது. எங்களுக்கும் இரண்டு பொம்பிளப் பிள்ளையாச்சு. இப்பவே உழைச்சு சேர்த்தால் தான் பிற்காலத்தில் நாம் நிம்மதியாக சந்தோசமாக இருக்க முடியும். இந்த நேரத்தில் யோசிக்காமல் பிறகு யோசித்துப் பிரயோசனமில்லை தேவி. இப்ப உள்ள பிரச்சனையிலை இங்கை இருந்து என்ன வேலைதான் செய்ய முடியும்."

பெருமூச்சுடன் கதைத்த பாபுவை பார்த்து பெருமைப்படுவதா பரிதாபப் படுவதா என தனக்குள் எண்ணிய தேவி "இன்னும் எவ்வளவு காலம் இருக்கு, நீங்கள் என்னடா என்றால் இப்பவே அதை எல்லாம் நினைத்துக் கவலைப்படுகிறீயள்"

சொல்லிவிட்டு சிரித்தவளைப் பார்த்து,

"விளையாட்டுக்குச் சொல்லேல்லை பின் னுக்கு வருகிறதை முன்னுக்கு சிந்தித்து நடக்கிறதுதான் புத்திசாலித்தனம். எதிர் காலத்துக்கு அத்திவாரம் பலமாகப் போட் டால் தான் கட்டிடம் பலமாக அழகாக இருக்கும். எதுக்கும் அசையாது" என்று சொல்லிக்கொண்டு அவளை அணைக்க முற்பட்டவனின் கரத்தைத் தடுத்தவள் "இப்ப என்ன தான் செய்வதாய் உத்தேசம்?" கேட்டபடியே அவனது கரத்தை தனது கரத்தில் இருந்து விடுவித்தாள்.

மீண்டும் அவளை அணைக்க முற்பட்ட வனை நோக்கி "விளையாடாமல் சொல்ல வந்ததை சொல்லுங்க" என்று சிணுங்கினாள்.

"நான் திரும்பவும் வெளிநாடு போற தெண்டு முடிவு எடுத்திருக்கிறன்." அவன் சொன்னதைக் கேட்டதும் தேவி அதிர்ச்சியுற் றாள். "அதுக்குள்ளாகவா?" கவலையின் கோரப்பிடிக்குள் கயல்விழிகள் கட்டுண்டு கண்ணீர் சிந்தியது.

அவளை ஆதரவோடு அவளின் முதுகை வருடித் தேற்றியதோடு, மனதையும் மாற்றி கொழும்பு புறப்பட்டான் பாபு.

இரண்டு மூன்று கடிதத்தோடு கடிதத் தொடர்பு நின்றதோடு, அவனைப் பற்றி வேறு எந்தவித தகவலும் இல்லாமல் தவித்துப் போனாள்.

"வெளிநாடு போய் விட்டாரா? இல்லை வேறு ஏதும் பிரச்சனையா?" என்று எண்ணி எண்ணித் தவித்தாள். மூன்று மாதங்கள் மூன்று நாட்கள் போல் ஓடி மறைந்தன.

'இப்படி ஒரு நாளும் இருக்க மாட்டாரே, ஏதாவது நடந்து இருக்குமோ..... இருக்காது..... கடவுளே அப்படி ஒன்றும் ஆகிவிடக் கூடாது' பிரார்த்தித்துக் கொள் வாள்.

பத்திரிகையில் வருகிற செய்தியைப் பார்த்து பதறிப் போவாள். கொழும்பில் இருந்து யார் வந்தாலும் ஓடிப்போய் விசாரிப் பாள். யாரிடம் இருந்தும் சரியான தகவல் கிடைக்காமல் கலங்கிப் போவாள்.

இரண்டு பிள்ளைகளுடன் யாரின் உதவியுமின்றி தனியே இருப்பவள். ஆறுதல் சொல்லக்கூட யாருமில்லாமல் அனாதை போல் இருந்தவள், அடுத்த வீட்டு மூர்த்தி யண்ணன் கொழும்பில் இருந்து வந்து விட்டார் என்று அறிந்ததும் போய் பாபுவைப் பற்றி விசாரித்தாள். "கடிதம் தந்தவரா" என்று ஆர்வத்துடன் கேட்டாள்.

"பிள்ளை நான் சொல்லுறன் என்று பிழையாய் விளங்கிக் கொள்ளாதை.. நீயே போய் பார்க்கிறது தான் நல்லது. இதுக்கு மேலை என்னிடம் எதுவும் கேட்காதை" என்று பிடிவாதமாக சொல்ல மறுத்தவர் முன் மீண்டும் மண்டியிட விரும்பாமல், பிள்ளைகளுடன் வீட்டுக்கு வந்தாள்.

பிள்ளைகளைத் தூங்க வைத்துவிட்டு தன் தூக்கத்தைத் தேடிக் கொண்டிருந்தாள். "நான் கொழும்புக்குப் போவதென்றால் எப்படி? பிள்ளைகளை யார் பார்ப்பது? பிள்ளைகளுடன் கொழும்புக்கு போவ தென்றால் பெரும் சிரமமாச்சே. பலவாறு சிந்தித்தவள் தீர்க்கமான முடிவுடன் கண் களை மூடிக் கொண்டாள்.

பிள்ளைகள் இருவரையும் கூட்டிக் கொண்டு கொழும்புக்கு புறப்பட்ட தேவி மிகச் சிரமப்பட்டு கொழும்பு வந்து சேர்ந் தாள். அவளுடன் பயணம் செய்த அவள் ஊரைச் சேர்ந்த வயது முதிர்ந்த அம்மாவுடன் இரவு லொட்ஜில் தங்கியவள். மறுநாள் பாபு நின்ற இடத்துக்கு இரு பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு உதவிக்கு அந்த அம்மா வுடன் புறப்பட்டாள்.

பாபு தங்கியிருந்த முகவரியில் இறங்கி ஆட்டோக் காசு கொடுத்து மிகுதியைப் பெற்றுக் கொண்டிருந்தபோது யாரோ சிரிப் பது கவனத்தை கலைத்தது.

சிரிப்பு குரல் கேட்டு திரும்பியவள் அதிர்ச்சியில் பிள்ளைகள் கூட கை நழுவிப் போக தன்னை நிதானப் படுத்த முடியாது திணறினாள்.

தேவிக்கு முன்பின் தெரியாத ஓர் அந் நியப் பெண்ணுடன் கை கோர்த்து சிரித்து கதைத்து வந்த பாபு இரு பிள்ளைகளுடன் தேவி நிற்பதைப் பார்த்ததும் திகைத்துப் போனான்.

அவனால் நம்பமுடியவில்லை. இறுகப் பிடித்திருந்த அந்நிய பெண்ணின் கையை உதறி விடுவித்துக் கொண்டவன்,

"தேவி.....நீ......எப்படி....." வார்த்தைகள் நடுங்க அதிர்ச்சியின் அதிர்வு நீங்காமல் கேட்டான். கோபக் கனவில் கொதிப் பேறிப் போயிருந்த தேவி "அப்பா" என அடி எடுத்த குழந்தைகளைத் தடுத்தாள்.

"தேவி அது வந்து தெரிந்த....."
"வேண்டாம் எனக்கு எதுவும் தெரிய வேண்டாம்." இடையில் மறித்துக் கதைத்தவள் வந்த ஆட்டோவிலேயே பிள்ளைகளுடன் திரும்ப ஏறிக் கொண்டாள்.

"தேவி........தேவி...." என்று கெஞ்சிய வனிடம் "இதிலை வைத்து கதைக்கிறது எனக்குக் கௌரவமாய் படேல்லை. உங்கடை கடிதத்தை காணாமல் நான் என்னமோ ஏதோ என்று பயந்து துடிச்சுப் போனன். உங்களைப் பற்றி ஆட்கள் சொல்ல மறுத்த தற்கு காரணம் இப்பதான் எனக்கு விளங்குது. இரண்டு பிள்ளைகளுடன் யாருடைய உதவியு மில்லாமல் தனிய இருக்கிறவள் என்று கொஞ்சம் கூட நினைப்பு இல்லாமல்... சீ.... நீங்க இப்பிடி இருப்பீங்க என்று கனவில் கூட நான் நினைக்கலை. காதலிச்சு எல்லாரையும் வெறுத்து உங்களைக் கலியாணம் செய்ததற்கு எனக்கு நல்லா வேணும். இந்த நிமிசத்திலை இருந்து உங் கடை சுதந்திரத்துக்கு நான் முட்டுக்கட்டையாக இருக்க விரும்பேல்லை. எனக்கு பிள்ளைகள் இருக்கு. தன்மானம் இருக்கு. உங்களோடை அதிலை நிண்டு கதைத்து என்ர தன் மானத்தையும் நான் இழக்க விரும்பேல்லை."

திடமான முடிவை உறுதியுடன் உரைத்த வள் முன் தன் தவறுக்கு காரணம் சொல்ல முடியாமல் தவித்தவன் தலை குனிந்து ஆட்டோ போன பாதையை வெறித்தபடி நின்றான்.

அன்றிரவே தேவி பிள்ளைகளுடன் மீண்டும் யாழ் போக ரயில் ஏறினாள். ●

# தப்பில் தப்பினேன்!

**அறை எண் 33**

நான் அழைத்துக் கொண்டு வந்திருந்த பெண் குளியலறைக்குள் போயிருந்தாள். தினமுரசு வாரமலரை எடுத்து புரட்டிப் பார்க்கிறேன். காலையிலேயே செய்தியனைத்தையும் படித்து முடித்திருந்ததால் வேறு கதைகளோ கட்டுரை களோ படிக்க பக்கமோ இல்லாததால் மெல்ல அப்பால் மடித்து வைக்கிறேன்.

"சே..... இவள இன்னும் காணமே....!" சலித்துக் கொள்கிறேன். என்னைப் பற்றி சொல்வதாயின்-நான் கொழும்புக்கு பண வசூலுக்காய் வந்திருந்தேன். முப்பதினாயிரம் ரூபா சேர்ந்திருந்தது. பர்ஸில் பத்திரமாக மறைத்து வைத்திருந்தேன். மீண்டும் கொட்டாவி வந்தது.

அவளைப் பற்றிச் சொல்வதாயின்-வாடகைப் பெண் அவள். காலையில் வெள்ளவத்தையிலுள்ள நண்பன் பேசியபோதுதான் அவன் இவளைப்



ஹப்புத்தளையூர் எப். லெனாட்குமார்

பற்றி அறிமுகப்படுத்தி என்னோடு அனுப்பி வைத்திருந்தான். முன்னூறு ரூபாய் வாடகை. முழு இரவுக்கும். மற்றப்படி முன்பின் இவளைப் பற்றி எந்த விடயமும் தெரியாது.

வீட்டை நினைக்கிறேன். மனைவியின் நினைவு மூக்கு வியர்க்க வைக்கிறது. உதட்டைக் கடித்தபடி மனதுக்கு சமாதானம் சொல்லிக் கொள்கிறேன்.

"படார்" என கதவைத் திறந்து கொண்டு அவள் வந்தாள். பளிச்சென்று இருந்தாள். தங்கம் பூசிய மேனியாய் தக்காளி நிறம். சிரித்தாள். சிரித்தேன்.

"நீங்க போயிட்டு முகத்த கழுவிக்கிட்டு வாங்க...." என்னோடு லேசாய் உரசியபடி சொல்ல, நான் கன்னத்தைக் கிள்ள வெட்கித்தாள்.

கொண்டு வந்திருந்த சாரத்தை இடுப்பில் சுற்றிபடி குளியலறைக்குச் சென்று உடல் கழுவினேன். மனதுக்குள் மகிழ்ச்சி மத்தாப்பு. கலர் கலராய் கற்பனைக் கனவுகள்.

பின், கதவைத் திறந்து கொண்டு உள்வந்த என் மனதுக்குள் பகீரென்றது. "எங்கே போயிருப் பாள்?" எனது பொருட்களை தேடினேன். மறைந்திருந்தது. துடித்துப் போனேன். காசு..... கடிகாரம். மற்றப் பொருட்கள்.....?

சாரத்தை சரிசெய்து கட்டியபடி மனேஜரிடம் போய்ச் சொல்ல........

சிரித்தார். கைவிரித்தார். பலன் பூஜ்ஜியம் தான். தலையில் சூடேறியிருந்தது. தேடிப் பயனில்லை. மாயமாய் ஓடிப் போயிருப்பாள்.

கட்டிலில் வந்து தொப்பென விழுந்து முகட்டை வெறிக்கப் பார்த்த படி கிடந்தேன்.

உண்மையை மனைவியிடம் சொல்லியிருக்க வில்லை. திருட்டுப்போய் விட்டதென்று பொய் சொன்னேன்.

அன்று வியாழக்கிழமை. மனைவி தினமுரசு வாங்கி வந்திருந்தாள். பக்கம் பக்கமாக அசைபோட்டபடி வந்த என் மனதுக்குள் திக்கென்றது.

கொழும்பில் என்னை ஏமாற்றிய அதே பெண்ணின் படம் போடப்பட்டிருந்தது. கீழே விசயம் எழுதப்பட்டிருந்தது, "மீண்டும் ஓர் எயிட்ஸ் நோயாளி கண்டு பிடிப்பு" என. நீண்டதோர் பெருமூச்சு எனக்கு வந்து போனது. மனதால் "தப்பில் தப்பினேன்" என வேண்டிக் கொண்டேன்.

"மீனா.....மீனா இங்க வாவேன் குரல் கொடுத்தேன். "ஏங்க ஏன் இப்படிக்கத்துறீங்க.... என்ன விசயம்?" பதறியபடி அவள் கேட்டு..... ஒரு கணம் பாசமாய் நோக்கினேன். பின்,

"ஒன்றுமில்ல நீ போ!" என்றேன்

"பைத்தியமா உங்களுக்கு?" என்றபடி அவள் வெளியேற நான் மீண்டும் தினமுரசில் மூழ்கிப் போனேன்.

"நான் யுத்தக் களத்தில் இறங்கிப் போராடும்போதெல்லாம் என் தேவதையை மறந்துவிடுகின்றேன். காரணம்....யுத்தக் களத்தில் என்னுடம்புக்கோ-என் உயிருக்கோ ஏதாவது ஆகி...அந்தக் காயங்களும் ரணங்களும் என் காதல் நினைவுகளை, நினைவுகளில் வரும் என்னவளைப் பாதிக்கக் கூடாதே என்பதற்காக!"

# சிதையாத இதயம்

மாவனல்லை ரிஸ்கி ஷெரீப்

இந்த மண்ணில் யுத்தங்களும், கலவரங் களும், குரோதங்களும் இல்லாமல் இருந் திருந்தால். இலங்கை இன்னொரு 'சிங்கப் பூராக' மாறியிருக்கும் என்பது எனது யூகம்.

சின்னவயதில் என் தாய்நாட்டைப்பற்றி பந்திபந்தியாய் கட்டுரை, விமர்சனங்கள் எழுதி, கீழ்ப்பிரிவு ஆசிரியையிடம் நூற்றுக்கு நூறு வாங்கியிருக்கின்றேன்.

அப்போதே எழுதுவதில் ஆர்வம்.

அப்போது எழுதக்கூடிய சுதந்திரமான-ரம்மியமான சூழ்நிலை!

ஆனால் இப்போது?

நிகழ்வில் உள்ள கலவரங்களும் மோதல் களும் அப்போதில்லை. (அவ்வளவாக)

இலங்கை மண்ணில் பிறந்ததற்காக நான் அந்தக்காலம் நிறையவும் சந்தோஷப் பட்டிருக்கின்றேன். இப்போது துக்கம் ஒரு புறம் தொண்டையை அடைக்கிறது.

நான் இலங்கை மண்ணில் பிறந்திருக்கக் கூடாதோ என்னமோ?

அப்படிப் பிறந்தாலும் ஓர் போர் வீரனாக-யுத்தக் களத்தில் துப்பாக்கியேந்தும் ஒரு 'ஆர்மி செக்கண்ட் லெப்டினன்டாக' வந்திருக்கக் கூடாதோ?

அப்படிப் போர்வீரனாகிப் போனா லும்..... எனக்குள் காதல் வந்திருக்கக்கூடாது.

ஆனால் முடியவில்லை.

காதல் பொதுவானது. தவிர...

நானும் ரத்தமும், சதையும், நரம்பும், உணர்ச்சிகளும் கொண்ட மனிதன்-அதிலும் இளைஞன்தானே.

போர்வீரனா? பொலிஸ்காரனா? என்று 'காதல்' பாகுபாடு பார்ப்பதில்லை.

என்னவள் என்னைப் பார்த்தாள்.

என் மனதைப் படித்தாள்.

இருவருக்குள்ளும் காதல் படிக்கப் பட்டது.

காதலால் நாம் கனவில் பறக்கப் பட்டோம்.

□□


காதலர்கள் பிரிந்திருப்பது ஒரு உலக ளாவிய கொடுமையென்று உணர்ந்து பார்த்தால்தான் தெரியும்.

பயங்கரமான கொடுமை! கொடூரம்!!

என் தேவதைக்கும் எனது 'மிலிட்டரி கேம்புக்கும்' ஏறக்குறைய இருநூறு மைல் இடைவெளியில்...

'என்னவளைக் கண்டு, காதல் கதைபேசி, முத்தங்கள் பரிமாறி மூன்று மாதங்கள் ஆகின்றன.

கடந்த விடுமுறைக்கு ஊருக்குப் போனபோது அவளைச் சந்தித்தது, தவிர..



இன்னும் விடுமுறை கிடைக்காத வேதனை யில் அவளை மனதுக்குள் மட்டுமே சுகமாய் நினைத்துப்பார்த்து..நிம்மதியில்லாமல் படுக்கையில் புரண்டு கொண்டு...

'நான் யுத்தக் களத்தில் இறங்கிப் போராடும் போதெல்லாம் என் தேவதையை மறந்துவிடுகின்றேன். காரணம்..யுத்தக் களத்தில் என்னுடம்புக்கோ-என் உயிருக்கோ ஏதாவது ஆகி...அந்தக் காயங்களும் ரணங் களும் என் காதல் நினைவுகளை, நினைவு களில் வரும் என்னவளைப் பாதிக்கக் கூடாதே என்பதற்காக!'

கொடூரமான யுத்தம் இப்போதைக்கு அடங்குவதாக இல்லை.

இன்னும் தொடரும்..

யுத்தம் எப்போது முடியுமோவென்று நான் கனவு கண்டு கொண்டிருக்கின்றேன். அது கனவாகவே போகுமோ என்னமோ...

திடீர் திடீரென்று யுத்தக் களத்தில் இறங்கும்படி தலைமையதிகாரிகள் ஆணையிடுவார்கள். நேரம் காலமில்லை. ஏனெனில்-யுத்தம் சூடுபிடித்து, மனிதங் களையும் உயிர்களையும் அழிக்கும் மிருக வெறியோடு முன்னேறிக் கொண்டிருக்கிறது.

நானும் எதிர்த்தரப்பு மனிதங்களையும் உயிர்களையும் அழித்திருக்கிறேன்.

அது எனக்கிடப்படும் கட்டளை. அதேபோல் எதிர்த்தரப்பால் என் சகாக்களும் அழிக்கப்பட்டிருக்க... கடந்த வாரம் என்னுடன் இருந்த அன்ரனியும், அப்துல்லாவும் கூட கொல்லப்பட்டார்கள்.

நாளைக்கு நானும் கூட கொல்லப் படுவேனோ?

எதிர்த்தரப்பிலும் சரி; என் தரப்பிலும் சரி கொல்லப்பட்டவர்களின் மனங்களில் எத்தனை ஆசைகள் இருந்திருக்கும்... எத்தனை காதல் இருந்திருக்கும்...ஏன் எனக்குப்போன்று ஏக்கமாய்க் காத்திருக்கும் காதலிகள்கூட இருந்திருப்பார்கள். அப்படியிருக்க...

நாளைக்கு-ஏன் அடுத்த நிமிஷமே நானும் செத்துப்போகலாம்.

முந்தாநாளிரவு எமக்கடுத்த கேம்பில் எதிரணி 'ஷெல்' அடித்து, விடிந்து பார்த்தபோது 'கேம்ப்' இருந்த இடமே அடையாளம் தெரியாமல்.. காணாமல் போயிருந்தது.

இனி வரும் நிமிஷங்களில் நானும்-கேம்பும்-என் ஆசைகளும்கூடக் காணாமல் போகலாம். என் காதல் கூடக் காணமல் போகுமோ?

□□

இரவு பனிரெண்டு மணியைத் தாண்டி யிருக்க...

கேம்புக்கு வெளியே சில போர்வீரர்கள் 'காவல்' இருந்தார்கள்.

உள்ளே நான் படுக்கையில் இருந்தேன். ஆனால்..

தூக்கத்தைத் தொலைத்திருந்தேன்.

எனக்குப் பகல்நேர 'டியூட்டி' இருந்தது,

இப்போது உடம்பில் அயர்ச்சி இருந்தது.

காலையில் என் தேவதை எனக்குக் கடிதம் எழுதியிருந்தாள்.

இப்போது நினைக்கையிலும் உடம்பு சில்லிடுகிறது.

கடந்துபோன விடுமுறையில் ஊருக்குப் போனபோது, என் தேவதையுடன் கொஞ்சி குலாவி, சின்னதாய் சில சில்மிஷங்கள் செய்து.. முன்னேறி... எப்படியோ உணர்ச்சி வசப்பட்டு.. உடல்களும் சங்கமமாகி...

இந்த வண்டு உட்கார்ந்தால் நொருக்கிப் போகாத அந்தப் பூ நொந்துபோய்..காலைக் கடிதத்தில் அந்த சம்பவத்தை யதார்த்தமாய் எழுதியிருந்தாள்.

'அன்பே!

ஒரு கோடியில் நீ, மறு கோடியில் நான் என்று பிரிந்திருந்தாலும்-இந்த உலகே இரண்டாகப் பிளந்து எம்மைப் பிரித்தெடுத் தாலும் என் நெஞ்சம் உங்களை மறவாது. உங்களை என் உள்ளம் சுமக்க, உங்கள் உயிர் அணுக்களை இப்போது என் வயிறு சுமந்துகொண்டு.. மூன்று மாதம் நடந்து கொண்டிருக்க என் வயிறு பெருத்துப் பருத்துப் போய்.. நான் பதறிக் கொண்டி ருக்கின்றேன்.

நம் 'விடயம்' ஊருக்குள் தெரிவதற்குள் திரும்பி வருவீர்களா? உங்களுக்காக நான் மஞ்சள் கயிற்றோடு-வயிற்றில் குழந்தையோடு காத்திருக்கின்றேன். உங்களுக்காகவே பிரார்த் திக்கின்றேன்.'

கடிதம் இப்படித் தொடர..

தொடர்ந்து நினைக்க முடியாமல் கண் ணீர் சுடுகிறது.

'என் தேவதையே,

என் குழந்தையைச் சுமக்கும் தாயே!

நலமாக இருக்கிறாயா?'

வாய்விட்டுக் கத்த வேண்டும்போல் இருக்கிறது.

அதையும் முண்டியடித்துக்கொண்டு அழுகைவர..

ஓசைப்படாமல் அழ ஆரம்பிக்கிறேன்.

□□

இரவு இப்போதே விடிகிறதாய் இல்லை.

நேரம் செல்லச் செல்ல வெளியே வேட்டுச் சத்தங்கள், வெடிச் சத்தங்கள் கேட்கின்றன. திடீரென இன்னொரு யுத்தம் ஆரம்பித்ததுபோலும்... தலைமையதிகாரி களிடமிருந்து திடீர் 'ஆர்டர்' (கட்டளை) வரவும் கூடும். எப்படியோ நானொரு யுத் தத்துக்கு தயாராகின்றேன்.

யுத்தம் முற்றுப் பெறுமா?

எனக்கு விடுமுறை கிடைக்குமா?

என் தேவதையைப் பார்க்க எனக்கோர் வாய்ப்புக் கிட்டுமா?

இல்லை.. நான் கொல்லப்படுவேனா?

எதுவுமே தெரியாமல் நானொரு யுத் தத்துக்கு தயாராகின்றேன்.

'காதலியே!

உயிரோடு இருந்தால் நிச்சயம் திரும்பி வருவேன். ஆசைதீர அரவணைப்பேன். போரில் ஏற்பட்ட என் உடம்பின் காயங் களுக்கு உன் கையால் ஒத்தடம் வைத்துக் கொள்வேன். உன்னுடன் பகிர்ந்துகொள்ள என் ஆசைகள் பலவற்றைக் கனவுகளாக சேமித்துள்ளேன். அப்படி நான் திரும்பி வராவிட்டால்-உயிரோடு இல்லையென்று அர்த்தம். அப்படியாயின் என்னையும்-என்காதலையும்- என் இறப்பையும் மன்னித்து விடு.'

கடைசியாக மனதுக்குள் சொல்லிக் கொண்டு..

என் தேவதையை மறக்க முயல்கின் றேன். ஏனெனில்;

"நான் யுத்தக் களத்தில் இறங்கிப் போராடும் போதெல்லாம் என் தேவதையை மறந்துவிடுகின்றேன். காரணம்.. யுத்தக் களத்தில் என்னுடம்புக்கோ, என் உயிருக்கோ ஏதாவது ஆகி.. அந்தக் காயங்களும் ரணங் களும் என் காதல் நினைவுகளை- நினைவு களில் வரும் என்னவளைப் பாதிக்கக்கூடாதே என்பதற்காக!"

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

# நஞ்சுண்ட கவிஞன்



தருவது—ரசிகன்

மதுக் கோப்பை நிரம்பியிருந்தது. நுரைதள்ளிக் கொண்டிருந்தது.

நிரம்பிய மதுவை அவன் விரும்பிச் சுவைத்தான்.

அவன் ராஜசிம்மன்.

ராஜசிம்மன் கவிஞன்!

சுவைத்தவன் விழிகள் சிவந்தன. போதை புத்தியை திசைமாற்றும்; விழிகளை நிறம் மாற்றும்!

ராஜசிம்மன் மதுக் கோப்பைக்குள் உற்று நோக்கினான்.

அவள் முகம் தெரிந்தது.

'அழைக்கிறாளா-நகைக்கிறாளா?' என்று நினைத்தான். கண்களை மூடித்திறந்து பார்த்தான்.

அவள்-மதுரா!

மதுரா மன்னன் மகள்!

ராஜசிம்மன் மண் குடிசைவாசிகளின் மகன்!

மதுராவுக்கு ராஜசிம்மனின் கவிதைகளை பிடித்திருந்தது.

அரண்மனைக்கு அழைத்துப் பாராட்டினால் கவிஞனுக்கு அது கௌரவமாகாது என்பதனால் அவன் குடிசைக்கு வந்தது அந்த கோலமயில்.

தேனில் நனைந்த வார்த்தைகளை வீசிவிட்டுச் சென்றுவிட்டது தேவதை.

வண்ணமயில் போனபின்பும் அவள் வீசிவிட்டுப்போன வார்த்தைகள் நெஞ்சுக்குள் இருந்து வாசமடித்தது.

**'மேலாடை மூடிக்கொண்ட சாயாத எழில் இரண்டும்**
**தானாடாவிட்டாலும் தசையாடும் என்பதுபோல்**
**நானாடாவிட்டாலும் என் நெஞ்சாட வைத்ததடி!**
**காலாட நடந்துவர கனிமரமே அசைந்தது போலானதடி!'**

தூக்கத்தை தொலைத்துவிட்டு கவிஞன் கற்பனையில் மூழ்கி முத்தெடுத்தான்.

**'உயிரில் கலந்தவளே-இதயத்துடிப்பாய் இருப்பவளே!**
**மயிரில் ஒன்றுபோயின் மடியும் கவரிமான் ஜாதி**
**கவிஞன் நானடியோ-வளரும் காதலை நீ மறுப்பின்**
**தமிழின் சுவைகாட்டும் கவிஞன் சாதல் உறுதியடி!**

நிலவின் வெளிச்சத்தில் இதயப் பிரசவிப்பையெல்லாம் கவிஞன் எழுத்தில் ஏந்திவந்து ஓலையில் இறக்கிவைத்தான்.

மதுரா-மதுரா-

உன் பெயரிலேயே போதை இருக்கிறது, பெயரில் மட்டும்தானா?

**'முயல்களை நெஞ்சில் பதுக்கி வைத்தாய்**
**மயிலதை வெல்லும் செருக்கில் வந்தாய்**
**கனியிதழ் சுவையில் கொஞ்சம் தர மறுத்தாய்**
**குயிலதன் மொழியால் எனைச் சிறைப்பிடித்தாய்'**

எழுதிக்கொண்டே இருந்தான். இதயத்தை உருக்கி வடித்துக்கொண்டே இருந்தான்.

**'என் கவிதை பிடித்ததடி உனக்கு, நீயே**
**என் கவிதையாகிவிட்டேன், படித்தறிய**
**பிரியமடி எனக்கு! ஓலையில்**
**எழுதியது போதுமென்று சோலையில்**
**சொக்கும் கவி எழுத ஆர்வமடி**
**எனக்குள்! ஓவியமாய் நீ இருக்க**
**வேறெதனை நான் இனிமேல்**
**காவியமாய் பாடுவது? பூஞ்சரமே**
**வந்து புரள்! புதிர் முடிச்சு நான்**
**அவிழ்த்து புதிய பொருள்**
**அறிய வேண்டும்!"**

நெஞ்சக் கோப்பையில் நினைவே மதுவானது. அதுவே வெறியானது.

நினைவெங்கும் அவள் மயம். கவிஞனின் கனவுகள் யாவும் அவள் வசம்!

**"கனவில் யாரடி? கண்ணே நீயடி!**
**மதனமாளிகை, மலரில் பஞ்சணை,**
**கனவு ராணியே கருணை காட்டடி!**
**கதவு மூடிய கனவு மேடையில் என்னில் ஆடடி"**

**மோனப் பொழுதினில் கானம் மீட்டலாம்**
**பருவப் பாடத்தை இணைந்தே படிக்கலாம்.**
**வானை இடிக்கின்ற மூச்சை வெளியேற்றி**
**காணக்கிடைக்காத உலகைத் திறக்கலாம்"**

வெறி ஏற சிந்தனைப் புரவி தறிகெட்டு ஓடத்தொடங்கியது.

இனி நினைவு மட்டும் மதுவாகாது நிஜமான மதுவேண்டும். புட்டியில் எடுத்து மதுக்கோப்பையில் நிரப்பினான்.

## இலக்கிய நயம்

நிரம்பிய மதுவிலும் அவள் முகம் தெரிய, மதுபாதி- மதுராவின் நினைவு மீதி.

உச்சவெறியேறி கவிஞன் உளறத் தொடங்கினான்.

குடிசையின் கதவு திறந்தது. வந்தவள் மதுரா. கண்டவன் கவிஞன் தள்ளாடி எழுந்தான்.

காற்றின் கரம்பட்டுச் சரிந்திருந்த மேலாடை கவிஞனின் புத்தியில் ஆயிரம் கோப்பை மதுவை ஊற்றியது.

"என்ன கவிஞரே இது?

மதுவோடும் உறவோ-தவறாகாதோ இது?"

மதுராவின் குரலில் எதிர்பாராத அதிர்ச்சி தொனித்தது.

கவிஞனுக்கோ வேறு சிந்தனை. அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய். காமத்தில் புரண்டவன் கண்ணுக்கு தூணும் கூட பெண்ணாகத் தெரியும்.

"மதுரா...நீ..நீயா..?"

"நான்..... நான்தான்-கவிஞரே! நீங்கள்தான் நீங்களாக இல்லை. நில்லுங்கள்-மதுவாசனை எனக்குப் பிடிப்பதில்லை!"

நிற்கவில்லை கவிஞன் நெருங்கினான்.

"மதுரா வாசனை எனக்கேயானால் மது வாசனையை மறந்தே போவேன்! மதுரா இருக்க, மதுவேன் எனக்கு?"

நெருங்கிய கவிஞன் மதுராவின் பட்டுத் துகிலை கரம் எட்டித் தொட்டான்.

அடுத்த நொடியே கவிஞனின் நெற்றியில் இறங்கியது இடி!

முஷ்டி மடக்கி கவிஞனின் நெற்றிப் பொட்டில் குத்தினாள் மதுரா.

தடுமாறி விழப்போனவனின் வலது கரத்தின் மணிக்கட்டில் பிடித்து நிறுத்தினாள்.

நெற்றியடி பட்டதால் மதுவெறி சிதறத் தொடங்கியிருந்தது.

கண்களை மூடி மூடித் திறந்தான். மங்கலாய்த் தெரிந்த மதுரா- புகை மூட்டத்துக்குள் சிக்கியிருந்த தேவதையாய் தெரிந்த மதுரா கொஞ்சம் தெளிவாய்த் தெரிய ஆரம்பித்தாள்.

மதுரா அவன் விழிகளுக்குள் உற்று நோக்கினாள்.

"பெண்ணின் விருப்பம் அறியாமல் அவளைத் தொடுபவன் பேடி! கவிஞனே பலத்தில் மட்டுமல்ல மனத்தளவிலும் நீ பேடி!"

கவிஞன் இப்போது ஒரு நிலைக்கு வந்திருந்தான்.

"ம..மது....மதுரா... என்னை மன்னித்துவிடு! வெளியே சொல்லாதே என் தலையே இருக்காது!"

என்றான்.

"முட்டாள் கவிஞனே- உன் தலையை விட உயர்ந்தது நீ சேகரித்த புகழ்! உயிரை உருக்கி கவிதைகளைப் படைத்தாய். இன்று அறிவை மயக்கும் மதுவில் விழுந்து படைப்பால் திரட்டிய புகழை தொலைக்கத் துணிந்தாய்!"

"மதுரா- இதுதான் என் முதல் தவறு! முடிவான தவறும் இதுதான் நம்பு!"

மதுரா நகைத்தாள்.

"பெண்ணை ஆண் விரும்புவதும், ஆணைப் பெண் விரும்புவதும் அகிலம் அறியாக் காரியமல்ல. காதலிப்பவனுக்கு மட்டுமே பெண் கனியாவாள். கட்டாயப்படுத்த நினைப்பவனுக்கு பெண் பேயாவாள். பெண் ஒரு பேயென்று சொன்னவன் எவனோ அவனும் கட்டாயப்படுத்தியதால் கண்டு கொண்ட அனுபவ உண்மையைத்தான் அப்படிச் சொல்லியிருக்கிறான்."

கவிஞன் மடங்கி அமர்ந்தான். வெதும்பி அழுதான்.

"மது செய்த வேலை இது. கட்டறுந்த காளை மாடாய் என் புத்தி மதுவால் கெட்டழிந்து விட்டது மதுரா!" என்றான்.

மதுரா நகைத்தாள். திரும்பி நடந்தாள். குடிசைக் கதவருகே நின்று,

"கவிஞரே!"



என்று அழைத்தாள். மெல்ல தலை உயர்த்தினான் கவிஞன்.

"நான் உம்மைக் காதலித்தேன்! ஆனால்- இப்போதல்ல, நீர் உயிரோடு இருந்தபோது! காதலிப்பேன்; நீர்மீண்டும் உயிரோடு வரும்போது!"

என்றாள். கவிஞனின் தலைக்குள் நூறு நூறு மின்னல். அதிர்ச்சி ஒரு புறம். குழப்பம் மறு புறம்.

மதுராவே குழப்பம் அகற்றினாள்.

"நஞ்சுண்டால் உயிர் போகும். மதுவுண்டால் மதி சாகும். அதனால் தான் களுண்பவர் நஞ்சுண்டவராவர் என்றார் திருவள்ளுவர். நஞ்சுண்டவர் நீர் இப்போது பிணம் தானே!"

மதுரா சென்றுவிட்டாள்.

**"துஞ்சினார் செத்தாரின் வேறல்லர்**
**எஞ்ஞான்றும்**
**நஞ்சுண்பார் கள்ளுண் பவர்"**

அதிகாரம்-93
பாடல்-926

## குறுக்கெழுத்துப் போட்டி இல—108

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | ■ | 2 | | 3 | | 4 |
| 5 | | | | | ■ | |
| | ■ | | ■ | 6 | | |
| | 7 | ■ | 8 | | ■ | |
| ■ | 9 | | | ■ | 10 | |
| ■ | | ■ | 11 | | | ■ |
| 12 | | | | ■ | | ■ |

### இடமிருந்து வலம்

02. இந்தப் பூவில் வாசம் இல்லை.
05. இந்துக்கள் கோவிலுக்குச் செல்லும் போது மறக்காமல் இதையும் எடுத்துச் செல்வார்கள்.
06. இவற்றின் உணவு பெரும்பாலும் தானியங்களே.
09. நட்சத்திரங்களில் ஒன்று.
11. இது சிறிதானாலும் காரம் மட்டும் குறையவில்லை.
12. அம்பிகாபதியின் தந்தை.

### மேலிருந்து கீழ்

01. தெரியாத வார்த்தைக்கு இங்கே அர்த்தம் கிடைக்கும்.
02. ஆப்கானிஸ்தானின் தலைநகர்.
03. கணவன்-மனைவி.
04. இதற்கு மதிப்பு இல்லை.
07. பகைமையை இப்படியும் சொல்லலாம்.
08. இவர்கள் செய்வது வியாபாரம்.
10. மகாபாரதத்தில் வரும் ஒரு முக்கிய பாத்திரம்.

இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 15.07.1995க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

குறுக்கெழுத்துப் போட்டி இல-108
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.

சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல-106ற்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 தா | 2 க | ம் | ■ | 3 போ | ர் | 4 வை |
| 5 லா | ட | ம் | ■ | தி | ■ | க் |
| ட் | ன் | ■ | 6 சி | ■ | 7 ச | கோ |
| டு | ■ | 8 பா | றா | ங் | க | ல் |
| ■ | 9 அ | ட | ர் | த் | தி | ■ |
| ■ | ■ | சா | ■ | ■ | ■ | 10 கீ |
| 11 மு | ல் | லை | ■ | 12 மு | கா | ரி |

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 106இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்.**

1. செல்வி. லான்ஸி ஸ்ரீரங்கநாதன், கொழும்பு-13
2. பி. தயாகரன், வவுனியா.
3. எச்.எம். கபூர், கடுகன்னாவ.
4. செல்வி. நஸ்ரீனா, புதியகாத்தான்குடி.
5. கே. சாந்தகுமார், நானுஓயா.
6. ஏ. அம்பிகாபதி, மாத்தளை.
7. செல்வி. ஹனூன் சரப், மருதானை.
8. எம். ஸமீல், கற்பிட்டி.
9. ரி. தங்கராஜன், வாழைச்சேனை.
10. திருமதி. மரீனா நியாஸ், கண்டி.

இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.

## சிந்தியா பதில்கள்



**யுத்தம் மூலம் சமாதானம் கண்ட நாடுகள் சரித்திரத்தில் உண்டா?**

கா.தினேஷ்-ஹட்டன்.

நாடுகளின் வரலாறு மட்டுமல்ல தினேஷ், மனித குல வரலாறு முழுவதுமே அடக்கப்படுபவர்களுக்கும், அடக்குவோருக்குமிடையேயான யுத்தங்கள் கொண்டதாகவே வளர்ந்து வந்திருக்கிறது. எங்கே நீதி எப்போது நிலைநாட்டப்படுகிறதோ அப்போது யுத்தம் தனது இடத்தை காலி பண்ணிவிட்டு போய்விடுகிறது.

▫▫

**எதனைத் தண்டிக்க வேண்டும்? எதனைக் கண்டிக்க வேண்டும்?**

ஏ.எச்.ராஸிக் மொகமட்-ஏத்தலை.

தெரிந்தே தவறு செய்தால் தண்டிக்க வேண்டும். தெரியாத்தனமாக என்றாலும் தவறு பெரிதானால் கண்டித்து திருத்த வேண்டும்.

▫▫

**இன்றைய ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் பற்றி என்ன நினைக்கிறீர்கள் சிந்தியா?**

சி.யோகராஜா-மட்.மண்டபத்தடி.

பேரிழப்பின் பின்னர் ஓரடி பின்னால் வைத்தார். (இலண்டன் பயணம்) பின்வாங்கிவிட்டாரோ என்று நினைத்துக் கொண்டிருக்க மீண்டும் அரசியலில் புகுந்து இருபதடி முன்னால் பாய்ந்திருக்கிறார். பெண்கள் தன்னம்பிக்கை கொள்ள நிச்சயம் அவரை உதாரணமாகக் காட்டலாம் (ஐஸ் அல்ல நிஜம்)

▫▫

**காதலில் வெற்றி பெற என்ன செய்யலாம்?**

எஸ்.சோபியா-திருக்கோணமலை.

உண்மையாகக் காதலிக்கலாம்.

▫▫



**கடவுள் உங்கள் முன் தோன்றினால் என்ன வரம் கேட்பீர்கள்?**

ஜனனி மதுரலிங்கம்-கொட்டாஞ்சேனை.

அவராக நான் மாறவேண்டும். (என்றாலும் உனக்கு இவ்வளவு சுயநலம் கூடாது சிந்தியா)

▫▫

**காத்தான்குடி கடித விவகாரத்தில் விஷமிகளின் வேலை என்று ஒரு போடு போட்டது ஏன்? எப்போதிலிருந்து புலிகளின் மீது இந்தப் பாசம்?**

ஏ.பீ.எம்.ஜிப்ரி-பேருவளை.

பாசமல்ல ஜிப்ரி, சிலரது நாச வேலைகளால் தமிழ் பேசும் மக்கள்தமக்குள் புன்னகைக்குப் பதிலாக விரோதங்களை பரிமாறிக் கொண்டு அழிந்து போவதால் யாருக்கு நஷ்டம் என்று யோசித்துப் பாருங்கள். நோக்கம் தெரியும். புலிகள் முஸ்லிம் மக்களுக்கு எதிராக செய்த படுகொலைகளை முரசு கண்டித்து விமர்சித்தவற்றை எப்படி மறந்தீர்கள்? தமிழர்கள் தனித்து நின்றால் ஒருகை ஓசை. தமிழ் பேசும் மக்கள் ஒன்றாக நின்றால் இருகை ஓசை. பின்னது தான் பலம்.

▫▫

**உலகில் இன்று இலவசமாகக் கிடைப்பது எது?**

மூர்ஷிதா இஸ்ஹாம்-மூதூர்-04

தண்ணீர் கூட விற்பனையாகிறதே! ஆகவே-காற்று!

▫▫

**நான் ஒரு பெண்ணைக் காதலிக்கிறேன். அவளிடம் என் காதலை எடுத்துச் சொல்ல பயமாக இருக்கிறது? என்ன செய்யலாம்?**

ஏ.ஆர்.ஏ.ஹுமைட் -கல்முனை.

'இலவு காத்த கிளி' கதை தெரியுமா ஹுமைட். தெரியாவிட்டால் முதலில் அந்தக் கதை கேட்கலாம்.

▫▫

**சமீபத்தில் அறிந்தவற்றில் அதிர்ச்சியான செய்தி ஒன்று சொல்லுங்கள்.?**

ம.வாசீகன்-கொழும்பு 06

அதிர்ச்சியான செய்தி மட்டுமல்ல, ஆழ்ந்து யோசிக்க வேண்டியதாகவும் உள்ள சமீபத்திய அவலம்; ஆற்றிலும் கடலிலும் மிதக்கும் பிணங்கள். கண்டறிவதில் ஆமை வேகம். பெரும்பான்மை இனத்தவர் மத்தியில் இருந்து யாரும் காணாமல் போனதாகவும் தகவல் இல்லை. அப்படியானால் யாருடைய பிணங்கள்? ஊகிப்பது கஷ்டமா?

▫▫

**டியர் சிந்தியா! சில்க் சுமிதா என்ன செய்து கொண்டிருக்கிறார்?**

பா.சங்கர்-மாத்தளை

தனது காதலரின் ஜோக்குகளுக்கு குலுங்கிக் குலுங்கிச் சிரித்துக் கொண்டிருக்கிறார். (சிரிக்கும் போதும் குலுங்க வேண்டுமா என்ன?)

▫▫

**நயவஞ்சகர்கள் யார்?**

எம்.ஐ.நவாஸ் அக்கரைப்பற்று-06

நயமாகப் பேசிக் கொண்டே 'நச்' என்று முதுகில் குத்துகிறவர்கள்

▫▫

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# மகாபாரதம்

அங்கம் 85

**இவ்வாரம் (09.07.95 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.**

**அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்**

காலத்தின் குரல்

பாரதப் போர் தொடங்கி பன்னிரண்டு பகல் பொழுதும்
வீரமாக ஏறி விடை பெற்றுச் சென்றதன் பின்
நீரைவான இன்னாளில் நினைவெல்லாம் பகலவன் பால்
நிலை நிறுத்தி நிற்கின்றார் குருச்சேத்திர வீரரெல்லாம்!
அர்ச்சுனன் தன் மகனை அவமாகக் கொல்வதற்கு
அனுசரணையாளவனை அழித்தொழித்துப் பழிதீர்க்க
அருஞ்சபதம் தனை ஏற்று ஆர்வமுடன் காத்து நிற்கும்
அர்ச்சுனனும் பகலவனை அர்ச்சித்தே துதிக்கின்றான்!

—காட்சி தொடக்கம்—

அஸ்தினாபுரம்-திருதராட்டிரர் அரண்மனை - மன்னருடன் சஞ்சயன்,

**திருத:** சஞ்சயா! இன்று சூரியன் மறைவதற்குள் அர்ச்சுனன் ஜயத்ரதனைக் கொன்று விடுவானா?

**சஞ்ச:** மகாராஜா! போர்க்களத்தில் நாம் நினைப்பது போல் தான் எதுவும் நடந்து விடுவதில்லையே!

**திருத:** போர் முனையில் இடம்பெறும் சம்பவங்களை நீ காணும் சக்தி பெற்றுள்ளாய்! ஆகவே, உன்னால் உத்தேசமாகக் கூட எதனையும் கூற முடியும் அல்லவா? இன்று ஜயத்ரதன் காப்பாற்றப்படுவானானால் நாளை போர் நின்று விடும். அர்ச்சுனன் இட்ட சபதத்தின்படி தீயினுள் அவன் இறங்கி விடுவது நிச்சயம். இது நடைபெறுமானால் யுதிஷ்டிரன் மனமுடைந்து பலம்குன்றிப் போய்விடுவான்!

**சஞ்ச:** பாண்டு புத்திரன் சிந்து மன்னனைக் கொலை செய்யவும் கூடுமல்லவா?

**திருத:** அப்படியும் நடக்கலாம். இருப்பினும் அர்ச்சுனன் யுதிஷ்டிரனின் அருகில் இல்லாததைப் பயன்படுத்தி ஆச்சாரியார் துரோணர் யுதிஷ்டிரனைக் கைது செய்யலாம். அவ்வாறானால் ஜயத்ரதன் கொல்லப்பட்டாலும் யுத்தம் முடிந்து விடலாம் அல்லவா? சஞ்சயா! இந்த நேரத்தில் ஆச்சாரியார் துரோணர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதைக் கூறுவாயா?

**சஞ்ச:** மகாராஜா! திஷ்டத்துய்மனுக்கும் ஆச்சாரியாருக்குமிடையில் போர் நடந்து கொண்டிருக்கிறது.

—காட்சி மாற்றம்—

துரோணாச்சாரியாருக்கும் திஷ்டத்துய்மனுக்குமிடையில் உக்கிரமான சண்டை நடைபெறுகிறது. திஷ்டத்துய்மன் நிராயுதபாணியாக்கப்படுகிறான். சாத்திகி துரோணருடன் பொருதுகிறான்.

**துரோ:** சாத்திகி! வேட்டைக்காரனின் இரையை இடையில் புகுந்து பறிப்பது நியாயமாகுமா?

**சாத்:** ஆச்சாரியார் அவர்களே! போர் முனையில் வேட்டையாடுவதும் சகஜம். வேட்டையாடப்படுவதும் சகஜமே! இது உங்கள் போதனாபீடமல்ல, போர்க்களம்! தாங்கள் சத்திரியனைப் போன்று போர் புரிய முன்வந்ததே உங்கள் தர்மத்துக்கே முரணானதாயிற்றே!

சாத்திகி துரோணரால் படுகாயப்படுவதை யுதிஷ்டிரர் அவதானிக்கிறார்.

**யுதிஷ்:** தளபதி திஷ்டத்துய்மன் அவர்களே! சார்த்திகி ஆச்சாரியாரின் கைகளால் படுமோசமாகத் தாக்கப்படுகிறான். எப்படியும் உதவி போய்ச்சேர வேண்டும்!

திஷ்டத்துய்மன் படையுடன் புறப்படும் வேளையில் கிருஷ்ணரின் சங்கோலி கேட்கிறது.

**யுதிஷ்:** தம்பி பீமா! இது வாசுதேவ கிருஷ்ணனின் போர் முழக்கமல்லவா? தொடர்ந்து அர்ச்சுனனின் காண்டீபத்தின் நாண் ஒலி கேட்க வேண்டுமே! அர்ச்சுனன் உயிரிழந்து விட்டமையினால் கிருஷ்ணன் கோபமுற்று தானே போர் புரிய ஆயத்தமாகிவிட்டானா? பீமா! ஓடிப்போய் என்னவென்று பார்த்து வாதம்பி!

**பீமன்:** மன்னிக்க வேண்டும் அண்ணா! அர்ச்சுனனுடைய உயிரைவிட தங்கள் பாதுகாப்பே பிரதானமானது!

**யுதிஷ்:** சாத்திகி! நீ படுகாயமுற்றிருக்கிறாய் என்பதனை அறிவேன்! இருப்பினும் அர்ச்சுனனின் உதவிக்கு உன்னால் போக முடியுமா என்று கேட்க வேண்டியுள்ளதே!

**சகாதேவன்:** வாசுதேவன் சின்ன அண்ணனுடன் இருக்கும் போது வீண் கவலை வேண்டாம் அண்ணா?

**யுதிஷ்:** எவ்வாறிருப்பினும் சாத்திகி அங்கு போய்ப்பார்ப்பதனையே விரும்புகிறேன் தம்பி!

**சாத்:** மகாராஜா! தங்கள் விருப்பத்தை தங்கள் ஆணையாக ஏற்கிறேன். இருப்பினும் அர்ச்சுனன் எனக்குக் கட்டளையிட்டார் -எது நேரினும் தங்களை விட்டு எங்கும் செல்லலாகாது என்று! மாவீரர் பீமன் கூறியது போல் அர்ச்சனனைவிட தங்களுடைய பாதுகாப்பே பிரதானமானது. மேலும் வாசுதேவன் துணையுடன் இருக்கும் அர்ச்சுனனுக்கு எத்தீங்கும் நேரப்போவதில்லை என்பது என் அபிப்பிராயம்.

**யுதிஷ்:** இருந்தும் நீர் அர்ச்சுனனின் உதவிக்குப் போவதனையே நான் விரும்புகிறேன்.

சாத்திகி புறப்படுகிறான். கவுரவர்களால் ஏவப்பட்ட ஒற்றன் ஒருவன் இவற்றைக் கவனித்து விட்டு துரோணரிடம் கூறுகிறான்.

**துரோ:** என்ன செய்தி கொண்டு வந்திருக்கிறாய்?

**ஒற்றன்:** சாத்திகி படையுடன் அர்ச்சுனனின் உதவிக்குப் போகிறான் குருபெருமானே!

***

**யுதிஷ்:** இறைவா! அர்ச்சுனனின் காண்டீபத்தின் நாணொலியை என் காதுகள் கேட்க வழி செய்ய மாட்டாயா?

**பீமன்:** பதட்டமடைய வேண்டாம் அண்ணா! வாசுதேவனுடன் அர்ச்சனன் இருக்கும் போது பயம் எதற்கு?

**யுதிஷ்:** எவ்வாறாயினும் காண்டீப நாணொலி கேட்கவில்லையே! சாத்திகியும் திரும்பவில்லை. தம்பி பீமா! நீயாவது அர்ச்சுனன் இருக்குமிடம் போய்ப் பார்த்து வா தம்பி!

**பீமன்:** ஆனால் அண்ணா.....!

**யுதிஷ்:** உனது அண்ணனினதும் அரசனதும் கட்டளை......!

**பீமன்:** ஆகட்டும் அண்ணா! பாஞ்சாலத்தின் அரசரே! ஆச்சாரியார் அண்ணனைக் கைது செய்யத் திட்டமிட்டுள்ளார். அண்ணனோ அர்ச்சுனனின் உதவிக்குப் போகும்படி எனக்குக் கட்டளை இடுகிறார். ஆகவே அண்ணாவின் முழுப் பாதுகாப்பும் தங்களைச் சார்ந்ததே!

**நகுலன்:** கவலையை விடுங்கள் பீமண்ணா! மூத்தண்ணனை ஆச்சாரியார் கைது செய்வதற்கு முன்னர் எங்களைக் கொன்றாக வேண்டும்!

பீமன் முன்னேறுகிறான். இதனைக் கண்ட துரோணர் தன் அணியைச் சேர்ந்த ஒரு வீரனை அணுகுகிறார்.

**துரோ:** வீரரே! அர்ச்சுனனுக்கு உதவ பீமன் புறப்பட்டுச் செல்வது எமக்கு நல்லதல்ல! நான் யுதிஷ்டிரனை கவனிக்கிறேன்; நீர் பீமனைத் தடுத்து நிறுத்தும்!

**வீரன்:** அப்படியே செய்கிறேன் ஆச்சாரியார் அவர்களே! தேரோட்டியே பீமனை நோக்கி இரதத்தைச் செலுத்து! பீமா! சாதாரண வீரர்களுடன் மோதுவதை விடுத்து என்னுடன் மோதவா!

**பீமன்:** வேகமாக ஓடும் நதியின் குறுக்கே எதுவந்தாலும் அது முட்டி மோதி உறுட்டப்பட்டுவிடும்! ஓ வீரனே! உனக்கு விருப்பமான ஆயுதத்தை ஏந்திப் போரிட வா!

வீரன் கதாயுதத்தை எடுக்க பீமனும் கதாயுதத்தினை ஏந்திப் போரிட்டு வீரனை நிராயுதபாணிஆக்கி விடுகிறான்.

**பீமன்:** மற்றுமோர் ஆயுதத்தை எடு..... இல்லையேல் இரதத்திலேறி ஓடித் தப்பிவிடு!

பீமன் தேரிலேறிப்புறப்படுகிறான்.

**துரோ:** குந்தி மைந்தன் பீமனே! எங்கே போகிறாய்? என்னை வெற்றி கொண்ட பின்னரே நீ முன்னேற முடியும்! அர்ச்சுனன் என்னிடம் உத்தரவு பெற்றபின்தான் போனான். ஆனால் உன்னை நான் போக விடமாட்டேன்!

**பீமன்:** அர்ச்சுனன் தன் அபிமான குருவுக்குத் தீங்கு விளைவிக்கலாகாதென்ற எண்ணத்துடன்தான் தங்களைக் கொல்லாமல் விட்டுச் சென்றான். தாங்கள் என் பாதையை இடைமறித்தால் தங்களை என் குருநாதர் என்று கருதாமல் எதிரிதரப்பு படைத்தளபதி என்றுதான் கணிப்பேன். ஆகவே, தங்களைத் தாக்குவதே இப்பொழுது என் கடமை!

★ **பீமன் தனது கதாதத்தை வீச அது துரோணரின் தேரை உடைத்து அவரைக்கீழே வீழ்த்துகிறது**

★ **இதேவேளை கவுரவப் படைகளை கொன்று குவித்த வண்ணம் ஜயத்ரதனை நோக்கி முன்னேறுகிறான் அர்ச்சுனன்.**

★ **துரோணரின் பல தேர்களை பீமன் உடைத்தெறிகிறான்.**


—காட்சி மாற்றம்—

குருச்சேத்திரம்-உத்தரையின் கூடாரத்தில் திரௌபதி.

**திரௌ:** மகளே! சூரியதேவனிடம் வேண்டிக் கொள்! ஏழு கோழைகள் சேர்ந்து உன்னை விதவைக் கோலம் பூண வைப்பதற்குக் காரணமாயிருந்த ஜயத்ரதனின் உயிர் பறிக்கப்படும்வரை அஸ்தமிக்கக்கூடாதென சூரியதேவனிடம் மன்றாட்டமாய்க் கேள் மகளே! பழிதீர்க்கப்படுமுன்னர் கதிரவன் மறைந்தால் குருச்சேத்திரப் போர் முனையில் இதுவரை மாண்டு மறைந்த பல்லாயிரக்கணக்கான வீரர்களுடன் சேர்ந்து தர்மநியாயங்களும் ஒழிந்து விடும் என்பதனை அத்தேவனிடம் கூறு!

உத்தரை சூரியனை வணங்குகிறாள்,

**உத்த:** சூரியதேவா! என் கணவர் ஏழு கோழைகளால் கொடூரமாகக் கொலை செய்யப்படுவதை நேரடியாகப் பார்த்தாயலல்வா? அப்போ பழிக்குப் பழி



தீர்க்க ஏன் உன் வேகத்தை இன்று குறைக்கலாகாது?

**திரௌ:** தொடர்ந்து கேள் மகளே! உன்னைப் போன்ற அபலையின் குரலை அவனால் எவ்வாறு புறக்கணிக்க முடியும் என்று பார்ப்போம்!

உத்தரை விம்மி விம்மி அழுகிறாள்.

—காட்சி மாற்றம்—

அஸ்தினாபுரம்-திருதராட்டிரரும் சஞ்சயனும்.

**திருத:** சஞ்சயா! சூரியன் அஸ்தமிக்கத் தாமதமேன்.....?

**சஞ்ச:** போர்க்களக்காட்சிகளைக் காண கதிரவனுக்கு ஆசைவந்துவிட்டதாக்கும்! துரோணாச்சாரியாரின் எட்டுத் தேர்களை பீமன் உடைத்தெறிந்து விட்டான் மகாராஜா!

**திருத:** தன்னுடைய குருவையே இவ்வாறு அவமதிப்பது பீமனுக்கு அழகல்லவே சஞ்சயா?

**சஞ்ச:** இத்தருணத்தில் அவர்கள் குரு-சீடரல்ல; எதிரிகள்! அதோ.....! ஆச்சாரியாரின் ஆயுதங்களைக் களைந்துவிட்டு அவருடைய உடைந்து கிடக்கும் இரதங்களுடன் நிறுத்திவிட்டு பீமன் முன்னேறுகிறான்.

□□

பீமனின் பாதையில் விகர்ணன் குறுக்கிடுகிறான்.

**விகர்:** பீமண்ணா! நில்லுங்கள்!

**பீமன்:** தம்பி! என் பாதையில் குறுக்கிடாதே! உனது மரணம் எனக்கு மகிழ்ச்சியை அளிக்காது! ஏனென்றால் தர்ம நியாயங்கள் தெரிந்தவன் - உன் சகோதரர்களில் நீ ஒருத்தன் தான்! துரியோதனனுடைய விபரீதப் போக்கினால் என் கைகளாலேயே உனது உடன்பிறப்புக்கள் இருபது பேரைக் கொன்று விட்டேன். தம்பி விலகி நில்லடா.....!

**விகர்:** பீமண்ணா! இன்று தங்கள் விருப்பப்படி அமைய என்னால் முடியாதிருக்கிறதே!

**பீமன்:** தம்பி! என்னுடன் பொருதி உன்னால் வெல்ல முடியாதென்பது உனக்குத் தெரியுமல்லவா?

**விகர்:** நன்றாகத் தெரியுமண்ணா! அஸ்தினாபுரமே இப்போரில் வெற்றிகாண முடியாதென்ற உண்மையும் தெரியும்! ஆனால் இன்று என்னுடன் போரிட்டு வெல்லாமல் தங்களை எம் அணிக்குள் அனுமதிக்க மாட்டேன். அண்ணன் துரியோதனனுக்கு நம்பிக்கைத் துரோகியாக முடியாது. ஆகவே, இதோ சாவதற்கு தயாராக நிற்கிறேன்.

**பீமன்:** தம்பி விகர்ணா! அன்று சூதாட்ட மண்டபத்தில் உன் அண்ணன் துரியோதனனுக்கு எதிராக நீ குரல் கொடுத்ததை நான் மறக்கவில்லையடா? தயவு செய்து வழிவிடு.

**விகர்:** அன்று அது என்கடமையாக இருந்தது! இன்று இதுதான் என் கடமைக்குரிய நிலைப்பாடு!

**பீமன்:** சரி! உனது கடமையை நீ நிறைவேற்று! எனது கடமையை நான் செய்கிறேன்!

★ **விகர்ணனுக்கும் பீமனுக்குமிடையில் காதாயுதப்போர் நடந்து பின்னர் மல்யுத்தமும் தொடர்கிறது. விகார்ணனை வீழ்த்துகிறான் பீமன்.**

★ மறுபுறம் கவுரவச் சேனை வீரர்கள் பலரை வீழ்த்திய அர்ச்சுனன் முன்னேறுகிறான்.

★ பீமனின் பாதையில் கர்ணன் குறுக்கிடுகிறான்.

**கர்ண:** எங்கே செல்கிறாய் பீமா? சற்று நில்! நீ சிறந்த கதாயுதப் போர் வீரன் தானே! உன் சகோதரர்கள் இருபத்தொருவரைக் கொன்றுவிட்டாயாமே! எங்கே உன் பராக்கிரமத்தை நான் பார்க்க வேண்டாமா?

★ **கவுரவ சபையில் திரௌபதி துச்சாதனனால் இழுத்து வரப்பட்டிருக்கும் போது, கர்ணன் திரௌபதியை தாசி என்று கூறிய சம்பவம் நினைவுக்கு வருகிறது பீமனுக்கு.**

★ **கவுரவச் சேனையைத் தொடர்ந்து நிர்மூலமாக்குகிறான் அர்ச்சுனன். சாத்திகியும் தொடர்ந்து போரிடுகிறான்.**

★ **பீமனுக்கும் கர்ணனுக்குமிடையில் முதலில் கதாயுதப் போர் நடக்கிறது. கர்ணனின் கதாயுதம் கை நழுவுகிறது. வாட்போர் தொடங்குகிறது.**

★ **சாத்திகி கவுரவ வீரனிடம் தோற்கும் கட்டம் வரும் வேளை இடையில் புகுந்த அர்ச்சுனன் அந்த வீரனின் கையை வெட்டி வீழ்த்துகிறான்.**

**வீரன்:** ஓ குந்தி மைந்தனே! பின்புறமிருந்து தாக்கும் பேடித்தனத்தை யாரிடம் கற்றாய்? துரோணாச்சாரியாரிடமா? கிருபாச்சாரியாரிடமா? அல்லது தேரோட்டும் வாசுதேவனிடமா?

**அர்ச்:** இக் கேள்விகளுக்கு இப்போது எதுவித அவசியமுமில்லை வீரனே! பல பேர் சேர்ந்து ஒரு சிறுவனைத்தாக்கி அவன் சுயநினைவிழந்த நிலையில் கொன்றீர்களே! அபிமன்யுவின் சடலத்தைச் சுற்றிக் கூத்தாடிக் களித்தீர்களே! இதெல்லாம் கோழைத்தனமில்லையா?

வீரன் பேசாது நிற்கிறான். இதேகால கட்டத்தில் தனது ஈட்டியால் பீமனை நிராயுதபாணியாக்கிவிட்டு அவனைக் கொல்ல கர்ணன் முன்னேறும்போது, தனது தாயார் குந்தி தன்னிடம் வந்திருந்த போது அவருக்குக் கொடுத்த வாக்கு நினைவுக்கு வருகிறது.

—காட்சி பின்னோக்கு—

**கர்ண:** அம்மா! தாங்கள் என்னிடம் விடுத்த வேண்டுகோளை நிறைவேற்ற முடியாத நிலையிலுள்ள என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்! அதே வேளை, தங்களை வெறுங்கையுடன் அனுப்பி வைக்கவும் முடியாது! தங்களுக்கு ஐந்து புதல்வர்கள் என்பது உலகறிந்ததே! நான் தங்கள் மகன் என்பது சூரிய தேவனுக்கும் தங்களுக்கும் எனக்கும் மட்டுமே தெரிந்தொன்று! எப்படியும் இந்த யுத்த முடிவில் தங்களுடைய ஐந்து புதல்வர்களும் நீடித்திருப்பார்கள்! ஏனெனில் அர்ச்சுனனுக்கும் எனக்குமிடையில் இடம்பெறும் போரில் யாராவது ஒருவர் மட்டும்தான் உயிர்வாழ முடியும்தாயே! ஆகவே எப்படிப் பார்த்தாலும் தங்களுக்கு ஐந்து புதல்வர்கள் தான் தாயே!

—பின்னோக்கு முடிகிறது—

இந்த நினைவுடன் பீமனைக் கொல்வதற்கு ஏந்திய ஈட்டியை பின்வாங்கியவனாக கர்ணன் திரும்புகிறான்.

—காட்சி மாற்றம்—

திருதராட்டிரர் சஞ்சயனுடன் ......

**திருத:** சஞ்சயா! இன்று ஒரே நாளில் மட்டும் எனது இருபத்தொரு புத்திரர்கள் கொல்லப்படுவதைப் பார்த்த பின்னரும் அந்த சூரியனுக்கு மறைவதற்கு இன்னும் மனம்வரவில்லையா? எனது ஏனைய மக்களும் மரணமடையும்வரை நின்று பாரத்து விட்டு மறைய எண்ணியிருக்கிறானா?

**சஞ்ச:** மகாராஜா! சூரியன் மறைவதற்கு ஆயத்தமாகிறான்!

**திருத:** காந்தாரியிடம் போய் அவளுடைய பிள்ளைகள் ஒவ்வொருவராக மடிந்து எண்ணிக்கையும் குறைகிறது என்பதனை யார் சொல்லப் போகிறார்களோ தெரியாது! சஞ்சயா! பீமனும் துரியோதனனும் எவ்வளவு தூரத்துக்கப்பால் நற்கிறார்கள் என்பதைப் பார்த்துக்கூறு!

**சஞ்ச:** பீமனும் கர்ணனும் இப்பொழுது போரிட்டு முடித்து வெவ்வேறு திக்கில் செல்கிறார்கள் மகாராஜா!

—காட்சி மாற்றம்—

குருச்சேத்திரம்-கவுரவர் அணி.

**துரி:** துச்சாதனா! மிக மிக முக்கியமான வேளை இது! சிந்து மன்னன் ஜயத்ரதனை அர்ச்சுனன் பொழுதுசாய்வதற்குள் கொல்லாவிட்டால் இன்றிரவு அர்ச்சுனன் சபதப்படி அவன் தீ வளர்த்து அதனுள் பிரவேசிப்பான்! அர்ச்சுனன் இல்லையானால் யுத்தமே இல்லை. வெற்றி நமதே! தம்பி போய் ஜயத்ரதனைப் பாதுகாத்து நில்!

துச்சாதனன் போனதும் சூரியதேவனை துரியோதனன் பிரார்த்திக்கிறான்.

**துரி:** சூரியதேவா! இன்றாவது விரைவில் மறைந்து விட மாட்டாயா?

★ **கவுரவ வீரர்கள் புடைசூழ ஜயத்ரதன் தனது தேரில் இருக்கிறான். அர்ச்சுனன், வளைந்து நிற்கும் வீரர்களின் அணிகளைக் கடந்து ஜயத்ரதனை அணுகுகிறான். ஜயத்ரதன் பயந்து நடுங்குகிறான். அர்ச்சுனன்-அஸ்வத்தாமன், கிருபாச்சாரியார் ஆகியோரை தனி ஆளாக வெற்றி கொண்டு முன்னேறுகிறான். துரியோதனனும் எதிர்வருகிறான்.**

★ **கிருஷ்ணர் கதிரவனைப் பார்க்கிறார். தனது வலது கையை உயர்த்துகிறார். திரண்ட கரிய மேகம் சூரியனை மறைக்கிறது. சூரியன் அஸ்தமித்து இருள் சூழ்ந்து விட்டது போல் தோன்றுகிறது.**

கவுரவர்கள் குதூகலத்துடன் துள்ளுகின்றனர்; உண்மையை உணராத அர்ச்சுனன் திகைக்கிறான்.

**துரி:** அர்ச்சுனா! எங்கே உன் சபதத்தின் படி தீக்குளிக்கத்தயாரா?

ஜயத்ரதன் தனது அரண்களைக்கடந்து மகிழ்ச்சியாக முன்வருகிறான்.

கிருஷ்ணர் புன்சிரிப்புடன் பார்க்கிறார்.

**ஜயத்:** ஏ அர்ச்சுனா! நீ எப்போது தீக்குளித்து மடியப்போகிறாய்? வில்லுக்கு வீரனே ஏன் பேசாது நிற்கிறாய்? (சிரிக்கிறான்)

அர்ச்சுனன் தனது அம்புகளை அவமானத்தினால் முறிக்கிறான்.

ஜயத்ரதன் மிக நெருக்கமாக வந்ததும் கிருஷ்ணர் தன் கையை மேலே உயர்த்துகிறார். சூரியனை மூடி இருந்த இருள் விலகி ஒளி பரவுகிறது.

கவுரவர்கள் திகைப்புடன் திணறுகிறார்கள். பாதுகாப்பு அற்றவனாக ஜயத்ரதன் நிற்கிறான்.

**கிருஷ்:** பார்த்தா! பகலவன் இன்னும் மறையவில்லை! அதோ பார் அங்கே சூரியன்..! உன் எதிரே ஜயத்ரதன்..!

**அர்ச்:** ஜயத்ரதா! இன்னும் சூரியன் அஸ்தமிக்கவில்லையடா!

ஜயத்ரதன் ஓடுகிறான். அர்ச்சுன் காண்டீபத்தில் பாணத்தைத் தொடுக்கிறான்.

**அர்ச்:** ஓடுகிறாயா? ஓடு..! என் மகன் அபிமன்யுவை அனியாயமாகக் கொலை செய்யக் காரணமானவனே! ஓடு மட்டும் ஓடு!

அர்ச்சுனன் பாணத்தை விடுகிறான். ஜயத்ரதன் தலை துண்டிக்கப்பட்டு கானகத்தில் தவம் செய்யும் அவன் தந்தையின் மடியில் விழுகிறது. அதிர்ச்சியுற்றவராக மகனின் தலையை தட்டிவிட முற்சிக்கையில் அவருடைய தலையும் சுக்குநூறாக வெடித்துச் சிதறுகிறது.

**பின்னணிப் பாடல்:**

சிந்துமன்னன் சிரசதனை சீவுகின்ற எவன் சிரசும்
சிதறுவது திண்ணமென சாற்று மொழிதான் தெரிந்தும்
பார்த்தனவன் தொடுத்தபாணம் பகைமைதனை முடித்துமங்கே
பாதகரிருவர்தலை பறித்துப் பழி தீர்த்ததுவே!

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.

அருள் ஜுவலர்ஸ்



வண்ண நகைகளின் கூடம்
எனனாம் முழுதும் அதை நாடி

436331

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


# பறக்கும் பால் சுறா






Kala JEWELLERY

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு

433686

61 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு


படத்தில் இருப்பதும் 'கிளைடர்' விமான ரகங்களில் ஒன்றுதான். இதில் இருவர் பயணம் செய்ய முடியும். சற்று விலை அதிகம். வெளிநாடுகளில் கலை விழாக்களில் வேடிக்கை காட்டவும் பயன்படுத்தப்படுகின்றன. விமானத்தின் முகத்தை சுறாபோல செய்திருப்பது பயமுறுத்தவல்ல, பார்வையாளர்களை சிரிக்கவும், வியக்கவும் வைக்கத்தான். போர் விமானங்களோடு ஒப்பிடும்போது எந்தவொரு மென்ரக விமானமும் பரம சாதுதான். சாதுவையும் புலிகள் சாமர்த்தியமாக போருக்கு பயன்படுத்தலாம் என்பதுதான் நம்நாட்டில் படைகளுக்கு உள்ள அச்சுறுத்தல்.

# முகங்கள்



அடிக்கடி பத்திரிகைகளில் முகம் காட்டும் பிரபலங்களின் முகங்கள் நம் மனதில் நிற்கிறது அல்லவா. அதே முகங்கள் சித்த சுவாதீனமற்றோர் மனதில் எப்படி பதிந்திருக்கும்?

இஸ்ரேலில் உள்ள ஒரு நிறுவனம் சித்த சுவாதீனமற்றோரை வெண் களியினால் உருவங்கள் செய்ய பயிற்சி கொடுத்தது. பின்னர் சில பிரபலங்களின் முகங்களை உருவாக்குமாறு கூறியது. அவர்கள் உருவாக்கிய முகங்களில் இருந்த தையாண்டித்தனம் படுஜோராய் அமைந்துவிட்டது. படத்தில் சுருட்டு, கண்ணாடி சகிதம் இருப்பவர் வயிலின் மேதை 'இசாக் ஸ்ரோன்'. சித்த சுவாதீன மற்றோர் உருவாக்கிய தனது முகத்தைப் பார்த்த மேதை வாய்விட்டுச் சிரித்தாராம். இதுதான் முகமூடி இல்லாத முகமோ? நாம் எல்லாம் நமக்கு ஒரேயொரு முகம் என்று நினைத்துக் கொண்டிருந்தால் தப்பு.

# மரண விளையாட்டு



ஒருவர்மீது கோபம் வந்தால் 'விளையாடாதே' என்று கூறுவதுண்டல்லவா. இஸ்ரேலியர்களை நிஜமான விளையாட்டுக்களில் ஈடுபடவும் பாலஸ்தீன போராளிகள் அனுமதிப்பதில்லை. 1972 ஜெர்மன் மூனிச் நகரில் நடந்த ஒலிம்பிக் போட்டிகளின் போது இஸ்ரேலும் சென்றது. 'விளையாடவா பார்க்கிறாய்?' ஒலிம்பிக் திடலில் பாலஸ்தீனியக் கெரில்லாக்களின் துப்பாக்கிகள் முழங்கின. பார்வையாளர் இருவர் பலியானார்கள். 9 பேர் பணயக்கைதிகளாயினர். பணயக்கைதிகளை மீட்க மூனிச் விமான நிலையத்தில் ஜெர்மன் அதிரடிப்படை செயலில் இறங்கியது.

விமான நிலைய பின்புறமாக அதிரடிப்படை பூனைபோல் பதுங்கி நகர்வதையே படத்தில் காண்கிறீர்கள். அதிரடிப்படையின் திடீர் தாக்குதலில் 5 பாலஸ்தீன தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். சிகப்பு உடையோடு ஏறுகிறார் பாருங்கள் ஜெர்மன் வீரர் அவரும் மோதலில் பலியானார். எதிர்பாராத நேரத்தில் எதிர்பாராத திசையில் இருந்து விழுவதுதான் அதிரடி. படத்தைப் பாருங்கள் அதிரடிப்படை வீரர்களுக்கு எத்தனை கஷ்டம்.

# காருக்கும் சோகம்



→ காரில் புறப்பட்டார்கள், நடுவழியில் மரணம் பூகம்ப உருவில் மறித்தது. சுமந்து வந்தவர்களை தொலைத்துவிட்டு அப்பளமாய் நொருங்கிப் போய் அழுது வடியும் கார். இது ஜப்பான் பூகம்பத்தின் பின் கட்டெடுத்த படங்களில் ஒன்று. விதியை மதியால் வெல்ல முடியும் என்பார்கள். இயற்கையின் அதிரடியை எதனால் வெல்ல முடியும். நல்ல வேளை, நம் நாட்டில் பெரிய பூகம்பம் எதுவும் வரவில்லை என்று நினைக்கிறீர்களா? இருக்கவே இருக்கிறது யுத்தம். பூகம்பம் எப்போதாவது தான் வரும், ஆனால் யுத்தம்! அதுவும் நம்நாட்டில் ....? ஆக, மொத்தத்தில் பரவாயில்லையே என்று கொஞ்சமாய் திருப்திப்படவும் நமக்கு ஒன்றுமேயில்லை.

# மணமகன் தேவை



வாரமலர்
தினமுரசு

தலைப்பை ஒரு முறை நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள் இந்த நூற்றாண்டின் இறுதியில் மணமகன் தேவை விளம்பரத்திற்கு அவசியமே இருக்காது.

அகில உலக ரீதியில் ஆண்களுக்கு அதிர்ச்சியான, அனுகூலமான செய்தி. இந்த நூற்றாண்டின் இறுதியில் தங்களுக்கு ஒரு துணைதேடி முடியாமல் ஒவ்வொரு ஆணும் அதிகாரமான சோகப்படவேண்டியிருக்கும்.

ஆசிய நாடுகளில் பெண்களின் எண்ணிக்கை குறைந்து வருகிறது. சீனா விலமட்டும் இந்த நூற்றாண்டின் இறுதியில் 7 கோடி ஆண்கள் ஜோடிப் பொருத்தம் இல்லாமல் தவிக்கப்போகிறார்கள். இலங்கை, இந்தியா போன்ற நாடுகளிலும் பெண் பற்றாக்குறை அதிகரிக்கும். எல்லாவற்றிற்கும் யார் காரணம்? கடவுளா? விதியா? இரண்டுமல்ல காரணம் மதி. பெண் குழந்தைகளை கருவிலேயே அழிப்பது, பெண் பிறப்பதை விரும்பாமை போன்றவையும் முக்கிய காரணம். பெண் விடுதலைக்கு குரல் கொடுத்த சீனாவில் கூட நிலைமை அப்படியிருந்தால் நம் நாட்டில் கேட்கவே வேண்டாம். இந்தத் தலைமுறை பெண் குழந்தைகளை வெறுத்தமையால் அதற்குரிய தண்டனையை அடுத்த தலைமுறை பெறப்போகிறது.

காட்டூன் சித்திரப் படங்களில் பொம்மைகளைக் காட்டினார்கள்.

பின்னர் குட்டிக் குட்டிக் கற்பனைக் கதைகளைக் காட்டினார்கள். இப்போது காட்டூன் சித்திர தொலைக்காட்சி படங்களில் நிறைய நவீன முன்னேற்றம். முதன் முதலில் காட்டூன் சித்திரம் மூலம் சொல்லப்படும் புராணக்கதை என்ற பெருமை இராமாயணத்திற்கு கிடைத்துள்ளது. நவீன உத்திகளில் புராணக்கதை. அதில் ஒரு கட்டம்தான் இது. ↓

தருவது வியோ

# நவீனத்தில் புராணம்

